விலை ரூபா: 20.00
விசேட பிரதி
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது
Valampurii
சங்கு 13 வள்ளுவர் ஆண்டு 2043 புரட்டாதி 03 புதன்கிழமை (19.09.2012) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 275

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# அரசுடன் மு.கா இணைவு;

# முதலமைச்சரானார் மஜீத்

## அலரி மாளிகையில் பதவிப் பிரமாணம்

(கொழும்பு), ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியுடன் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் இணைந்து கொண்டதை அடுத்து கிழக்கில் அரசின் ஆட்சி ஏற்பட்டுள்ளது.

இதனையடுத்து கிழக்கு மாகாண முதலமைச்சராக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியைச் சேர்ந்த நஜீப் ஏ.மஜீத் நேற்று ஜனாதிபதி முன்னிலையில் பதவிப் பிரமாணம் செய்து கொண்டார். (19ஆம் பக்கம் பார்க்க)



## அமெ. தூதுவர் யாழ். விஜயம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை - மாலைதீவு ஆகிய நாடுகளுக்கான புதிய அமெரிக்கத் தூதுவர் மைக்கேல் ஜே.சிசென் தலைமையிலான அமெரிக்கப் பிரதிநிதிகள் குழுவினர் நேற்று யாழ் குடாநாட்டிற்கு விஜயம் மேற்கொண்டிருந்தனர்.

இந்த விஜயத்தின்போது யாழ்.பலாலி படைத்தலைமையகத்தில் யாழ்.மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மகிந்த ஹத்துருசிங்கவினை சந்தித்து குடாநாட்டின் பாதுகாப்பு நிலைவரங்கள் (20ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.நா. குழுவினர் முல்லைக்கு விஜயம்

(புதுக்குடியிருப்பு)

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலக அதிகாரிகள் நேற்று முல்லைத்தீவுக்கு விஜயம் ஒன்றினை மேற்கொண்டார்கள்.

காலைவேளை புதுக்குடியிருப்பு மேற்கு கிராம சேவகர் பிரிவில் அமைந்துள்ள மீள்குடியேற்றப் பகுதி, வேணாவில் கண்ணிவெடி அகற்றும் பகுதி, முள்ளிவாய்க்கால் பகுதியினையும் அவர்கள் பார்வையிட்டுச் சென்றார்கள்.

முல்லைத்தீவு (20ஆம் பக்கம் பார்க்க)

## மு.காங்கிரஸ் மீது சம்பந்தன் குற்றச்சாட்டு

அரசாங்கத்துடன் இணைந்தது குறித்து முஸ்லிம் காங்கிரஸ் எந்தவொரு தகவலையும் தமக்குத் தெரிவிக்கவில்லை என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் குற்றம் சுமத்தியுள்ளார்.

இது குறித்துஅவர் மேலும் தெரிவிக்கையில், நாங்கள் தேர்தலின்போதும், தேர்தலின் பின்பும் கூட்டமைப்பும் முஸ்லிம் காங்கிரஸும் ஒன்றாக ஆட்சி அமைக்க வேண்டும் என்று கூறி வந்தோம். முஸ்லிம் ஒருவர் முதலமைச்சராக வரலாம் எனவும் கூறியிருந்தோம்.

எனினும் அரசாங்கத்துடன் சேரப்போவதாக அவர்கள் எந்தவொரு தகவலும் தெரிவிக்கவில்லை. புதிய முதலமைச் (20ஆம் பக்கம் பார்க்க)

## அழைத்தார் ஜனாதிபதி சந்தித்தார் சம்பந்தன்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனுக்கும், ஜனாதிபதி மகிந்த ராஜ பக்ஷவுக்கும் இடையில் நேற்று காலை விசேட சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற இந்த விசேட சந்திப்பில் கிழக்கு மாகாணத்தில் ஆட்சி அமைப்பது குறித்து கலந்துரையாடப்பட்டதாக கொழும்பு தகவல்கள் தெரிவிக்கின்றன.

திருகோணமலை மற்றும் அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர்களாக தமிழர்களை நியமனம் செய்வது பற்றி ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா. சம்பந்தன் பிரஸ்தாபித்தார்.

ஜனாதிபதி செயலகம் நேற்று முன்தினம் விடுத்த அழைப்பின் பேரில் ஜனாதிபதிக்கும் இரா.சம்பந்தனுக்கும் இடையில் நேற்று செவ்வாய்க்கிழமை காலை அலரிமாளிகையில் இடம்பெற்ற சந்திப்பின்போதே சம்பந்தன் மேற்கூறிய கோரிக்கையை முன்வைத்தார்.

இச்சந்திப்பில் அமைச்சர்களான மைத்திரி பால சிறிசேன, ஜி.எல்.பீரிஸ் ஆகியோரும் பிரசன்னமாகி இருந்தனர்.

இதன்போது கிழக்கு மாகாண சபையில் எதிர்க் கட்சியாக (20ஆம் பக்கம் பார்க்க)


## தீக்குளித்த இளைஞன் உயிரிழப்பு

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் இந்திய வருகையைக் கண்டித்து நேற்றுமுன்தினம் சேலத்தில் தீக்குளித்த ஆட்டோ சாரதி விஜய்ராஜ் நேற்று செவ்வாய்க்கிழமை சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

சேலத்தைச் சேர்ந்த ஆட்டோ ஓட்டுநர் விஜய்ராஜ் தமிழின உணர்வாளர். தமிழ் இயக்கங்கள் நடத்துகின்ற அனைத்து கூட்டங்களுக்கும் தவறாமல் சென்று கலந்து கொள்வார்.

ராஜபக்ஷவின் இந்திய வருகைக்கு தமிழர்கள் கடுமையான எதிர்ப்பைத் தெரிவிக்க வலியுறுத்தி நேற்றுமுன்தினம் அதிகாலை தீக்குளித்தார்.

பின்னர் தீக்காயங்களுடன் அவர் சேலம் அரசு மருத்துவ (19ஆம் பக்கம் பார்க்க)



கிழக்கு மாகாண முதலமைச்சராக பதவிப் பிரமாணம் செய்து கொண்ட நஜீப் ஏ.மஜீத் துடன் முன்னாள் முதலமைச்சர் சந்திரகாந்தன் கைலாகு கொடுப்பதை படத்தில் காணலாம்.

## கரைத்துறைப்பற்றில் நாளை மீள்குடியமர்வு

(முல்லைத்தீவு)

யுத்தத்தால் இடம்பெயர்ந்து வவுனியா செட்டிகுள நலன்புரி நிலையத்தில் வசித்து வரும் கரைத்துறைப்பற்று பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட கேப்பாப்புலவு கிராமத்தைச் சேர்ந்த 49 குடும்பங்கள் நாளை 20ஆம் திகதி வியாழக்கிழமை மீள்குடியேற்றம் செய்யப்படவுள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் தெரிவித்துள்ளார்.

இதில் கதிர்காமர் நலன்புரி நிலையத்தில் உள்ள 14 குடும்பங்களைச் சேர்ந்த 48 உறுப்பினர்களும், ஆனந்தகுமாரசுவாமி நலன்புரி நிலையத்தில் உள்ள 35 குடும்பங்களைச் சேர்ந்த 129 உறுப்பினர்களுமே முல்லைத் தீவு மாவட்ட செயலகத்தின் ஏற்பாட்டில் மீள்குடியேற்றம் செய்யப்படவுள்ளனர்.

மக்கள் வாகனங்கள் மூலமும், அவர்களது உடைமைகள் (19ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதியின் ஆலோசகரானார் சந்திரகாந்தன்

கிழக்கு மாகாண விவகாரங்களுக்கான ஜனாதிபதியின் ஆலோசகராக சிவநேசத்துரை சந்திரகாந்தன் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதற்கான நியமனக் கடிதம் அவரிடம் நேற்று அலரிமாளிகையில் வைத்து கையளிக்கப்பட்டது.

கிழக்கு மாகாண முதலமைச்சராக நஜீப் ஏ.மஜீத் சத்தியப்பிரமாணம் செய்த நிகழ்வின்போது இக்கடிதம் வழங்கப்பட்டது.

இதன்போது சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் செயலாளர் அமைச்சர் மைத்திரிபால சிறிசேன, அமைச்சர்களான சுசில் பிரேமஜயந்த, டலஸ் அழகப்பெரும, (19ஆம் பக்கம் பார்க்க)

## பயிலுநர் பட்டதாரிகளுக்கு மேலும் 6 மாத காலப் பயிற்சி

### சட்டமா அதிபரின் ஆலோசனைக்கு நடவடிக்கை

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் பயிலுநர்களாக இணைத்துக் கொள்ளப்பட்ட பட்டதாரிகளுக்கு நிரந்தர நியமனங்களை வழங்கும் நடவடிக்கைகளை பிற்போடவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக பொதுநிர்வாகம் மற்றும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு அறிவித் துள்ளது.

சட்டமா அதிபரின் ஆலோசனைக்கு அமைய இந்த நடவடிக்கை எடுக்கப்படுவதாக அமைச்சின் செயலாளர் பீ.பி.அபேகோன் தெரிவித்துள்ளார்.

பயிலுநர்களாக இணைத்துக் கொள்ளப்பட்ட பட்டதாரிகளுக்கு அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவை கொள்கைகளின் கீழ் நிரந்தர நியமனங்கள் வழங்கப்படவிருந்தன.

எனினும் சிலர் சட்ட நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர். இதன் காரணமாக சட்ட நடவடிக்கைகள் நிறைவடையும்வரை அவர்களை அரச சேவையில் இணைத்துக் கொள்ள வேண்டாம் என, (19ஆம் பக்கம் பார்க்க)

இன்று மட்டும்
பல்கலைக்கழக அனுமதியும் தொழில்வாய்ப்பும்
70% கட்டணக்கழிவு
வங்கிக்கடன் வசதி
25-50% புலமைப்பரிசில்கள்
பார்க்க, பக்கம் 20 >>>

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# ஏனைய பகுதிகளை விடவும் யாழில் இராணுவம் குறைவு

## யாழ். கட்டளைத் தளபதி தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணமானது இலங்கையின் ஒரு பகுதியாகும். எனினும் நாட்டின் ஏனைய சில மாவட்டங்களுடன் ஒப்பிடும்போது யாழ்ப்பாணத்தில் உள்ள இராணுவத்தின் எண்ணிக்கை குறைவானது என யாழ் இராணுவக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மகிந்த ஹத்துருசிங்க தெரிவித்தார்.

பொதுமக்களின் சொத்துக்களை இராணுவம் ஆக்கிரமிக்கவோ, சுவீகரிக்கவோ மாட்டாது என யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொண்ட ஐ.நா. மனித உரிமையாளர் அலுவலக அதிகாரிகளிடம் யாழ் பாதுகாப்புப் படைகளின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மகிந்த ஹத்துருசிங்க கூறியுள்ளார்.

யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொண்ட, ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் அலுவலகத்தின் ஆசிய பசுபிக், மத்திய கிழக்கு, வடஅமெரிக்க பிரிவுக்கான பொறுப்பாளர் ஹானி மெகாலி உட்பட ஐ.நா. அதிகாரிகள், மேஜர் ஜெனரல் மகிந்த ஹத்துருசிங்கவை நேற்று முன்தினம் திங்கட்கிழமை சந்தித்தனர்.

நாட்டின் மூன்றிலிரு பகுதி கரையோரப் பகுதி உட்பட நாட்டின் மூன்றிலொரு பகுதியை கைப்பற்ற முயன்ற பயங்கரவாதிகளுக்கு எதிராக போரிடுவதற்கு பெரும் எண்ணிக்கையானோர் இராணுவத்தில் சேர்க்கப்பட்டனர்.

யுத்தம் முடிந்து விட்டது என்பதற்காக, பயங்கரவாதத்திற்கு எதிராக அர்ப்பணிப்புடன் போராடிய சிப்பாய்களை வீட்டிற்கு அனுப்பி விட முடியாது. அவர்கள் நாட்டிற்குள் வைத்திருக்கப்பட வேண்டும்.

யாழ்ப்பாணமானது இலங்கையின் ஒரு பகுதி ஆகும். எனினும்நாட்டின் ஏனைய சில மாவட்டங்களுடன் ஒப்பிடும் போது யாழ்ப்பாணத்திலுள்ள துருப்புக்களின் எண்ணிக்கை குறைவாகும்.

ஆனால் அரசியல் காரணங்களுக்காக சில ஊடகங்கள் இந்த எண்ணிக்கையை மிகைப்படுத்துகின்றன என அவர் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் பற்றிய தகவல்கள், யுத்தம் மற்றும் தமிழீழ விடுதலைப் புலிகளினால் ஏற்பட்ட உயிர், சொத்து அழிவுகள் குறித்து மேஜர் ஜெனரல் மகிந்த ஹத்துருசிங்க விளக்கியதாக, பாதுகாப்புப் படைகளின் யாழ் தலைமையகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாம் பயங்கரவாதிகளுடனேயே போரிட்டோம். தமிழர்களுக்கு எதிராக போராடவில்லை. யுத்தத்தின் போது யாழ்ப்பாண மக்கள் அனுபவித்த துன்பங்களை நாம் கண்டோம். பயங்கரவாதத்தை வெற்றிகரமாகத் தோற்கடித்த பின்னர் அடிப்படைத் தேவைகளை நாம் இனம் கண்டதுடன் நலன்புரித் திட்டங்கள் பலவற்றை இராணுவம் ஆரம்பித்தது.

விடுதலைப் புலிகளின் முன்னாள் போராளிகளின் ஜீவனோபாய செயற்பாடுகள், ஆதரவற்ற குடும்பங்களுக்கான வீடமைப்பு, குறைந்த வருமானம் உடைய குடும்பங்களின் மாணவர்களுக்கு புலமைப்பரிசில் திட்டங்கள் ஆகியன அவற்றுள் சிலவாகும் என அவர் கூறினார்.

சிங்களவர்களும், தமிழர்களும் பல தலைமுறைகளாக சகோதரத்துவத்துடன் வாழ்கின்றனர். ஆனால், கர்வம் கொண்ட உயர்மட்ட தமிழர்கள் சிலர் தமிழர்களுக்கான தனிநாட்டைப் பெறுவதற்கு தமிழ் இளைஞர்களைத் தூண்டினர். பெரும்பாலான தமிழ்மக்கள் இதை விரும்பவில்லை.

ஆனால் விடுதலைப்புலிகளின் அச்சுறுத்தல்களால் சரணடைவதைத் தவிர அவர்களுக்கு வேறு வழியில்லை எனவும் மேஜர் ஜெனரல் மகிந்த ஹத்துருசிங்க தெரிவித்துள்ளார். (எ-11)


செல்லா சினிமா- யாழ்ப்பாணம்

இலங்கை இந்திய ஒரேதின வெளியீடு

ஜீவா, பூஜாஹெக்டே, நரேன் நடித்த



(C-941)

D.T.S

10.30, 2.30, 6.30, 9.30


## சர்வகட்சி ஆட்சி அமைத்தால் ஐ.தே.க ஆதரவளிக்கும்

கிழக்கில் சர்வகட்சி ஆட்சி அமைக்கப்பட்டால் அதற்கு ஆதரவளிக்கும் என ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

கிழக்கு மாகாண சபையில் எந்தவொரு கட்சியும் பெரும்பான்மை அதிகாரத்தைக் கைப்பற்றவில்லை. எனவே ஆட்சியை அமைப்பதில் தெளிவான அதிகாரம் யாருக்கும் கிடையாது.

சர்வகட்சி ஆட்சியொன்று தொடர்பில் அரசாங்கம் இணக்கம் தெரிவித்தால் அதற்கு நாம் ஆதரவளிக்கத் தயார் என திஸ்ஸ அத்தநாயக்க குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்ட போது அவர் இதனைத் தெரிவித்தார். (எ-11)

## நவுரு தீவுக்குச் செல்லாத 14 பேர் இலங்கைக்கு

அவுஸ்திரேலியாவின் பசுபிக் திட்டத்தில் நவுரு தீவுக்கு செல்ல விருப்பம் இல்லாத 14 இலங்கை அகதிகள் அங்கிருந்து மீண்டும் இலங்கைக்கு திரும்பவிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.


அரசாங்க பேச்சாளர் ஸ்கொட் மொரிசன் ஸ்கை நியூஸ் தொலைகாட்சிக்கு வழங்கிய செவ்வியில் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவுஸ்திரேலியாவில் உள்ள இலங்கை அகதிகள் கட்டம் கட்டமாக நவுரு தீவுக்கு மாற்றப்படுகின்றனர் எனினும் இந்தத் திட்டத்தில் விருப்பம் இல்லாத 14 இலங்கை அகதிகள் மீண்டும் இலங்கைக்கே திரும்பிச் செல்ல விருப்பம் வெளியிட்டுள்ளதாக மொரிசன் தெரிவித்துள்ளார்.

இதனை அவுஸ்திரேலிய உத்தியோக பூர்வ அதிகாரிகள் யாரும் உறுதிப் படுத்தவில்லை எனினும் இந்த தகவல் உண்மையானது என்று கிறிஸ்மஸ் தீவின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். (எ-11)

## தங்கரத வெள்ளோட்டம்

(யாழ்ப்பாணம்)



உடுவில் கிழக்கு கற்பகப் பிள்ளையார் திருக்கோயில் விநாயகர் சதுர்த்தியை முன்னிட்டு தங்க ரத வெள்ளோட்ட விழா இன்று புதன்கிழமை மாலை 4 மணிக்கு இடம் பெறவுள்ளது.

அதனைத் தொடர்ந்து ஸ்தபதி சிற்ப நுண்கலைச் செம்மல், சிற்பக் கலாபானு, விஸ்வபிரம் மஸ்ரீ கதிர்காமநாதன் கதிர்ரஞ்சன் குழுவினர்களை கௌரவிக்கும் நிகழ்வும் நடைபெறவுள்ளது.

தொடர்ந்து விநாயகர் தேரில் ஆரோகணித்து வீதிவலம் வரும் நிகழ்வும் நடைபெறவுள்ளது. (எ-11)


## ஆறு மாத காலத்தில் VISA ஒழுங்குகள்

CANADAவுக்கு குடும்பத்துடன் குடியேறுவதற்கான FAMILY VISA எம்மால் பெற்றுக் கொடுக்க முடியும்.



**தகைமைகள்**

இலங்கைப் பல்கலைக்கழகத்தில் இளமாணி, முதுமாணி பட்டம் பெற்றவர்கள், அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிலையங்கள் மூலமாக DIPLOMA பட்டம் பெற்றவர்கள் ஓராண்டு வேலை அனுபவத்துடன் செல்லமுடியும்.

**NEWZEALAND, AMERICA, LONDON STUDENT VISA**

NEWZEALAND:- (G.C.E. O/L, A/L) தகைமையுடன் மேற் படிப்புக்கு செல்லமுடியும். அங்கு மூன்று ஆண்டுகள் கல்வி கற்ற பின் அந்த நாட்டின் நிரந்தர குடியுரிமையை பெற்றுக் கொள்ளவும் அத்துடன் உங்கள் குடும்ப அங்கத்தவரையும் அழைத்துக் கொள்ள முடியும்.

**CYPRUS/ இத்தாலி**

சைபிரஸ் நாட்டில் உயர்கல்வியை கற்க செல்பவர்கள் அந்நாட்டில் கல்வியை முடித்துக் கொண்டு ஏதாவது ஒரு ஐரோப்பிய நாட்டில் குடியேறுவதற்கு ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படும். இத்தாலியில் Work Permit Visa மூலம் குறுகிய காலத்தில் பிரயாணம் மேற்கொள்ளமுடியும்.

**மத்திய கிழக்கு நாடுகளில் வேலைவாய்ப்பு**

மத்திய கிழக்கு நாடுகளான துபாய், சவுதி அரேபியா, ஓமான், டோகா, கட்டார், குவைத் போன்ற நாடுகளுக்கு ஒரு மாதத்தில் செல்லக் கூடிய ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படும்.

Seaman தொழில் வேலை செய்ய விரும்புபவர்கள் 6 மாத பயிற்சியின் பின் வேலையைப் பெற்றுக்கொள்வதற்குரிய ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படும்.

**BANK BALANCE / SPONCER**

வெளிநாடுகளில் கல்வி கற்க செல்பவர்களுக்கும்/ Tourist Visa மூலம் செல்பவர்களுக்கும் தேவையான Bank Balance/ Sponcer ஒழுங்குகள் எம் மூலம் செய்து கொள்ளலாம்.

(C-1086)

தொடர்புகளுக்கு: **Rainbow Travels**

இல. 30/2, 3ஆம் ஒழுங்கை,
மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
TEL: 0212219596 / 0778980652


# தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் எதிர்காலத்தில் சிநேகபூர்வ உறவு

## மு.கா. தலைவர் ஹக்கீம் தெரிவிப்பு

(கொழும்பு)

எதிர்காலத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சிநேகபூர்வமாகச் செயற்படும் என அதன் தலைவர் அமைச்சர் ஹக்கீம் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மத்திய அரசில் எந்த அமைச்சு பதவிகளையும் கோரவில்லை என அக் கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

கிழக்கு மாகாண சபையில் ஆட்சியை ஏற்படுத்துவதற்காக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பிடம் அமைச்சுப் பதவிகள் கோரியதாக ஊடகங்களில் வெளியான செய்திகள் முற்றிலும் பொய்யானது என அவர் குறிப்பிட்டார்.

முஸ்லிம் சமூகத்தின் பிரச்சினைகளுக்காக அரசாங்கத்திலிருந்து கொண்டு குரல் கொடுப்போம். தற்போதைய சூழலில் முஸ்லிம் சமூகத்திற்கு நிறைவேற்ற வேண்டிய சில விடயங்கள் தொடர்பில் அரசாங்கத்துடன் இணக்கம் காணப்பட்டுள்ளது. இந்த விடயங்கள் மிக விரைவில் அமுல்படுத்தப்படும் என அவர் தெரிவித்தார்.

அத்துடன் கிழக்கு மாகாணத்தில் தமிழ், முஸ்லிம் மற்றும் சிங்கள மக்களிற்கு சிறந்த சேவையை ஆற்றுவதற்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பாடுபடும். இதனால் எந்தவொரு சமூகத்திற்கும் பாதிப்பில்லாமல் அபிவிருத்திகள் மேற்கொள்ளப்படும் என அமைச்சர் ஹக்கீம் குறிப்பிட்டார்.

கிழக்கு மாகாண ஆட்சியை அமைத்தல் தொடர்பில் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு மற்றும் தமிழ் தேசிய கூட்டமைப்பு ஆகிய கட்சிகளுடன் பேச்சு நடத்தினோம். இதன் பின்னரே ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்புக்கு ஆதரவு வழங்குவது என தீர்மானிக்கப்பட்டது எனஅவர் தெரிவித்தார்.

இந்த தீர்மானத்தினால் தமிழ் தேசிய கூட்டமைப்பு ஏமாற்றமடைந்திருக்கலாம். எனினும் எதிர்காலத்தில் தமிழ் தேசிய கூட்டமைப்புடன் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சினேகபூர்வமாக செயற்படும் என அமைச்சர் ஹக்கீம் மேலும் தெரிவித்தார். (எ-11)





யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்த இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் யாழ் இராணுவக்கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மகிந்த ஹத்துருசிங்க, கைத்தொழில் தொழிற்துறை மன்றத் தலைவர் க. [illegible] கலந்துரையாடுவதை படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## நட்பு

ஆழம் தெரியாமல் காலை விடுவதும் பிழை. ஆராயாமல் நட்பு வைத்துக் கொள்வதும் தவறான காரியம்.

நட்பென்பது ஏதோ திடீரென வந்து விடுவது ஒன்றல்ல. இந்தக் காலத்தில் அப்படியான திடீர் நட்பு ஏற்படுவதை நாம் பார்க்கிறோம்.

அது நட்பல்ல. வெறும் நாடகம்.

தனியாக இருக்கும்போது ஒருவனை ஒருவன் திட்டுவது வழமையான காரியமாகும்.

அவனை நேரிலே கண்டுவிட்டால் நீண்ட நாட்களாக காணாமல் தவித்துக்கொண்டிருந்த மாதிரி ஓடிப்போய் கட்டியணைத்து நலம் விசாரிப்பதும் உண்டு.

ஒருவனது காலை இன்னொருவன் எப்படி வாரிவிடலாமென யோசித்துக் கொண்டிருப்பான்.

ஆராயாமல் நட்பு செய்வது கெடுதலை ஏற்படுத்தும் என வள்ளுவர் கூறியுள்ளார்.

அது எந்த அளவிற்கு உண்மையென்பதை அனுபவித்தவர்களுக்கு மட்டும்தான் தெரியும்.

ஒரு காட்டிலே ஒரு ஓநாயும் நரியும் வாழ்ந்து வந்தது. சாப்பிடுவதற்கு எதுவுமே கிடைக்கவில்லை. நீண்ட நாட்களாக பட்டினியால் தவித்தன. இப்படியே எத்தனை நாட்களாக இருக்க முடியும்? ஒருநாள் இரண்டும் கூடி யோசனை செய்தது.

உழுதுண்டு வாழ்வதை விட தொழுதுண்டு வாழ்வதே சுலபம் என்று முடிவெடுத்தன.

அந்த சமயம் பார்த்து புலியொன்று அவ்வழியாக வந்தது. ஓநாயும் நரியும் உடனடியாக ஒரு முடிவுக்கு வந்தன. அதாவது... அந்தப் புலியை மெதுவாக சிநேகிதம் பிடித்தால் மூன்று வேளையும் உணவருந்தலாம் என்றும் இப்படியான ஒரு பலசாலி நமக்கு நண்பனாக இருந்தால் எல்லாம் சுலபமாக நிறைவேறும் என்றும் முடிவெடுத்தன.

சரியென்று கூறி இரண்டு பேரும் புலியின் அருகில் சென்று ஆசை வார்த்தை பேசிக்கொண்டன.

"நாம் மூன்று பேரும் ஒரு தாய் மக்களாக இருப்போம்; சகோதர பாசத்தோடு வாழ்வோம்; எந்த இரை கிடைத்தாலும் அதை மூன்று பேரும் பங்கிட்டு சாப்பிடுவோம் என்று கூறியது. புலியும் "ஓகே" என்று பதிலளித்தது.

அவ்வளவுதான். திடீரென மூன்று பேரும் ஒன்றையொன்று கட்டித்தழுவின. பெரிய பாசப் பிணைப்பு மாதிரி அவற்றின் கட்டித் தழுவல் இருந்தது.

ஏதோ இரை தேட வேண்டுமென மூவரும் பயணத்தை ஆரம்பித்தன.

அச்சமயம் பார்த்து ஒரு மான் குட்டி கண்ணுக்கு தென்பட்டது. மூன்று பேரும் சேர்ந்து திடீரென அதன்மேலே பாய்ந்தன. அப்படியே மானின் உயிர் பறிக்கப்பட்டது.

இப்போது பங்கு போட வேண்டும். ஓநாய்க்குப் பசி தாங்க முடியவில்லை. வாயை கெட்டியாக மூடிக்கொண்டு உட்கார்ந்திருந்தது.

புலி அதைப் பார்த்து "ஓநாயே! இந்த மானை நமக்கு பங்கு போட்டு கொடு" என்றது. "சரி"யென்று ஓநாய் ஒத்துக் கொண்டது. ஓநாய் சொன்னது; "புலியாரே... நீங்கள்தான் எங்களுக்குத் தலைவன்; எஜமான்; அதனால் மானின் தலை உங்களுக்குத் தான்; இந்த நரி வேகமாக ஓடக்கூடியது. அதனால் மானின் கால் இந்த நரிக்கு கொடுப்போம். மீதியாக உள்ள உடம்பு முழுவதையும் நான் எடுத்துக்கொள்கிறேன்" என்றது.

ஓநாய் இதைச் சொல்லி வாயை மூடுவதற்குள் புலி அதன் தலையிலே ஓங்கி "நங்" என்று ஒரு அடி கொடுத்தது. தாங்க முடியாத வலி வலித்தது ஓநாய்க்கு.

இந்த அடி தாங்க முடியாமல் ஓநாய் ஊளையிட்டவாறு உருண்டு கொண்டது. ஏற்கனவே பசி வேறு களை. புலி அதன்பின் நரி பக்கம் திரும்பியது... "நீ பங்கு போட்டுக்கொடு" என்றது.

நரி "சரி" என்று கூறி விட்டு எழுந்து நின்றது.

"புலியாரே மானுடைய தலையும் உடம்பும் உங்களிடம்தான் சேர வேண்டும். நீங்கள்தான் எங்கள் தலைவர். ஏனென்றால் எங்களை ஒரு தந்தையைப் போல் காப்பாற்றப்போவதும் நீங்கள்தான்.

மானினுடைய காலும் உங்களுக்குத்தான். ஏனென்றால் எந்த நேரமும் எங்களுக்காக அலைந்து பாடுபடப் போகிறதும் நீங்கள் தான்"

இப்படியாக கூறியது புலிக்கு சந்தோசம். ஒரே புளுகு.

"நரியே! உனக்குத்தான் அறிவு ஜாஸ்தி! நமக்குக் கிடைத்த இரையை பாகுபாடின்றி இவ்வளவு பக்குவமாக பங்குபோட நீ எங்கே பாடம் கற்றுக்கொண்டாய்?" என்று கேட்டது.

நரி சொன்னது; "எஜமானே! வேறு எங்கேயும் இதைக் கற்றுக் கொள்ளவில்லை. சற்று நேரத்திற்கு முன்னால் ஓநாய்க்கு நீங்கள் பாடம் புகட்டியதைப் பார்த்தேன். அதைப் பார்த்தபடியால்தான் நான் உணர்ந்து கொண்டேன்.

நான் இவ்வளவு புத்திசாலியாக இருப்பதற்கு நீங்கள்தான் காரணம். அந்தப் பெருமை உங்களைத்தான் சேரும்.

ஆராயாமல் நட்பு வைத்துக் கொண்டால், இப்படித்தான் பேச வேண்டியிருக்கும். வேறு என்ன செய்வது?

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# சமூகவிரோத செயல்களை கட்டுப்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுக்க வேண்டும்

## சிவில் பாதுகாப்புக்குழு கூட்டத்தில் வலியுறுத்தல்

(யாழ்ப்பாணம்)

சமூக விரோத செயற்பாடுகளைக் கட்டுப்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

குடாநாட்டில் தற்போது கஞ்சா விற்பனை, மணல் கடத்தல், மாடு கடத்தல் ஏன் ஆள் கடத்தல் சம்பவங்கள், மதுபானம் அருந்தி விட்டு பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படுத்துவோர்களின் எண்ணிக்கை என பல குற்றச் செயல்கள் அதிகரித்து வருகின்றன.

இவ்வாறு யாழ்.மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நேற்று இடம் பெற்ற சிவில் பாதுகாப்பு குழுக்கூட்டத்தில் கலந்து கொண்டவர்களினால் சரமாரியாக குற்றச்சாட்டு முன் வைக்கப்பட்டது.

குறிப்பாக மாதகல் பகுதியில் கஞ்சா கடத்தல் மற்றும் விற்பனை நடவடிக்கைகள் இடம்பெற்று வருவதாக வலி. தென்மேற்கு பிரதேச சபை உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

இதுதவிர வல்வெட்டித்துறையைச் சேர்ந்த வர்த்தகர் ஒருவர் தென்னிலங்கையைச் சேர்ந்த குழுவினால் கடத்தப்பட்டு தாக்கப்பட்ட பின்னர் பொலிஸாரினால் மீட்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் கடந்த சில தினங்களுக்கு முன்பு இடம்பெற்றது. இந்தக் கூட்டத்தில் சம்பவத்துடன் அரசியல் கட்சிகள் எதுவும் தொடர்பு பட்டிருக்கவில்லை. அரசியல் காரணங்களுக்காக அவர் கடத்தப்படவில்லை என அப்பகுதியைச் சேர்ந்த பொதுமகன் ஒருவர் தனது ஆதங்கத்தை வெளிப்படுத்தினார்.

இதுதவிர போக்குவரத்து ஒழுங்கு விதிகளை சரிவர கடைப்பிடிக்காமையினால் பலர் விபத்துக்களில் சிக்கி உயிர் இழக்கின்றனர்.

மது அருந்திவிட்டு வாகனங்களைச் செலுத்துகின்றனர். எனவே, போக்குவரத்து பிரிவு பொலிஸார் இறுக்கமான போக்கை கடைப்பிடிக்க வேண்டும்.

அத்தோடு பாடசாலை சொத்துக்களை சேதமாக்கும் நடவடிக்கைகளும் தற்போது இடம்பெற்று வருகின்றன.

மாலை நேரங்களிலும் மற்றும் விடுமுறை தினங்களிலும் கூடும் இளைஞர்கள் குழு மது போதையில் பல அட்டகாசங்களைப் புரிவதோடு சமூக விரோத செயல்களிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

மேலும் ஆலயங்களுக்கு முன்பாகவும் இவ்வாறான குந்தகம் விளைவிக்கும் நடவடிக்கையில் இளைஞர் குழுக்கள் ஈடுபட்டு வருகின்றன. பொலிஸார் இவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஆசிரியர் ஒருவர் கேட்டுக்கொண்டார்.

மேலும் அனலைதீவு, எழுவைதீவுப்பகுதிகளில் சமூக விரோத செயல்கள் அதிகரித்து வருகின்றன. இவற்றைக் கட்டுப்படுத்த அந்த இடங்களின் தனியான பொலிஸ் காவலரண்கள் அமைக்கப்பட வேண்டும் எனவும் ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்தால் சகல பிரதேசங்களையும் கண்காணிக்க முடியாது எனவும் ஊர்காவற்றுறை பிரதேச செயலர் திருமதி எழிலரசி கேட்டுக் கொண்டார்.

இந்தக்கூட்டத்தில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, யாழ்.பிரதிப் பொலிஸ்மா அதிபர், யாழ்.மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஸ்ரீகுகநேசன், யாழ். அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம், யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின், யாழ்.மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம், பிரதேச செயலர்கள், பொதுமக்கள், பொலிஸ் அதிகாரிகள் எனப் பலர் கலந்து கொண்டனர். (அ-6)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 80 | 50 | 60 |
| உருளைக்கிழங்கு | 90 | 60-80 | 70 | 65 |
| பச்சைமிளகாய் | 60 | 60 | 60 | 60 |
| தக்காளி | 40 | 40 | 40 | 50 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 30 | 30 | 40 |
| கோவா | 70 | 60 | 60 | 60 |
| கரட் | 80 | 110 | 80 | 120 |
| பூசணி | 40 | 20 | 25 | 50 |
| புடோல் | 40 | 30 | 30 | 40 |
| வாழைக்காய் | 50 | 40 | 40 | 50 |
| சின்ன வெங்காயம் | 50 | 60 | 60 | 70 |
| பெரிய வெங்காயம் | 70 | 40 | 50 | 65 |
| பாகற்காய் | 80 | 60 | 60 | 70 |
| வெண்டிக்காய் | 40 | 30' | 30 | 50 |
| கருணைக் கிழங்கு | 80 | 70 | 70 | 90 |
| பயற்றங்காய் | 60 | 40 | 50 | 60 |
| லீக்ஸ் | 80 | 100 | 90 | 100 |
| பீற்றூட் | 60 | 60 | 40 | 60 |
| கறிமிளகாய் | 80 | 40-70 | 50 | 100 |
| முருங்கைக்காய் | 30 | 60 | 30 | 50 |
| போஞ்சி | 60 | 90 | 70 | 100 |
| கத்தரிதம்புள்ள | 50 | 60 | 40 | -- |
| கீரை - 1 பிடி | 10 | 20 | 10 | 20 |
| தேசிக்காய் | 120 | 280 | 200 | 240 |
| தேங்காய் (ஒன்று) | 30-40 | 30 | 30 | 25 |

# இராசி பலன்

19.09.2012
(புரட்டாதி 03, புதன்கிழமை)
சூரிய உதயம் காலை 6.03 மணிக்கு
சதுர்த்தி பின்னிரவு 12.52 மணிவரை
சுவாதி முன்னிரவு 11.33 மணிவரை
இராகுகாலம் 12.03-1.33 மணிவரை
சுபநேரம் 4.33-6.03 மணிவரை
விநாயகர் சதுர்த்தி விரதம்.

**மேடம்** பொன்னான நாள், வாழ்க்கைத் துணை வழியே மகிழ்ச்சிக்குரிய செய்தியொன்று வந்து சேரலாம், சென்ற இடத்தில் செல்வாக்கு மேலோங்கும், செய்தொழிலில் மேன்மையுண்டு.

**இடபம்** தொழில் சம்பந்தமாக முக்கிய முடிவெடுப்பீர்கள், பிள்ளைகள் வழியில் பெருமையான செய்திகள் வந்து சேரும் நாள், உள்ளம் மகிழும் விதத்தில் உதிரி வருமானங்கள் வந்து சேரலாம்.

**மிதுனம்** பாதியில் நின்ற பணியை மீதியும் தொடர்வீர்கள், நல்லவர்களின் தொடர்புகள் நீடிக்கும், பொருளாதார நிலையில் முன்னேற்றம் ஏற்படும் நாள், பிறருக்கு உதவும் எண்ணம் மேலோங்கும்.

**கடகம்** புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், தொல்லை கொடுத்த சிலரே தோள் கொடுத்து உதவ முன்வருவர், சுப காரியப் பேச்சுக்கள் முடிவாகலாம், தொழில் நன்மையுண்டு.

**சிங்கம்** குடும்பத்தில் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள் அகலும், சிந்திக்காமல் செய்த காரியங்களில் கூட சிறப்படையும் நாள், அரசியல் ஈடுபாடுகள் அதிகரிக்கும், உறவினர் உதவியுண்டு.

**கன்னி** தொழில் வளர்ச்சிக்கு மங்கையர் வழி ஒத்துழைப்புகள் கிடைக்கும், வழிபாட்டால் சந்தோசம் காண வேண்டிய நாள், உஷ்ண சம்பந்தமான ரோகங்கள் ஏற்படலாம், விருந்துகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.

**துலாம்** கொள்கைப் பிடிப்பை உறவினர்களுக்காக கொஞ்சம் தளர்த்த வேண்டிவரலாம், ஆன்மீக சிந்தனை மேலோங்கும், பெரிய மனிதர்களின் தொடர்புகள் கிடைக்கலாம்.

**விருச்சிகம்** தொழில் நன்மை கருதி ஊர் மாற்றம், இடமாற்றம் என்பன ஏற்படலாம், எடுத்த காரியங்களில் சில தாமதங்கள் ஏற்படலாம், அமைதிக் குறைவான நாள்.

**தனுசு** இலட்சியப் பாதையில் அடியெடுத்து வைப்பீர்கள், பயண வாய்ப்புக்கள் கைகூடுவதற்கான அறிகுறி தோன்றும், விலையுயர்ந்த பொருட்கள் வீடு வந்து சேரலாம்.

**மகரம்** தொட்ட காரியம் வெற்றி பெறும் நாள், ஆடம்பரப் பொருட்கள் மீது அதிக ஆர்வம் காட்டுவீர்கள், தேகாரோக்கியம் சீராகும், நண்பர்கள் உதவி செய்ய முன்வருவர்.

**கும்பம்** வழிபாட்டால் சிறப்பினைக் காண வேண்டிய நாள், நேற்றைய பணியொன்று இன்று தொடரலாம், தந்தை வழி உறவினர்களால் ஏற்பட்ட மனஸ்தாபங்கள் மாறும்.

**மீனம்** எதிர்பாராத அச்சங்கள் ஏற்படலாம், உடல் நலனில் கவனம் தேவை, எடுத்த முயற்சிகளில் அதிக பிரயாசை காட்ட வேண்டிய நாள், செலவுகள் அதிகரிக்கலாம், போசன சுகமுண்டு.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீவகப்பகுதிகளில் சுழற்சி முறையில் வைத்தியர்களை நியமிக்க நடவடிக்கை

## நேற்றைய கூட்டத்தில் தீர்மானம்



(படங்கள்:- என்.குமார்)

(யாழ்ப்பாணம்)

தீவகப் பகுதி வைத்தியசாலைகளிலுள்ள வைத்தியர்கள் பற்றாக்குறையை உடனடியாக நிவர்த்தி செய்ய வேண்டும் என தீவகப் பகுதியைச் சேர்ந்தவர்கள் நேற்று யாழ். மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற கூட்டத்தில் வேண்டுகோள் விடுத்ததையடுத்து சுழற்சி முறையில் வைத்தியர்களை பணியில் அமர்த்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தீவகப் பகுதி மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக ஆராயும் நோக்கில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நேற்று முற்பகல் 10 மணியளவில் இந்தக் கூட்டம் இடம்பெற்றது.

இந்தக் கூட்டத்தில் தீவுப் பகுதிகளிலுள்ள வேலணை, ஊர்காவற்றுறை, நெடுந்தீவு ஆகிய பிரதேச செயலாளர்கள் மற்றும் பிரதேச சபைத் தலைவர்கள், உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்களினால் மேற்படி விடயம் தொடர்பாக எடுத்துக்கூறப்பட்டது.

குறிப்பாக தீவகப் பகுதிகளில் நீண்ட காலமாக வைத்தியர்கள் பற்றாக்குறை உள்ளதாகவும் மண்டைதீவு போன்ற சில பிரதேசங்களில் வைத்தியசாலைகளே இல்லை எனவும் குற்றஞ்சாட்டினர்.

இதுதவிர தீவகப் பகுதிகளிலுள்ள வைத்தியசாலைகளில் மருத்துவ ஆய்வு கூடங்கள் இல்லை. உடற்கூற்று பரிசோதனை நடவடிக்கைகள் இடம்பெறுவதில்லை எனவும் தெரிவித்தார்.

இதுதவிர காரைநகர் வைத்தியசாலையில் பிரேத பரிசோதனை செய்வதற்கான வைத்தியர் இல்லாமையினால் சுமார் 15 ஆயிரம் தொடக்கம் 20 ஆயிரம் ரூபாவரை பிரேத பரிசோதனைக்காக செலவிட வேண்டியுள்ளது.

கஷ்டப்பட்ட மக்களினால் இவ்வளவு தொகைப் பணத்தை எவ்வாறு செலுத்த முடியும். இவ்வாறு பல குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டது. இதனையடுத்து தீவுப் பகுதிகளிலுள்ள வைத்தியர் பற்றாக்குறை உடனடியாக நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுப்பதாகவும் ஒரு மாதத்திற்கு ஒருவரை சுழற்சி முறையில் வழங்கவுள்ளதாகவும் வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் ஆர்.இரவீந்திரன் தெரிவித்தார்.


இதேவேளை, யாழ்.மாவட்டத்தில் தாதியர் பற்றாக்குறையுள்ளதாக யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியகலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

இதற்கு தற்போது தாதியர் ஒப்பந்த அடிப்படையில் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர் எனவும் 60 வயதில் ஓய்வு பெற்ற தாதியர்களை 63 வயது வரை ஒப்பந்த அடிப்படையில் மீளவும் இணைத்துக் கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் இதற்கென சுகாதார அமைச்சினால் புதிதாக சுற்றுநிருபம் ஒன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

மேலும் தீவகப் பகுதி வைத்தியசாலைகளிலுள்ள குறைபாடுகளைத் தீர்க்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

இந்தக் கூட்டத்தில் வடக்கு மாகாண பிரதம செயலாளர் திருமதி விஜயலட்சுமி ரமேஷ், வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன், யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின், யாழ்.அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம், யாழ்.மாநகர சபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா உள்ளிட்ட பலர் பங்கு கொண்டிருந்தனர். (அ-6)

## சமாதான நீதிவானாக சத்தியப்பிரமாணம்



(யாழ்ப்பாணம்)

அச்சுவேலி மேற்கை சேர்ந்த கனகசபை ஜெகன் அண்மையில் நீதி மற்றும் அமைச்சினால் யாழ்ப்பாண நீதி மற்றும் நிர்வாக வலயத்துக்கான சமாதான நீதிவானாக நியமிக்கப்பட்டுள்ளார். (அ-9)

## விசாரணை மேற்கொள்ள பொலிஸார் வருவதில்லை

### செயற்குழு கூட்டத்தில் சுட்டிக்காட்டு

(யாழ்ப்பாணம்)

வேலணை வைத்தியசாலையில் விபத்துக்குள்ளானவர்கள் அனுமதிக்கப்படும் போது விசாரணைகளை மேற்கொள்ள அறிவித்தாலும் பொலிஸார் வருவதில்லை என நேற்றைய கூட்டத்தில் வைத்தியர் ஒருவர் குற்றம் சாட்டினார்.

யாழ்.மாவட்ட செயலகத்தில் நேற்று இடம்பெற்ற சிவில் பாதுகாப்பு குழுக் கூட்டத்திலேயே மேற்படி குற்றச்சாட்டை அவர் முன்வைத்தார்.

இதற்கு யாழ்.பிரதிப் பொலிஸ்மா அதிபர் எரிக்பெரேரா பதிலளிக்கையில், எதிர்வரும் காலங்களில் ஒவ்வொரு நாளும் தமிழ் பொலிஸ் உட்பட மூவர் வைத்தியசாலைக்கு வருகை தந்து விசாரணைகளை மேற்கொள்வார்கள் என தெரிவித்தார். (அ-6)

## கைவிடப்பட்ட கால்நடைகள் இன்று முதல் பிடிக்கப்படும்

### சாவ.பி.சபை அறிவிப்பு

(தனங்கிளப்பு)

தனங்கிளப்பு மறவன்புலோ காலபோக நெற்பயிர்ச் செய்கை ஆரம்பிக்கப்படும் நிலையில் கடந்த 1999 ஆம் ஆண்டு மக்களால் கைவிடப்பட்ட கால்நடைகள் சாவகச்சேரி பிரதேச சபையினால் இன்று புதன்கிழமை தொடக்கம் பிடிக்கப்படவுள்ளது.

எனவே, இப்பகுதி மக்கள் தங்களுக்கு சொந்தமான கால்நடைகளை தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்குமாறு சாவகச்சேரி பிரதேச சபையினால் ஒலிபெருக்கி மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் கடும் வரட்சி காரணமாக இப்பகுதியில் உள்ள அனைத்து குளங்களும் நீர்வற்றி காணப்படுவதனால் கால்நடைகள் தண்ணீர் இன்றி பரிதவிக்கின்றன.

எனவே, இப்பகுதியில் உள்ள குளங்களை மழைகாலம் அண்மிப்பதற்கு முன்பதாக ஆழமாக்குமாறும் இப்பகுதி மக்கள் விவசாய திணைக்களத்தினரிடம் கோரிக்கையை முன்வைத்துள்ளனர். (அ-3-37)

## கடைக்குச் சென்ற நபர் மீது இனந்தெரியாதோர் தாக்கு

### நகை, பணம் என்பன பறிப்பு

(சாவகச்சேரி)

இனந்தெரியாத நபர்களின் கொடூரமான தாக்குதலுக்குட்பட்டு பணம், நகை, கையடக்கத் தொலைபேசி என்பவற்றை நபர் ஒருவர் பறிகொடுத்த பரிதாபச் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

இச் சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை இரவு சாவகச்சேரி நகரில் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் தெரிய வருவது, சாவகச்சேரி வடக்கு மீசாலையைச் சேர்ந்த வேலாயுதம் செல்வராசா (வயது 56) என்ற மின்சார சபை ஊழியர் இனந்தெரியாத நபர்களின் தாக்குதலுக்கு இலக்கா[illegible] மேற்குறித்த பொருட்களை பறிகொடுத்துள்ளார்.

சாவகச்சேரி எரிபொருள் நிலையத்திற்கு அருகாமையில் தனது துவிச்சக்கரவண்டியை நிறுத்தி விட்டு வீட்டுக்கு தேவையான பொருட்களை கொள்வனவு செய்யச் சென்றுள்ளார்.

இதன்போது பிரபல வங்கிக்கு அருகாமையில் உள்ள ஓடையில் நின்று சிலர் அழைத்து இவர் அங்கு சென்றதும் வாயைப் பொத்தி இழுத்துச் சென்று இரண்டு பவுண் மோதிரம், 30 ஆயிரம் ரூபா பெறுமதியான கையடக்க தொலைபேசி, 15 ஆயிரத்து 800 ரூபா பணம் என்பவற்றை பறித்தனர்.

இவ்விடயத்தை வெளியே கூறினால் உனது மகனுக்கு நடந்த கதியே உனக்கும் நடக்கும் என மிரட்டிச் சென்றனர்.

ஏற்கனவே அவரது மகன் காணாமல் போனமை குறிப்பிடத்தக்கது. இச் சம்பவம் தொடர்பாக சாவகச்சேரி பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டதை அடுத்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-3-29)

## யாழ்.செய்திகள்...

## மஹோற்சவம்

(நீர்வேலி)

நீர்வேலி அரசகேசரிப்பிள்ளையார் கோவிலின் வருடாந்த மஹோற்சவம் இன்று காலை 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பதினொரு நாட்கள் திருவிழா நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 28 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்குத் தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளன. (அ)

* * * * * * * *

(யாழ்ப்பாணம்)

உரும்பிராய் கருணாகரப்பிள்ளையார் ஆலய வருடாந்த மஹோற்சவம் நாளை வியாழக்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்துத்தினங்கள் திருவிழா நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 27 ஆம் திகதி வியாழக்கிழமை மாலை சப்பரத்திருவிழாவும் மறுநாள் வெள்ளிக்கிழமை தேர்த்திருவிழாவும் 29 ஆம் திகதி சனிக்கிழமை தீர்த்தத்திருவிழாவும் நடைபெறுமென தேவஸ்தான முதல்வர் அறிவித்துள்ளார். (அ-9)

## தெய்வீகப் பேருரை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வண்ணை ஸ்ரீ வெங்கடேச வரதராஜப்பெருமாள் தேவஸ்தான மஹோற்சவ காலங்களில் தினமும் இரவு 7.30 மணிக்கு தெய்வீகப் பேருரைகள் நடைபெற்று வருகின்றன.

யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கத்தின் ஆதரவில் நடைபெறும் இத்தெய்வீக பேருரையில் இன்று புதன்கிழமை ***ஸ்ரீ விஷ்ணு அவதார மகிமை*** எனும் தலைப்பில் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளர் ச.லலீசன் உரையாற்றவுள்ளார். (அ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்கலைக்கழக விரிவுரையாளர்களே!

# விடைத்தாள் திருத்த வாருங்கள்

## கல்வி அமைச்சர் அழைப்பு

(கொழும்பு)—

**பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் வேலை நிறுத்தம் தொடர்கின்ற போதிலும் அவர்கள் க.பொ.த. உயர்தரப்பரீட்சை விடைத்தாள் திருத்தும் பணிகளுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென கல்வியமைச்சர் பந்துல குணவர்த்தன வேண்டுகோள் விடுத்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பல்வேறு இக்கட்டான சூழ்நிலைகளிலும் கல்வியமைச்சு பல்கலைக்கழக விரிவுரையாளர்களையும் பேராசிரியர்களையும் காப்பாற்றியிருப்பதுடன் சலுகைகளையும் பெற்றுக்கொடுத்திருப்பதனால் அவர்கள் எமது கோரிக்கைக்கு செவிசாய்ப்பார்களென நம்புகிறோம்.

இதன் உத்தியோகபூர்வ வேண்டுகோள் பரீட்சைகள் ஆணையாளர் புஸ்பகுமாரவினால் எழுத்துமூலம் விரிவுரையாளர்கள், பேராசிரியர்கள் உள்ளிட்ட விடைத்தாள் திருத்தும் பணியில் அனைத்து கல்விமான்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

க.பொ.த. உயர்தரப்பரீட்சைக்குட்படுத்தப்பட்ட 523 பரீட்சை வினாத்தாள்களின் 18 இலட்சம் விடைத்தாள்கள் திருத்தப்படவுள்ளன. 12 ஆயிரம் தொடக்கம் 15 ஆயிரம் பேர் வரை விடைத்தாள் திருத்தும் பணியில் ஈடுபட வேண்டிய இடத்தில் ஆசிரிய சங்கங்களை சேர்ந்த 400 பேர் வரையிலானோரே இதற்கு இணக்கம் தெரிவித்துள்ளன்ர்.

எனவே மாணவர்களின் எதிர்காலத்தை கருத்திற்கொண்டு விரிவுரையாளர்களும் பேராசிரியர்களும் விடைத்தாள் திருத்தும் பணிகளுக்கு சமுகமளிக்க வேண்டும்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பணிப்புரையிலேயே நாங்கள் இந்த வேண்டுகோளை விடுக்கின்றோம்.

இவ்வருடம் 2 இலட்சத்து 77 ஆயிரத்து 97 மாணவர்கள் க.பொ.த உயர்தரப்பரீட்சைக்கு தோற்றியுள்ளனர். இவர்களுள் சுமார் 22 ஆயிரம் தொடக்கம் 25 ஆயிரம் வரையிலர்ன மாணவர்களே பல்கலைக்கழகத்திற்கு செல்லவிருப்பதனால் ஏனைய பாடநெறிகளை தெரிவு செய்வதற்கும் வெளிநாட்டு கற்கைகளை தொடரவிருக்கும் மாணவர்களுக்கும் பெறுபேறுகள் விரைவில் தேவைப்படுகிறது.

விரிவுரையாளர்களும் பேராசிரியர்களும் இதற்கு ஒத்துழைப்பார்களென்ற நம்பிக்கையில் இன்னும் சில நாட்களில் விடைத்தாள் திருத்தும் பணியினை ஆரம்பிக்க ஏற்பாடுகளை செய்துள்ளோம் என்றார்.

அத்துடன் இவ்வருடமே வினாத்தாள்களில் மிகக் குறைந்த அளவிலான பிழைகள் காணப்பட்டதாக கூறிய அமைச்சர் மாணவர்கள் பாதிக்கப்படாத வகையில் அவற்றுக்கான புள்ளிகள் பெற்றுக் கொடுக்கப்படும் எனவும் குறிப்பிட்டார். (அ-2)

YARL Properties
புதிய பரிமாணத்துடன் சிறந்த சேவை
யாழ் குடாநாட்டின் எப்பகுதியில் இருந்தும் அழைக்க வேண்டிய ஒரே தொலைபேசி இலக்கம்
021 2221919/0759751919
யாழ் பல்கலைக்கழகத்திற்கு அருகாமையில் Brown வீதியில் 3 1/2 பரப்பு காணி பழைய வீட்டுடன் விற்பனைக்கு உண்டு உடன் தொடர்பு கொள்ளுங்கள்
விற்றல், வாங்குதல் (Sales/Buy)
வாடகை (Rent)
பராமரிப்பு (Property Managment)
அனைத்து தேவைகளுக்கும் அழையுங்கள்
36, கச்சேரி நல்லூர் வீதி
யாழ்ப்பாணம்
E-Mail - yarlproperties@gmail.com

# இந்திய-இலங்கை உறவை சீர்குலைக்க வேண்டாம்

## கண்டிக்கிறார் ரணில்

(கொழும்பு)

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் இருந்து வரும் நீண்டகால உறவுகளை சீர்குலைக்கவோ அதனை பாழ்படுத்தவோ எடுக்கும் முயற்சிகளை வன்மையாக கண்டிப்பதாக எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

இலங்கை யாத்திரீகள் தமிழகத்தில் தாக்குதலுக்கு உள்ளானமை தொடர்பில் அண்மையில் அறிக்கை ஒன்றை அவர் வெளியிட்டுள்ளார்.

அதில் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு,

இந்தியாவின் ஏனைய மாநிலங்களில் இருந்து தமிழகத்திற்கு செல்பவர்களோ தமிழகத்தில் இருந்து இலங்கைக்கு செல்பவர்களோ இப்படியான சம்பவங்களை எதிர்நோக்கியிருக்கவில்லை.

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் அரசியல் மற்றும் கொள்கை ரீதியான முரண்பாடுகள் இருந்த போதிலும் சாதாரண மக்கள் இடையிலான நட்புறவில் எந்த பாதிப்புக்களும் ஏற்பட்டதில்லை.

இந்த நிலையில் இலங்கையர்கள் கடந்த நாட்களில் இந்தியாவில் எதிர்நோக்கிய பிரச்சினைகள் போன்ற பிரச்சினைகளை ஏற்படாது தடுக்க வேண்டியது இந்திய மத்திய அரசாங்கத்தின் கடமை.

அத்துடன் இவ்வாறான பிரச்சினைகள் ஏற்படும் போது இராஜதந்திர ரீதியிலும் தூரநோக்குடன் தீர்த்துக் கொள்ள வேண்டிய நடவடிக்கைகளை அரசாங்கம் எடுக்க வேண்டும் எனவும் அவர் அதில் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# மஹிந்தவின் வருகையை கண்டித்து கடையடைப்பு

இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் இந்திய விஜயத்தை கண்டித்து புதுச்சேரியில் நேற்று முன்தினம் முழு அடைப்பு போராட்டம் நடத்தப்பட்டது. இதனால் பொது மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டது.

இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு தமிழகம் மற்றும் புதுச்சேரியில் உள்ள அரசியல் கட்சிகளும் பல்வேறு அமைப்புகளும் எதிர்ப்பு தெரிவித்து வருகிறது. ராஜபக்ஷ இந்தியாவினுள் நுழையக்கூடாது என்ற கோரிக்கைகள் விடுத்து வருகின்றனர்.

இந்த நிலையில் இலங்கை ஜனாதிபதியின் இந்திய வருகைக்கு எதிர்ப்பு தெரிவித்து நாம் தமிழர் கட்சி சார்பில் புதுவையில் நேற்று முன்தினம் முழு அடைப்பு போராட்டம் நடைபெற்றது. இந்த போராட்டத்திற்கு புதுச்சேரி ஐக்கிய ஜனதா தளம் கட்சி ஆதரவு தெரிவித்திருந்தது. (அ-2)

# உருளைக்கிழங்கு ரின்மீன் இறக்குமதி வரி அதிகரிப்பு

இறக்குமதி செய்யப்படும் உருளைக்கிழங்கு, பேணியில் அடைக்கப்பட்ட மீன் என்பவற்றுக்கான இறக்குமதி வரி நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் அதிகரிக்கப்பட்டுள்ளதாக உள்நாட்டு வர்த்தக அமைச்சு தெரிவித்துள்ளது. இதன்படி இறக்குமதி செய்யப்படும் ஒரு கிலோகிராம் உருளைக்கிழங்கிற்கான இறக்குமதி வரி 20 ரூபாவினால் அதிகரிக்கப்பட்டுள்ளது. இதேவேளை, இறக்குமதி செய்யப்படும் பேணியில் அடைக்கப்பட்ட மீன் 25 ரூபாவினால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

நேற்று நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில் இவற்றின் இறக்குமதி வரி அதிகரிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)



சிகரம் ஊடக நிறுவனத்தின் கல்வி வழிகாட்டி நூல் வெளியீட்டுடன் மலேசிய பல்கலைக்கழக பிரதிநிதிகள் பங்கேற்கும் கல்விக் கண்காட்சி நேற்று ஞானம்ஸ் ஹோட்டலில் நடைபெற்றது. இதில் கல்வி தொடர்பாக மலேசிய பல்கலைக்கழக பிரதிநிதி விளக்கமளிப்பதைப் படத்தில் காணலாம்.

மணமகள் தேவை — கல்யாண மாலை — மணமகன் தேவை

| மணமகள் தேவை | மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு:- 1984 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:-பூரட்டாதி 4<br>உயரம்:-5'4"<br>கி.பா:-38.5, 8 இல் செவ்வாய்<br>தொழில்:-பட்டதாரிப் பயிலுநர்<br>B/441 | பிறப்பு:- 1971 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:- அவிட்டம் 2<br>உயரம்: 5'<br>கி.பா:-31.5<br>தொழில்:-அரச நிகழ்ச்சித்திட்ட உதவியா ளர்<br>G/499 |
| பிறப்பு:- 1976 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:- அச்சுவினி 4<br>கி.பா:-32.25, 3 இல் செவ்.<br>தொழில்:- Bsc அரச முகாமைத்துவ உதவியாளர்<br>B/424 | பிறப்பு:- 1980 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:- திருவாதிரை 3<br>உயரம்: 5'3"<br>கி.பா:-77, 8 இல் செவ்.<br>தொழில்:-ஆங்கில ஆசிரியர்<br>G/500 |
| பிறப்பு:-1973 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:-மூலம் 3<br>உயரம்:-5'1"<br>கி.பா:-18.75, 4 இல் செவ்வாய்<br>தொழில்:-தனியார் வியாபாரம்<br>B/490 | பிறப்பு:- 1976 இந்து வேளாளர்<br>நட்சத்திரம் : கார்த்திகை 1<br>உயரம்: 5'<br>கி.பா: 43.5, 4 இல் செவ்.<br>தொழில்:- அரசபட்டதாரி ஆசிரியை<br>G/501 |
| பிறப்பு:- 1984 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:-புனர்பூசம் 2<br>உயரம்:-5'6"<br>கி.பா:-47.75, 1 இல் செவ்வாய்<br>தொழில்:-பட்டதாரி முகாமைத்துவ உதவியாளர்<br>B/481 | பிறப்பு:- 1983 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:- கார்த்திகை 4<br>உயரம்: 5'3"<br>கி.பா:- 16.75, 4 இல் செவ்<br>தொழில்:- DIP தட்டெழுத்து சுருக்கெழுத்து<br>G/463 |

சகல தொடர்புகளுக்கும்:-
கல்யாண மாலை
(சர்வதேச இலவச திருமண சேவை)
இல.144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E.mail:-kalyanamalai.jaffna@gmail.com
ஊடக அனுசரணை வலம்புரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விக்கினங்களைப் போக்கும் விநாயக சதுர்த்தி



ஒரு சமயம் விநாயகர் கைலாசத்தில் நர்த்தனம் செய்திருக்கின்றார். சரிந்த தொந்தி, குறுகிய கால்கள். ஆடல் வெகு அழகாய் இருந்தது. இவரைப் பார்த்து சந்திரன் சிரித்தான். ஒன்று சிரிப்பை சந்திரன் அடக்கி இருக்க வேண்டும். இல்லையேல் சிரித்ததற்கு ஒரு பொய்யையாவது சொல்லி இருக்க வேண்டும். சந்திரன் இந்த இரண்டையும் செய்யவில்லை. விநாயகர் கோபித்து சந்திரனை சபித்தே விட்டார்.

சந்திரன் அன்று முதல் கால்களை இழந்து தேய்ந்து மெலிந்தான். கண்டவரும் ஒதுங்கினர். கடைசியில் விநாயகரிடமே வந்து மன்னிப்புக் கேட்டான். விநாயகர் மனமிரங்கி சுக்கில சதுர்த்தியில் உன்னை காண்பவர்க்கெல்லாம் வீண் அபவாதம் ஏற்படும். ஆனால், ஆவணி மாதம் சுக்கில சதுர்த்தியில் என்னைப் பூஜிப்பவர்களுக்கெல்லாம் அந்த அபவாதம் நீங்கும் என்று சாபத்தை மாற்றினார்.

இது காரணமாக வளர்பிறை (நான்காம்பிறை) சதுர்த்தியன்று மக்கள் சந்திரனை பார்க்காது ஒதுங்குகிறார்கள். அப்படி தப்பித்தவறி பார்ப்பவர்கள் ஆவணி மாதம் சுக்கில சதுர்த்தியில் விரதம் அனுஷ்டித்து விநாயகரை வணங்கி சாப விமோசனம் பெறுகின்றனர். ஆவணி சதுர்த்தி அன்றே விநாயகர் திரு அவதாரம் செய்தார் என்று புராணங்கள் கூறுகின்றன. ஒவ்வொரு மாதமும் வரும் சதுர்த்தி விரதங்களில் ஆவணிச் சதுர்த்தி முதன்மையாக விளங்குகின்றது.

சதுர்த்தியன்று விநாயகருக்கு இரட்டை அறுகம்புல்லால் பூசை செய்தால் சிறப்பு. விநாயகப் பெருமானுடைய திருவடிகளில் சேர்க்கப்படும் அறுகுக்கு இந்திரன் முதலிய தேவாதி தேவர்களுடைய செல்வமும் ஒப்பாகாது என விநாயக புராணம் விளக்கும். புண்ணியம், பாவம், சுகம், துக்கம், காமம், அதர்மம், பிறப்பு, இறப்பு, தோற்றம், மறைவு, புணர்ச்சி, பிரிவு, உவப்பு, வெறுப்பு, இன்பம், துன்பம் இப்படி ஒன்றுக்கொன்று நம்மிடையேயுள்ள இரட்டை பண்புகள் ஒழிந்து விநாயகப் பெருமானை எம்மனம் நாடி அவரிடம் கலக்க வேண்டும் என்பதை உணர்த்துவதற்காகவே பிள்ளையாருக்கு இரட்டை அறுகம்புல்லால் பூசை செய்யும் வழக்கத்தை நம் முன்னோர்கள் ஏற்படுத்தி உள்ளார்கள்.

சதுர்த்தி நாளன்று விநாயகரை இருபத்தியொரு இலைகளால் அர்ச்சிப்பது உத்தமம். அவை கரிசலாங்கண்ணி, வில்வம், ஊமத்தை, முல்லை, துளசி, வன்னி, நாயுருவி, மாதுளை, தேவதாரு, மருவி, அரசு, ஜாதிமல்லிகை, தாழை, அகத்திக்கீரை, இலந்தை, வெள்ளறுகம்புல், கண்டங்கத்தரி, அரளி, எருக்கு, மருதை, விஷ்ணுகிராந்தி ஆகியவற்றின் இலைகளே அவையாகும்.

விநாயக சதுர்த்தி விரதம் முக்கியமாக பெண்கள் அனுஷ்டிக்க வேண்டிய காரணம் இந்த உலகில் ஆண்களை விட பெண்களே காரணம் இல்லாமல் வீண் அபவாதத்திற்கு உள்ளாகின்றனர். ஆதலால் அவர்கள் மேல் ஏற்படும் வீண் அபவாதங்கள் நீங்கவும் அவர்கள் விரும்பும் மட்கட் செல்வம் முதலிய எண்ணங்கள் சித்திபெறவும். சித்திவிநாயகரை அவர் விரும்பிய சதுர்த்தியன்று விரதம் அனுஷ்டித்து வழிபட வேண்டும்.

வருடம் முழுவதும் வரும் இருபத்துநான்கு சதுர்த்தியிலும் (சதுர்த்தி பன்னிரண்டு, சங்கடஹர சதுர்த்தி பன்னிரண்டு) விரதம் அனுஷ்டிப்பதோடு ஆவணி சுக்கில சதுர்த்தியில் விரதம் பூர்த்தி செய்து விநாயகரை வழிபடுவதன் மூலம் பெறுதற்கரியபேறுகளை பெறலாம்.

கு.நவரத்தினராஜா
தும்பளை
பருத்தித்துறை

# புரட்டாதியில் வரும் ஆவணிச்சதுர்த்தி

ஆண்டுதோறும் ஆவணி மாதத்தில் வருவதால் "ஆவணிச் சதுர்த்தி" என்று அழைக்கப்படும் விநாயக சதுர்த்தி விழா இவ்வாண்டு வழமைக்கு மாறாக புரட்டாதி மாதம் 3 ஆம் நாள் இன்று புதன்கிழமை வருகின்றது.

அதேபோலவே ஐப்பசி மாதம் வருகின்ற கந்தசஷ்டி கார்த்திகையிலும் புரட்டாதி மாதம் அமைகிற நவராத்திரி ஐப்பசியிலும் இவ்வாண்டு அமைகின்றது.

ஆக, இவற்றின் உண்மை நிலையை ஆராய வேண்டும். உண்மையில் இவ்விரதங்கள் சாந்திரமானம் என்ற சந்திரனை அடிப்படையாகக் கொண்ட கணிப்பின் அடிப்படையிலே கணிக்கப்படுவதே இவ்வாறு மாத வேறுபாட்டிற்கு காரணமாகும்.

எனவே, இவ்வாறு நோக்கினால் ஆவணிமாத அமாவாசையை அடுத்த பூர்வபக்ஷ சதுர்த்தித் திதியே விநாயக சதுர்த்தியாகும். எனவே, ஆவணி மாதத்தில் இவ் அமாவாசை இருக்க வேண்டும் என்பதே நியதியன்றி சதுர்த்தி அல்ல.


எனினும், கந்தசஷ்டி விரதம், நவராத்திரி விரதம் எவையும் உண்டாக்காத சர்ச்சையையும் குழப்பத்தையும் ஆவணி-விநாயக சதுர்த்தி ஏற்படுத்தி விட்டது.

இதற்கு காரணங்கள் மூன்று. கந்தசஷ்டி கார்த்திகையிலும் நவராத்திரியின் பிற்கூறு ஐப்பசியிலும் ஈராண்டுகளுக்கு ஒரு முறை வருவதுண்டு. இரண்டாவது இவ்விரதங்களை சுட்டும் போது கூட மாதங்களை முன்னிறுத்துவதில்லை. மூன்றாவது இவ்விரதங்கள் வரும் மாதங்கள் அண்மையில் அதிக மாதங்களாக (இரண்டு அமாவாசை/இரண்டு பௌர்ணமி) வந்ததாக தெரியவில்லை.

பல்லாண்டுகளுக்கு பின்னரே இம்முறை ஆவணிச் சதுர்த்தி புரட்டாதியில் வந்துள்ளது. அத்துடன் வேறு விரதங்கள் போலன்றி இவ்விழா "ஆவணி" என்ற அடைமொழியோடு குறிப்பிடப்படுகிறது. இதற்கான காரணமாக ஆவணி மாத அமாவாசையை அடுத்த சதுர்த்தி என்றாலும் கூட இவ்வாண்டு ஆவணியில் இரண்டு அமாவாசைகள் வந்துள்ளன. இதனால் இந்த ஆவணியை அதிக மாதம் என்று சுபகாரியங்களை பலரும் விலக்கி வைத்ததும் அறியத்தக்கது.

இவ்வாறு இரு அமாவாசைகள் வருவதால் எந்த அமாவாசைக்கு அடுத்த சதுர்த்தி என்றும் சிலர் குழப்பமடையக் கூடும். இவ்வாறு பொதுவாக ஒரு மாதத்தில் இரு திதிகள், இரு நட்சத்திரங்கள் வரும்போது இரண்டாவதையே அனுசரிக்க வேண்டும் என்பது ஆகமவிதி.

அவ்வகையில் இவ்வாண்டு ஆவணி 30 ஆம் நாள் கடந்த 15 ஆம் திகதி சனிக்கிழமை வரும் அமாவாசையே விநாயக சதுர்த்திக்கான 'விரத நிர்ணய அமாவாசை'யாக கருதப்பட்டது. இவ்வகையில்தான் இன்று விநா



யக சதுர்த்தி விழா கொண்டாடப்படுகின்றது.

சிலர் இவ்வாறு விநாயக சதுர்த்தி புரட்டாதி மாதம் வருவதற்கான காரணமாக ஆவணி அதிக மாதமாவதும். எனவே, அதிக மாதம் 'விநாயகர் பிறப்பு விழா' ஆகிய இவ் விரதத்தை கொண்

நீர்வை தி.மயூரகிரிசர்மா

டாட முடியாத மாதம். எனவேதான் புரட்டாதியில் கைக்கொள்ளப்படுவதாக காட்டுகிறார்கள்.

ஆனால், இந்தக் காரணம் ஏற்றுக் கொள்ள முடியாததாகின்றது. ஏனெனில் இதே அதிகமாத ஆவணியில் 22 ஆம் நாள் வெள்ளிக்கிழமை ஆகிய கிருஷ்ண பக்ஷ அட்டமி அன்று (07.09.2012) "கிருஷ்ணபகவானின் பிறப்பு விழா" ஆகிய ஸ்ரீ கிருஷ்ண ஜெயந்தி எமது வாக்கியம், திருக்கணிதம் எனும் இரு பஞ்சாங்கத்திலும் குறிக்கப்பட்டு கொண்டாடப்பட்டிருக்கின்றது.

இதன்படி இவ்வாண்டு புரட்டாதியில் விநாயக சதுர்த்தி நிகழ்வதற்கான காரணத்தை அன்பர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

# பொதுநலவாய தலைவர்களுக்கு அபிவிருத்தி குறித்து விளக்கப்படும்

## வெளிவிவகார அமைச்சு தெரிவிப்பு

(கொழும்பு)

எதிர்வரும் ஆண்டு நவம்பர் மாதம் இலங்கையில் நடைபெறவுள்ள பொதுநலவாய நாடுகள் தலைவர்கள் மாநாட்டில் யுத்தத்தின் பின்னரான அபிவிருத்திகள் வெளிக்காட்டப் படவுள்ளதாக வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றியபோது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

யுத்தத்தின் பின்னர் நாட்டில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் தொடர்பில் உலக சமூகத்திற்கு எடுத்தியம்ப பொதுநலவாய நாடுகள் தலைவர்கள் மாநாட்டை பயன்படுத்திக் கொள்ள முடியும் என வெளிவிவகார அமைச்சர் தெரிவித்துள்ளார்.

நாட்டின் சமாதான நிலைமைகள் தொடர்பில் பொதுநலவாய நாடுகள் பாராளுமன்ற அமர்வுகளில் கலந்து கொண்ட உறுப்பினர்கள் நேரடியாக பார்வையிட்டு விளங்கிக் கொண்டதாகத் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டு வரும் போலிப் பிரசாரங்கள் மற்றும் குற்றச்சாட்டுக்களுக்கு பதிலளிக்கக் கூடிய சந்தர்ப்பம் கிடைக்கப் பெற்றதாகக் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# பொதுத்துறை ஊழியர்களின் சம்பளம் 13 ஆயிரத்தால் உயர்த்தப்பட வேண்டும்

(கொழும்பு)

பொதுத்துறை ஊழியர்களின் சம்பளம் 13 ஆயிரம் ரூபாவினால் உயர்த்தப்பட வேண்டுமென முன்னாள் ஜே.வி.பி. பாராளுமன்ற உறுப்பினரும் தொழிற்சங்கத் தலைவருமான கே.டி.லால்காந்த கோரிக்கை விடுத்துள்ளார்.

எதிர்வரும் நவம்பர் மாதம் சமர்ப்பிக்கப் படவுள்ள 2013 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் அரசாங்கம் சம்பள உயர்வு வழங்கப்பட வேண்டுமென வலியுறுத்தியுள்ளார்.

தற்போதைய அரசாங்கத்தின் ஆட்சிக் காலத்தில் வாழ்க்கைச் செலவு 13 ஆயிரத்து 442 ரூபாவினால் உயர்வடைந்துள்ளதாகவும் இதேயளவு சம்பளம் உயர்த்தப்பட வேண்டுமெனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கடந்த ஆண்டு வரவு செலவுத் திட்டத்தின் போது 10 ஆயிரம் ரூபாவினால் சம்பளங்கள் உயர்த்தப்பட வேண்டுமென தொழிற்சங்கங்கள் கோரிக்கை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

வாழ்க்கைச் செலவிற்கு ஏற்ற வகையில் சம்பளம் உயர்த்தப்படும் என தேர்தல் காலத்தில் ஜனாதிபதி அளித்த வாக்குறுதி உரிய முறையில் நிறைவேற்றப்படவில்லை என லால்காந்த குற்றம் சுமத்தியுள்ளார். (அ-2)

# ஞானச்சுடர் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவையின் ஆவணி மாத வெளியீடான ஞானச்சுடர் நூல் வெளிவந்துள்ளது.

இந்நூலானாது கந்தரனுபூதி, ஸ்ரீரமண நினைவலைகள், சிறுவர் கதைகள், உனக்கு ஒரு உபதேசம், திருவண்டப்பகுதி, வாழ்க்கையின் தத்துவம், திருவடி போற்றுவோம் போன்ற தொடர்களைத் தாங்கி வந்துள்ளது. (அ-9)

# விநாயகர் சதுர்த்தி

(இருபாலை)

நல்லூர் ஸ்ரீ சந்திரசேகரப்பிள்ளையார் ஆலயத்தின் விநாயகர் சதுர்த்தித் திருவிழா இன்று புதன்கிழமை காலை 6.30 மணிக்கு 1008 சங்காபிஷேகத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து பஞ்சமுக அர்ச்சனையும் நடைபெற்று நண்பகல் பூஜை நிறைவு பெறும். மாலை 6 மணிக்கு காரை எம்.பி.அருளானந்தத்தின் விநாயகர் விரதத்தின் மகத்துவம் என்ற தலைப்பிலான தெய்வீகச் சொற்பொழிவு நடைபெறும்.

இரவு 7 மணிக்கு வசந்த மண்டபப்பூஜை நடைபெற்று சுவாமி உள் வீதி, வெளிவீதி வலம் வருதலும் நடைபெறும். (அ-9-136)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புரட்டாதி மாத இராசி பலன்

## 17.09.2012 - 16.10.2012



## சிம்மம்

மகம், பூரம், உத்தரம்
1 ஆம் பாதம்

**விருப்பங்கள் நிறைவேறும் நேரம்!**

**தைரியமும், தன்னம்பிக்கையும் கொண்டு தக்கவிதத்தில் வாழ்க்கை நடத்தும் சிம்ம இராசி நேயர்களே!**

ஒரு காரியத்தை செய்து முடித்தால் உடனடியாக பலன் கிடைக்க வேண்டுமென்று நினைப்பவர்கள் நீங்கள். சுயநலத்தைக் காட்டிலும், பொது நலத்தில் ஆர்வம் அதிகம் இருக்கும். சில சமயங்களில் சுய நலமும் குடிகொண்டிருக்கும். கௌரவம், அந்தஸ்து மிக்கவர்களின் பட்டியலில் முதலிடம் பிடிப்பீர்கள். காற்றுள்ள போதே தூற்றிக் கொள் என்ற பழமொழிக்கு இலக்கணமாக வாழ்பவர்களும் நீங்கள்தான்.

உங்களுக்கு இந்த புரட்டாதி மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்திலேயே விரயாதிபதி தனஸ்தானத்தில் இராசி நாதனுடன் கூடி சஞ்சரிக்கப்போகிறார். அத்தோடு, தனாதிபதி புதனும் தன ஸ்தானத்திலேயே உச்சம் பெற்றிருக்கிறார். எனவே, பொருளாதாரத்தைப் பொறுத்தவரை நிறைவான அமைப்பு உருவாகும்.

புதிய தொழில் தொடங்கும் திட்டங்களை நிறைவேற்றிக் கொள்வீர்கள். வாழ்க்கைத்தேவைகள் பூர்த்தியாகும். வளர்ச்சி கூடும். அரசு வழியில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைத்து மகிழ்ச்சியடைவீர்கள். சகோதர ஸ்தானத்தில் செவ்வாயும், சனியும் கூடி சஞ்சரிப்பதால் உடன்பிறப்புகள் வழியில் எதிர்பாராத விரயங்கள் ஏற்படலாம். உள்ளத்தில் ஒன்றும், உதட்டில் ஒன்றும் வைத்துப் பேசுபவர்களை இனம் கண்டு கொள்வீர்கள்.

நல்லது. வாகனங்களில் பயணம் செய்யும் பொழுதும், விழிப்புணர்ச்சி கூடுதலாக தேவை. அடுத்த பத்து நாட்கள் புதன் பெயர்ச்சியால் பொருளாதார நிலை உயரும். மாதத்தின் கடைசி பத்து நாட்கள் மகிழ்ச்சிக்குரிய சம்பவங்கள் நடைபெறும்.

**விருச்சிக செவ்வாயும்**
**துலாம் புதனும்!**

விருச்சிக இராசியில் செவ்வாய் செப்ரம்பர் 27 ஆம் திகதி முதல் சஞ்சரிக்கப்போகிறார். அதேநாளில் துலாம் இராசிக்கு புதனும் செல்கிறார். இதன் விளைவாக, தொழில் மாற்றச் சிந்தனைகள் மேலோங்கும். தொகை எதிர்பார்த்தபடியே வந்து சேரும். கடை திறப்பு விழாக்களும், கட்டட திறப்பு விழாக்களும் காணும் சூழ்நிலைகூட ஒரு சிலருக்கு வந்து சேரும். புதிய பொறுப்புகளும், பதவிகளும், பொதுநலத்தில் ஈடுபட்டிருப்பவர்களுக்குக் கிடைக்கும்.

புதன் பெயர்ச்சியின் விளைவாக, சகோதர உறவு பலப்படும். விலகிச் இதன் விளைவாக ஆடை, ஆபரண சேர்க்கை அதிகரிக்கும். அடுத்தவர் நலன் கருதி எடுத்த முயற்சிகளில் ஆதாயம் கிடைக்கும். பெண்வழி பிரச்சினைகள் நல்ல முடிவிற்கு வரும். மூடிக்கிடந்த தொழிலுக்கு திறப்புவிழா நடத்துவீர்கள். குடும்பத்தில் ஏற்பட்ட குழப்பங்கள் அகலும். குருவின் வக்ர இயக்கத்தால் தந்தை வழி உறவில் இருந்த விரிசல் அகலும். பிள்ளைகளின் கல்யாண கனவுகளை நனவாக்குவீர்கள். புகழ் மிக்கவர்கள் உங்களுக்கு பின்னணியாக இருந்து பொருளாதாரநிலை உயர வழி வகுத்துக்கொடுப்பார்கள்.

இம்மாதம் சிவாலய வழிபாடு உங்களுக்கு சிறப்பினை வழங்கும்.

இம் மாதம் சனி விலகிய சந்தோஷத்தில் இருந்த உங்களுக்கு தொடக்கத்தில் செவ்வாயுடன், சனி சேருவதால் கூடுதல் கவனம் செலுத்த வேண்டிய சூழ்நிலை ஏற்படலாம். இருப்பினும், பணப்பற்றாக்குறை ஏற்படாது. உடன்பிறப்புகளை

## தொழில் மாற்றச் சிந்தனை மேலோங்கும் புதிய பொறுப்புக்களும் பதவிகளும் கைகூடும்

அனுசரித்து செல்வதுதான் நல்லது. மாதத்தின் மையப்பகுதியில் மங்கல நிகழ்ச்சிகள் நடைபெறுவதற்கான அறிகுறிகள் தோன்றும். கணவன்-மனைவிக்குள் கனிவு கூடும். பிள்ளைகளின் நலன் கருதி எடுத்த முயற்சிக்கும் பெரிய மனிதர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும்.

சில நேரங்களில் விட்டுக்கொடுத்து செல்லவேண்டிய சூழ்நிலை உருவாகும். என்ன இருந்தாலும், சனி, செவ்வாய் சேரக்கை காலத்தில் அதாவது, இந்த மாதத்தின் முதல் பத்து நாட்கள் கூடுதல் கவனம் செலுத்த வேண்டிய நேரமாக அமைகிறது. பிறருக்கு பொறுப்புச் சொல்வதைத் தவிர்ப்பது சென்றவர்கள் விரும்பி வந்து சேருவர். உடன்பிறப்புகள் வழியில் மங்கல நிகழ்ச்சிகள் நடைபெறுவதற்கான அறிகுறிகள் தோன்றும்.

**சிம்ம சுக்கிரனின் சஞ்சாரமும்**
**ரிஷப குருவின் வக்ரமும்!**

சிம்ம இராசியில் சுக்கிரன் செப்ரம்பர் 28 ஆம் திகதி சஞ்சரிக்கப் போகிறார்.

## ஜோதிடக் கலைமாமணி சிவல்புரி சிங்காரம்

## கன்னி

உத்தரம் 2, 3, 4 ஆம் பாதங்கள்,
அத்தம் , சித்திரை 1, 2 ஆம் பாதங்கள்

**வாக்கு கொடுக்கும் முன் யோசிப்பது நல்லது!**

**கடமையை சரிவர செய்ய வேண்டும் என்று கருதும் கன்னி இராசி நேயர்களே!**

நீங்கள் உறவுக்கும் முக்கியத்துவம் கொடுப்பீர்கள், நட்புக்கும் முக்கியத்துவம் கொடுப்பீர்கள். அன்பாகப் பேசி அருகில் இருப்பவர்களிடம் காரியம் சாதித்துக் கொள்வதில் வல்லவர்கள். உங்கள் இராசிநாதன் புதனை கணக்கன் என்று வர்ணிப்பது வழக்கம். எனவே, எதையும் எடைபோட்டுப் பார்ப்பது, கணக்கு செய்வதெல்லாம் உங்களுக்கு கைவந்தகலை.

உங்களுக்கு இந்த புரட்டாதி மாதக்கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும்பொழுது, புத- ஆதித்ய யோகத்தோடும், குரு சந்திரயோகத்தோடும் மாதம் தொடங்குவதால் நல்ல வாய்ப்புகள் இல்லம் தேடி வரும். நீண்டநாள் ஆசைகள் நிறைவேறும். சொல்லை செயலாக்கிக் காட்ட முன்வருவீர்கள். துணிவும், தன்னம்பிக்கையும் கூடும். ஜென்மச்சனி விலகியதால் சிறுசிறு பிரச்சினைக்ளில் இருந்து விலக நேரிடும்.

ஆனால், வாக்கு ஸ்தானத்தில் சனியோடு செவ்வாய் கூடியிருக்கிறார். எனவே,, கொடுத்த வாக்கை காப்பாற்ற இயலுமா என்பது சந்தேகம் தான். எனவே, வாக்கு கொடுக்கும் முன் ஒருகணம் யோசிப்பது நல்லது. குடும்பத்தில் திடீர், திடீரென குழப்பங்கள் ஏற்பட்டு அகலும். மாதத்தின் முதல் 10 நாட்கள் யார் எதைச் சொன்னாலும் கண்டுகொள்ள வேண்டாம். பிறரை விமர்சிப்பதை தவிர்ப்பதும் நல்லது.

எண்ணங்கள் எளிதில் நிறைவேற, இறை வழிபாடு உங்களுக்குத் தேவை. குறிப்பாக அங்காரக வழிபாடும். ஆஞ்சநேயர் வழிபாடும் அமைதியை வழங்கும். கருநிற காகம் ஏறி... என்ற சனி கவசத்தை பாடி சனீஸ்வரரையும் வழிபட்டால் சந்தோஷம் நிலைக்கும். கூட்டு முயற்சியில் இருந்து விடுபட்டு, தனித்து இயங்கும் எண்ணத்தில் இருப்பவர்கள், சுய ஜாதகத்தில் தசா புத்தி பலம் அறிந்து செயற்படுவது நல்லது.

**விருச்சிக செவ்வாயும்**
**துலாம் புதனும்!**

விருச்சிக இராசியில் செவ்வாய் செப்ரம்பர் 27 ஆம் திகதி சஞ்சரிக்கப் போகிறார். அதேநாளில் துலாம் இராசிக்கு புதனும் செல்கிறார். அதன் விளைவாக சில நல்ல மாற்றங்கள் ஏற்படும். புதனின் பெயர்ச்சியால் வருமானம் திருப்தி தரும். குடும்பத்தில் நீண்டநாட்களாக தடைப்பட்ட சில காரியங்கள் தடையின்றி நடைபெறும். மாமன், மைத்துனர் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். சேமிப்பு உயரும். செவ்வாய் பெயர்ச்சியின் விளைவாக சொத்துக்களில் ஏற்பட்ட பிரச்சினை அகலும். சொந்தங்களில் சிலர் இதுவரை கருத்துவேறுபாடாக இருந்திருக்கலாம். அவர்கள் மனம் மாறி உங்களுடன் வந்து ஒட்டிக்கொள்வார்கள்.

**சிம்ம சுக்கிரனின் சஞ்சாரமும்**
**ரிஷப குருவின் வக்ரமும்!**

சிம்ம இராசியில் சுக்கிரனின் சஞ்சாரம் செப்ரம்பர் 28 ஆம் திகதி நிகழவிருக்கிறது. தனாதிபதி விரய ஸ்தானத்திற்கு வரும் இந்தநேரத்தில் திடீர் விரயங்கள் சில ஏற்படலாம். இருப்பினும் உச்ச சனியின் ஆதிக்கம் உங்களுக்கு வலுவாக இருப்பதால், பணவரவுக்கு பஞ்சம் ஏற்படாது. உடனுக்குடன் செலவாகும். என்பதால், சுபச்செலவுகளை மேற்கொள்வது நல்லது. வீடு கட்டும் பணி அல்லது வாங்கும் பணியை மேற்கொள்ளலாம். அதேநேரத்தில் அக்டோபர் மாதம் 12 ஆம் திகதி குரு வக்ரம் பெறு



## குருச்சந்திர யோகம் தொடங்கும் இம்மாதம் நல்ல வாய்ப்புகள் இல்லம் தேடி வரும்

வதால், தாய் வழி ஆதரவு பெருகும். பிள்ளைகள், உங்கள் சொல் கேட்டு நடப்பார்கள். கடல் பயண வாய்ப்புகள் கைகூடும்.

இந்த மாதம் சக்கரத்தாழ்வார் வழிபாடு சந்தோஷத்தை வழங்கும்.

இம்மாதம் உறவினர் பகை மாறும். உற்சாகம் உள்ளத்தில் குடிகொள்ளும். இரவு- பகலாக பாடுபட்டதற்கான பலன் கிடைக்கும். என்றாலும், இரண்டாமிடத்தில் செவ்வாய். சனி கூடியிருப்பதால் எதையும் ஒரு முறைக்கு இருமுறை யோசித்து செய்வது நல்லது. உடன்பிறந்த சகோதரர்களின் ஒத்துழைப்பு குறையலாம். கணவன்- மனைவிக்குள் அந்நியோன்யம் அதிகரிக்க அனுசரித்துச் செல்வது நல்லது. செவ்வாய் விரதமும், அம்பிகை வழிபாடும் செல்வ நிலையை உயர்த்தும். (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை செல்ல விரும்பவில்லை; இந்திய குடியுரிமை தாருங்கள்

## இலங்கை அகதிகள் கோரிக்கை

(கொழும்பு)

**இலங்கையில் தமிழர்களின் பூர்வீக இடங்கள் சிங்கள மக்களின் ஆதிக்கம் பெற்ற பகுதிகளாகி வருவதாக கேள்விப்படுகிறோம். அதனால் நாங்கள் இலங்கைக்கு செல்ல விரும்பவில்லை. இந்திய அரசு எங்களுக்கு குடியுரிமை வழங்க வேண்டும் என்று இலங்கை அகதிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.**

'புதுடில்லியில் கடந்த சனி, ஞாயிறு இரு தினங்கள் அகில இந்திய தமிழ் அமைப்புக்கள் மாநாடு நடைபெற்றது. இம்மாநாட்டில் நாட்டின் பல்வேறு மாநிலங்களிலிருந்தும் வெளிநாடுகளில் இருந்தும் தமிழ் அமைப்புகளை சேர்ந்த பிரதிநிதிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

மாநாடு குறித்தும் தங்களது எதிர்பார்ப்பு குறித்தும் செய்தியாளர்களிடம் அவர்கள் கூறியதாவது,

அகதிகள் முகாமை விட்டு நாங்கள் வெளி மாவட்டம் செல்வதற்கே முகாம் ஆணையாளரிடம் அனுமதி பெற வேண்டும். இந் நிலையில் டில்லித் தமிழ்ச்சங்கம் உலகத் தமிழர்களை ஒன்றுசேர்க்க ஒரு மாநாட்டை நடத்துகிறார்கள். வெளிநாடுகளில் வாழும் எங்களது உறவுகளை சந்திப்பதற்கான வாய்ப்பை எதிர்பார்த்து வந்தோம். பல்வேறு மாநிலங்களை சேர்ந்த தமிழர்களை பார்த்தபோது மனம் நெகிழ்ந்தது.

1983 ஆம் ஆண்டில் இலங்கையில் ஏற்பட்ட கலவரத்தின் போது அகதிகளாக இந்தியா வந்த தமிழர்களுக்கும் மலையகத் தமிழர்களுக்கும் அடைக்கலம் கொடுத்து ஆதரவுக் கரம் நீட்டிய இந்திய அரசையும் தமிழக அரசையும்எங்களால் மறக்க முடியாது.

தமிழகத்தில் உள்ள 117 முகாம்களில் சுமார் 70 ஆயிரம் அகதிகள் இருக்கிறோம். வெளிப்பதிவாக 50 ஆயிரம் அகதிகள் உள்ளனர். இவர்களில் 32 ஆயிரம் பேர் இந்திய வம்சாவளியை சேர்ந்தவர்கள். இலங்கையில் மலையகத் தேயிலை தோட்டங்களில் இருந்தவர்கள்.

எங்களுக்கு மத்திய மாநில அரசுகள் சலுகைகள் அளித்தாலும் குடியுரிமை, வாக்குரிமை இல்லாததனால் நாடற்றவர்களாக உணர்கிறோம். கல்வி, வேலைவாய்ப்பு, சொத்துரிமை என பலவற்றையும் முறைப்படி பெற முடியாதவர்களாக இருந்து வருகிறோம்.

இலங்கையில் சூழல் மாறுவதாக தெரியவில்லை. அப்படியே மாறினாலும் அங்கே செல்ல விரும்பவில்லை.

காரணம் அகதிகளாக இங்கு வந்த பலரும் முதியவர்களாகிவிட்டனர். அவர்களது குழந்தைகள் வளர்ந்து விட்டனர். அவர்களுக்கு இலங்கையும் அங்கிருக்கும் பழக்கம், கலாசாரம் தெரியாது. அவர்கள் இந்தியக் கலாசாரத்துடன் தங்களை இணைத்துக் கொண்டு விட்டனர்.

ஆகவே எங்களுக்கு இந்தியக் குடியுரிமை வழங்க வேண்டும். இலங்கையில் தமிழர்களின் பூர்வீக இடங்கள் சிங்கள மக்களின் ஆதிக்கம் பெற்ற பகுதிகளாக வருவதாக கேள்விப்படுகிறோம்.

நாங்கள் மீண்டும் இலங்கைக்கு சென்றால் எங்களை இந்தியர்களாகத்தான் பார்க்கின்றனர். அங்கிருந்து இங்கே வந்தால் இலங்கை அகதிகளாக பார்க்கின்றனர்.

இந்திய வம்சாவளியை சேர்ந்த பலரும் இந்தியக் குடியுரிமை பெற விரும்புவதால் இக்கோரிக்கைகைய மத்திய, மாநில அரசுகள் நிறைவேற்ற வேண்டும்.

இது குறித்து தமிழக முதல்வரையும் மத்திய அரசையும் அணுக டில்லி தமிழ்ச்சங்கம் மூலம் பயிற்சி மேற்கொள்ள இருக்கிறோம் என்றனர். (அ-2)

## மழை வேண்டி அபிஷேகம் செய்யுமாறு கோரிக்கை

### வட.மா. நி.இ.மா.ம

மழையற்று வாடும் அனைத்து மாவட்டங்களுக்கும் மழைவேண்டி நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை அனைத்து இந்து ஆலயங்களையும் அபிஷேகம் செய்யுமாறு வடமாநில இந்து மாமன்றம் கோரிக்கை விடுத்துள்ளது.

இந்த அபிஷேக பிரார்த்தனைகளுக்கு ஆலய தர்மகர்த்தாக்களை பூரண ஒத்துழைப்பு வழங்குமாறும் கோரப்பட்டுள்ளது.

தொடரும் வரட்சியால் விவசாயம், கால்நடைகள் என்பன அழிவடைந்து வருகின்றன. நோய்களும் தொற்றிக் கொண்டுள்ளன. எனவே, சைவப் பெருமக்கள் இவை நீங்க விசேட அபிஷேக ஆராதனைகளில் ஈடுபடுமாறு கேட்கப்பட்டுள்ளது. (அ)

## ரணிலை பதவி விலக்க சத்தியாக்கிரகம்?

### கிளர்ச்சிக்குழு தெரிவிப்பு

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க சத்தியாக்கிரக போராட்டம் நடத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

25 ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஆதரவாளர்களுடன் கொழும்பில் பாரிய சத்தியாக்கிரக போராட்டமொன்று நடத்தப்படவுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் கிளர்ச்சிக்குழு உறுப்பினர்கள் அறிவித்துள்ளனர்.

நாடு தழுவிய ரீதியில் பாரியளவில் சத்தியாக்கிரக போராட்டம் நடத்தப்படவுள்ளதாக குறிப்பிடப்படுகிறது.

ரணிலும் அவரது ஆதரவாளர்களும் கட்சியின் செயற்குழுவில் அங்கம் வகிக்கும் வகையில் கட்சியை ஒருபோதும் ஐக்கியப்படுத்த முடியாது என கிளர்ச்சிக்குழு உறுப்பினர் லால்பெரேரா தெரிவித்துள்ளார். ஐக்கிய தேசியக் கட்சியை ரணில் விக்ரமசிங்க சீரழித்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார். (அ-2)



யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் இரத்ததான நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் மேற்படி கல்லூரியின் உயர்தர வகுப்பு மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டு இரத்ததானம் வழங்குவதை படத்தில் காணலாம்.

## சிறுபான்மையின மக்களே கிழக்கை ஆளவேண்டும்

### காங்கிரஸ் உயர்பீடத்திற்கு தந்திகள்

(கொழும்பு)

கிழக்கு மாகாண சபையில் அரசுடன் இணைந்து ஆட்சியமைக்க ஆதரவளிக்க வேண்டாமென கோரி கிழக்கில் முஸ்லிம் பிரதேசங்களிலிருந்து ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் உயர் மட்டத்திற்கு தந்திகள், தொலைநகல்கள் அனுப்பி வைக்கப்பட்டு வருவதாக தெரியவருகிறது.

முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் அமைச்சர் ரவூப் ஹக்கீம், செயலாளர் நாயகம், பாராளுமன்ற உறுப்பினர் எம்.ரி.ஹசனலி ஆகியோருக்கே இவ்வாறு தந்திகள், தொலைநகல்கள் அனுப்பி வைக்கப்பட்டு வருகின்றன.

கிழக்கின் முஸ்லிம் பிரதேசங்களிலிருந்து பல்வேறு பொது அமைப்புக்களும் சமூகநல அமைப்புக்களும் விவசாயிகள், மீனவர் சங்கங்களும் இவற்றை அனுப்பி வருகின்றன என்றும் குறிப்பிடப்படுகிறது.

அரசுடன் சேர்ந்து கிழக்கில் ஆட்சியை அமைக்க வேண்டாமென இவ்வாறு தந்திகள், தொலைநகல்கள் மூலம் கோரப்படும் அதே வேளை தமிழ்த்தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து தமிழ், முஸ்லிம்கள் இணைந்த ஆட்சியொன்றை மலரச் செய்ய முஸ்லிம் எவ்வித தயக்கமுமின்றி முன்வரவேண்டுமெனவும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

தமிழ், முஸ்லிம் ஒற்றுமை மேலும் வலுப்பெறவும் அரசும் பேரினவாதமும் இந்த இரு சமூகங்களுக்கு இழைத்து வரும் அநீதிகளுக்கு பதிலடி கொடுக்கும் வகையில் சிறுபான்மையினங்களின் ஆட்சியொன்று கிழக்கில் ஏற்படவும் ஆதங்கம் கொண்டே முஸ்லிம்கள் வாக்களித்தனரெனவும் அவர்கள் சுட்டிக்காட்டுவதுடன் இந்த விடயத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தாராள விட்டுக் கொடுப்புடனான நிலைப்பாட்டை முஸ்லிம் காங்கிரஸ் உதாசீனம் செய்து விடக்கூடாதெனவும் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

## சரணாலயத்தில் தீ

(பொலன்கல)

பலாங்கொடை-கல்தொட்ட-பொலன்கல சரணாலயத்தில் பரவிய தீ தொடர்ந்தும் பரவி வருவதாக பலாங்கொடை பிரதேச செயலகம் தெரிவித்துள்ளது.

தீயினால் சரணாலயத்திற்கு பாரிய சேதங்கள் ஏற்பட்டுள்ளதாகவும் சேத விபரங்களை மதிப்பிடமுடியாத நிலை நிலவுவதாகவும் பலாங்கொடை பிரதேச செயலாளர் ஈ.எஸ்.ஜீ.எதிரிசிங்க தெரிவித்துள்ளார்.

ரஜவக்க தென்ன பகுதியில் இருந்து பரவ ஆரம்பித்துள்ள இந்த தீ பொலன்கல சரணாலயத்தின் கீழ் பகுதியின் ஊடாக கல்தொட்ட வைத்தியசாலை வரை பரவியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

தீயினை கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (அ-2)

## தேர்தல்களில் வெற்றியீட்டியோர் விபரம் வர்த்தமானியில் வெளியீடு

### தேர்தல் செயலகம் தெரிவிப்பு

நடைபெற்று முடிந்த கிழக்கு, சப்ரகமுவ, வடமத்திய மாகாண சபைகளுக்கான தேர்தலில் வெற்றிபெற்ற அனைவருடைய பெயர் விபரங்களும் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளதாக தேர்தல் செயலகம் அறிவித்துள்ளது.

நேற்று முன்தினம் மாலை இதற்கான பெயர் பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.

இம்மூன்று மாகாணசபைத் தேர்தலில் வெற்றிபெற்ற அனைவருடைய பெயர் விபரங்களும் கடந்த வியாழக்கிழமை வர்த்தமானியில் வெளியிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது.

கிழக்கு, சப்ரகமுவ, வடமத்தியமாகாண சபைகளுக்கான தேர்தல் கடந்த 8 ஆம் திகதி நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (அ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை வரலாறு

45


## மானவர்மன் பரம்பரையினரின் ஆட்சி

கலாநிதி. க.குணராசா (செங்கை ஆழியான்)
திருமதி. கமலா. குணராசா



மகிந்தன்

ஆனால், முன்னைய மன்னன் சீலமேகனுக்கு மகிந்தன் என்றொரு மகன் இருந்தான். அவனது சாதகத்தைக் கணித்த சோதிடர்கள் அவன் ஒரு இராச்சியத்தின் முடி மன்னாக வருவான் என அறிவித்தனர். இந்த விடயத்தை சீலமேகன் வெகு இரகசியமாகப் பேணினான். அவனுக்கு வயது வந்ததும் அவனை தனது படைத் தளபதியாக நியமித்தான். அவனுடைய தந்தை சீலமேகன் இறந்ததும், ஆட்சிக்கு உரிமை கோர அவன் விரும்பவில்லை. யுவராஜா அக்கபோதியையே அரசனாக வழி விட்டான். அக்கபோதி மன்னன் வாரிசில்லாமல் புலத்தி நகரில் இறந்த வேளையில் மகிந்தன் மாதோட்டத் துறைமுகத்தில் (மகாதீர்த்தம்) பணி நிமித்தம் தங்கியிருந்தான். மன்னனின் மரணத்தை அறிந்ததும், யாராவது துரோகிகள் ஆட்சியை அபகரித்துக் கொள்ளலாம் என்ற பயத்தில் உடனடியாகத் தலைநகரிற்கு விரைய முடிவு செய்தான். சூளவம்சத்தின் கூற்றின்படி உத்தரதேசத்தில் மீண்டும் ஒருமுறை, அனுராதபுர மன்னனுக்கு எதிராகக் கிளர்ச்சி தோன்றியது. அக்காலத்தில் மகிந்தன் அனுராதபுர அரசனாக இருந்தான். சிங்கள ஆட்சியாளனுக்கு எதிராகக் கிளர்ந்த கிளர்ச்சிக்குத் தலைமை தாங்கியவன் கலிங்க தேசத்தவனாக மணற்றியில் குடியேறியிருந்த உக்கிர சிங்கன் என்ற தலைவனாவான் எனத் துணியலாம்.



அனுராதபுர ஆட்சிக்காலம்- சிதைவடைந்து காணப்படும் குளிக்கும் குளம்

அதேவேளை உத்தரதேசத்தின் (வடபிராந்தியம்) தலைவர்கள் அந்த நிலையைச் சாதகமாக்கிக் கொண்டதுடன், இனிமேல் திறை செலுத்த மாட்டோமெனவும் அறிவித்தனர். உடனே தலைநகரிற்குச் செல்லாது, படையுடன் உத்தரதேசத்திற்குச் சென்று கிளர்ச்சி செய்த தலைவர்களையும், அவர்களது உதவியாளர்களையும் அடக்கியபின், தலைநகருக்கு விரைந்தான் என மஹாவம்சம் கூறும், மீண்டும் உத்தர தேசத்தலைவர்கள் ஒருங்கே கூடி, தலைநகருக்கு வந்து, அதனைத் தம் பொறுப்பில் எடுக்க முயன்றான். ஆனால், மகிந்தன் உத்தரதேசத் தலைவர்களை அடித்துத் துரத்திவிட்டான். அதன்பின்னர் அனுராதபுரம் மீண்டு அங்கு மன்னனின் மகாராணியோடு கலந்துபேசி, துக்கத்தில் பங்கு கொண்டான். ஆறுதல் கூறினான், "மகாராணியாரே, மன்னனின் பிரிவு ஈடு இணையற்ற துயரமாகும். நான் இலங்கைத் தீவின் பாதுகாப்பினைப் பொறுப்பேற்றுக் கொள்கின்றேன். நீங்கள் இந்த நாட்டை ஆளுங்கள்" என்றான். ராணி மௌனமாக இருந்தாள். எதுவும் பேசவில்லை. ஆனால், மகிந்தனைக் கொன்றொழித்து விடுவதற்கான இரகசியத்திட்டம் ஒன்றினை வகுத்தாள். இந்த இரகசியத்திட்டம் மகிந்தனுக்குத் தெரியவரவே ராணியையும் அவளது ஆட்களையும் கண்காணிக்குமாறு ஆட்களை நியமித்தான். அதன்பின் அவளைக் கைப்பற்றி, ஒரு கட்டிலில் கிடக்கவைத்துப் புலத்தி நகரிலிருந்து அனுராதபுரத்திற்கு எடுத்துவந்து காவலில் வைத்தான். திரவியங்களோடு அரசுரிமையையும் கைப்பற்றிக் கொண்டான்.



2 ஆம் நூற்றாண்டுக்குரிய புத்தர்சிலை




அபயகிரி விகாரையில் உள்ள நடுகல்

சீலமேகன் ஒரு சகோதரியின் மகனான தப்புலன் என்பான். அதிக செல்வம் நிறைந்தவனாகவும், தனக்கென ஒரு படையையும் கொண்டவனாகவும் இருந்தான். அவன் தனது சேனையோடு, காலவாவிக்கு வந்து, அங்கிருந்து சங்கமம் நோக்கி முன்னேறினான். மகிந்தன் உடன் தன் சேனா வீரர்களுடன் தப்புலனின் படையை எதிர்கொண்டான். அப்படையுடன் மகிந்தன், ராணியையும் கூடவே அழைத்து வந்தான். கடும் யுத்தத்தில் தோல்வி கண்ட தப்புலன் மலையதேசத்திற்கு தப்பி ஓடினான். மகிந்தனின் வெற்றி உறுதிப்படுத்தப்படுகின்றது.

அதன்பின்னர் மலையதேசத்திலிருந்த தப்புலன், மீண்டு படை திரட்டினான். அவன் தனது சகோதரியின் இருபுதல்வர்களையும் உருகுணையிலிருந்து அவர்களது ஆள் அணிகளுடன் வருமாறு அழைப்பித்தான். பெருஞ்சேனையுடன் தப்புலன் கடலென தலைநகரை நோக்கி நகர்ந்தான். அவனது படையை மகிந்தன் நிர்மூலமாக்கினான். தப்புலன் தப்பி உருகுணைக்கு ஓடிச் சென்றான். இதனை அறியாது சற்றுத் தாமதமாக வந்த இரு இளவரசர்களின் படைகளும் மகிந்தனால் நிர்மூலமாக்கப்பட்டதுடன், இரு இளவரசர்களும் கைதாகினர். அத்துடன் பச்சின தேசத்திற்கும் (கிழக்கு மாநிலம்) தக்கிண தேசத்திற்கும் (வடக்கு மாநிலம்) தன் படைகளை அனுப்பி அங்கெழுந்த கிளர்ச்சிகளை அடக்குவித்தான். அதன்பின்னர், மகிந்தன் தனது ராணியாக, தான் ஏற்கனவே கைது செய்து காவலில் இருப்பவளுமான, முன்னைய மன்னன் அக்கபோதியின் மனைவியைத் தனது பட்டத்து ராணியாக்கிக் கொண்டான். அதன்பின்னர் ராணியானவள், மன்னனுக்குப்பெரும் உதவியாக அமைந்தாள். அவர்களுக்கு ஒரு மகன் பிறந்தான். பின்னர் அவன் நாட்டின் யுவராஜாவானான்.

பச்சனதேசத்தில் (கிழக்குப் பிராந்தியம்) இரண்டு ஆதிபாதாக்கள் (ஆட்சித் தலைவர்கள்) இருந்தனர். அவர்கள் அனுராதபுர மன்னனுக்கு எதிராகப் படைதிரட்டினர். படைதிரட்டியபின்னர். உருகுணையிலிருந்த தப்புலனுக்குச் செய்தி அனுப்பினர். அவனது சேனையையும் இணைத்துக் கொண்டு மகாகங்கையின் கரையில் பாசறை அமைத்துக் கொண்டான். இதனைக் கேள்விப்பட்ட மன்னன், அங்குமிங்குமாக இயங்கிய பிராந்தியத் தலைவர்களை (ஆதிபாதாக்கள்) அரண்மனைக்கு அழைத்தான். அவர்களை தன்னோடு இணைந்து செயற்படுமாறு கேட்டுக்கொண்டான். மறுத்தவர்களில் சிலர் சிறையிடப்பட்டனர். சிலரின் தலைகள் துண்டிக்கப்பட்டன. அதன்பின்னர் நகரத்தின் பாதுகாப்புக்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டபின்னர், பெரும் சைனியத்துடனும் ராணியுடனும் யுத்தகளத்திற்குப் புறப்பட்டு மாகும்மாரை என்ற விடத்தில் பாசறை அமைத்தான். பின்னர் கோவிஜறகமத்தில் பெரும் போர் மூண்டது. அதில் மன்னனின் படை எதிரி படைகளைத் துடைத்தெறிந்தது. தப்புலன் தப்பி ஓட, ஏனைய இரு ஆதிபத்தாக்களும் கொல்லப்பட்டனர். (தொடரும்)



ஜேத்தவன விகாரை வெளிப்புறத்தில் செதுக்கப்பட்டிருக்கும் சிற்பங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகதிகளை தடுத்து வைக்க ஆஸியில் புதிய முகாம்

## ஆஸி.அமைச்சர் கிறிஸ்போவன் தெரிவிப்பு

இலங்கை அகதிகளை தடுத்து வைப்பதற்கான பி.என்.ஜீ.மனாஸ்தீவில் புதிய முகாம் ஒன்றை அமைக்க அவுஸ்திரேலிய அமைச்சர் கிறிஸ்போவன் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஏற்கனவே நெஹ்ரு தீவில் ஆயிரத்து 200 பேர் தங்கக்கூடிய முகாம் ஒன்று நிர்மாணிக்கப்பட்டுள்ளது. இதற்கு மேலதிகமாக இன்னும் 800 பேரை தங்க வைக்கக்கூடிய முகாம் ஒன்றை இந்த தீவில் அமைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. இந்த பணிகளுக்கு நெஹ்ரு தீவிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள அகதிகளே பயன்படுத்தப்படுவர்.

மேலும் அவுஸ்திரேலியாவின் பசுபிக் திட்டத்தின் கீழ் மேலும் ஒரு தொகுதி இலங்கையர்கள் நெஹ்ரு தீவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். அவர்கள் நேற்று காலை நெஹ்ரு தீவை அடைந்தனர்.

சீ 122 வானூர்தி மூலம் இவ்வாறு 20 தமிழர்கள் நெஹ்ரு தீவை சென்றடைந்தனர். கிறிஸ்மஸ் தீவிலுள்ள அகதிகளை வேறு முகாம்களுக்கு மாற்றி பசுபிக் திட்டத்தை அவுஸ்திரேலிய அரசாங்கம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து கடந்த மாதம் நிறைவேற்றிக் கொண்டது.

இதன் அடிப்படையிலேயே அகதிகள் கட்டம்கட்டமாக நெஹ்ரு மற்றும் பப்புவா நியூ கினியா போன்ற தீவுகளுக்கு மாற்றப்பட்டு வருகின்றனர். ஏற்கனவே கடந்த வாரம் 40 பேர் கொண்ட தமிழ் அகதிகளின் குழு ஒன்று நெஹ்ரு தீவுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# என்னை பழிவாங்கும் நோக்கில் மகனை கைது செய்துள்ளனர்

## அமைச்சர் மேர்வின் தெரிவிக்கிறார்

என்னைப் பழிவாங்கும் நோக்கிலேயே எனது மகனை கைது செய்துள்ளனர் என அமைச்சர் மேர்வின் சில்வா தெரிவித்துள்ளார். பெற்றோர் அரசியலில் ஈடுபடுவது தவறில்லை எனவும் பிள்ளைகளை கூடுதலாக பிரபல்யப்படுத்த வேண்டாம்.இதனை அனுபவ ரீதியில் நான் தெரிவிக்கின்றேன்.

பொறாமையினால் பாதிக்கப்பட்ட நபர்கள் பெற்றோரிடம் பழிவாங்க முடியாது. பிள்ளைகளை இலக்கு வைக்கின்றார்கள். நான் அந்த நிலைமையையே எதிர்நோக்கி வருகின்றேன்.

சாதாரண ஒருவர் இந்த மோதலில் ஈடுபட்டிருந்தால் அவரைத் தவிர வேறு எவருக்கும் இந்த விடயம் தெரிந்திருக்காது. நான் அமைச்சர் என்ற காரணத்தினால் தேவையற்ற பிரசாரம் வழங்கி இன்று எனது மகன் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

பௌத்த மதத்தை வழிபாடு செய்கின்ற காரணத்தினால் கவலைகளையும் வேதனைகளையும் பொருட்படுத்தமாட்டேன். ஜனாதிபதிக்கு என்னைப் பற்றி நன்கு தெரிந்த காரணத்தினால் எனக்கு அமைச்சுப் பதவி வழங்கினார். இதனைத் தாங்கிக்கொள்ள முடியாத சிலர் என்னை பழிவாங்க முயற்சிக்கின்றார்கள்.

என்னைப் பழிவாங்கினால் பரவாயில்லை. எனது பிள்ளைகளை பழிவாங்க வேண்டாம் என பொறாமைக்காரர்களிடம் கோருகின்றேன் என மேர்வின் சில்வா தெரிவித்துள்ளார். (அ-2)

## காதல் விவகாரம்; பிரிந்தது உயிர்

(மாத்தறை)

மாத்தறை திஹாகொட பிரதேசத்தில் ஒருவர் குண்டை வெடிக்கச் செய்து உயிரிழந்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

காதல் பிரச்சினையின் காரணமாக இவர் குண்டை வெடிக்கச் செய்து தற்கொலை செய்து கொண்டுள்ளார். வாகனம் ஒன்றினுள் இந்நபர் குண்டை வெடிக்கச் செய்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. (அ-2)

## நீராடச் சென்றவர் நீரில் மூழ்கி உயிரிழப்பு

(ஹிங்குராங்கொட)

ஹிங்குராங்கொட வாவியில் நீராடச் சென்று நீரில் மூழ்கி உயிரிழந்த இளைஞனின் சடலம் மீட்கப்பட்டுள்ளது. மீட்கப்பட்ட 18 வயதான இளைஞனின் சடலம் நேற்று முன்தினம் பிரேத பரிசோதனைகளுக்காக ரிகில்லகஸ்கட வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் கூறியுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ-2)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

# பனை

**Botanical Name- Borassus flabellifer**
**Family-Palmae**
**Engl- Palmyrah tree**
**Sinh-Tal**

பனை மரம் ஓடகம்,தாலம், புற்பதி, தாளி என்றும் அழைக்கப்படுகிறது. காற்றுத் தடைப்பயிராக வெப்ப மண்டல நாடுகளில் வளர்க்கப்படுகிறது. இது தானாக வளரக் கூடியது. 20 தொடக்கம் 30 மீற்றர் உயரமும் 50 தொடக்கம் 75 செ.மீ. குறுக்களவுள்ள கிளைக்காக உறுதியான உதிர்ந்த இலைகளின் தழும்புகள் நிறைந்த தண்டைப் பெற்றிருக்கும். இலைகள் விசிறி போன்றும் ஒரு மீ. தொடக்கம் 1.5 மீ. குறுக்களவில் விறைப்பாக இருக்கும். இலையில் 60 தொடக்கம் 80 நீள் கூறுகள் இருக்கும். ஆண் பூக்கள் தனி மரத்திலும் பெண் பூக்கள் தனி மரத்திலும் உண்டாகும். இது 100 ஆண்டுகளுக்குப் பின்னும் வளரும் தன்மை கொண்டது.

**100 கிராம் நுங்கு, பனங்கட்டியில் உள்ள சத்துக்கள்**


| | நுங்கு | பனங்கட்டி | பனம் பழச்சாறு |
|---|---|---|---|
| நீர் | 92.69 g | 3.2 g-8.9 g | 72.22 g |
| புரம் | 0.64 g | 1.4 g | 0.67 g |
| காபோவைதரேற்று | 6.29 g | -- | 21.28 g |
| உயிர்ச்சத்து C | 13.10 g | 7.3-33 mg | 24 g |
| கொழுப்பு | -- | -- | 0.15 g |
| சுக்ரோஸ் | -- | 76.7 g | -- |
| குளுக்கோஸ் | -- | 1.83 g | -- |
| கல்சியம் | -- | 140-283 mg | -- |
| பொஸ்பரஸ் | -- | 16-27 mg | -- |
| இரும்பு | -- | 6-10 mg | -- |

### மருத்துவப் பண்புகள்

❖ பனஞ்சாறு, பனங்கற்கண்டு, நுங்கு, கிழங்கு, பனை ஓலை மருத்துவக் குணங்கள் மிக்கவை. பனை ஓலையால் செய்யப்பட்ட விசிறி, அதனால் கிடைக்கப்பெற்ற காற்று உடலுக்கு நல்ல ஆரோக்கியத்தை தரும். பனஞ்சாறு- பதநீர் என அழைக்கப்படும் (சுண்ணாம்பு கலந்தது) மருந்துக்கு பயன்படுகிறது. புளிக்காத பதநீரை காலையில் அருந்த-

➢ சக்தி அதிகரிக்கும்
➢ சிறுநீர் பெருகும்
➢ மலச்சிக்கல் தீரும்

❖ பதநீரை தேமல் நோய்க்கு தடவலாம்-



➢ உட்சூடு தணியும்
➢ குளிர்ச்சியுண்டாகும்

❖ வெப்ப காலத்தில் இதை அருந்தி வர நாட்பட்ட வயிற்றுப்புண், தோல் நோய்கள் குணமாகும்.

❖ பதநீரில் இருந்து பனை வெல்லம் (கருப்பட்டி) மற்றும் பனங்கற்கண்டு தயாரிக்கப்படுகிறது.

❖ பனை வெல்லம் அல்லது கல்லாக்காரமானது அநேக மருந்துகளில் சேர்க்கப்படுவதோடு உடற்சூடு, நீர்ச்சுருக்கு, அம்மை நோயால் ஏற்பட்ட வெப்பம் ஆகியவற்றை தணிக்கும்.

❖ பனங்கற்கண்டோடு பாதாம்பருப்பை சேர்த்து சாப்பிட சிறுவர்களுக்குண்டாகும் ஆஸ்துமா, இருமல் நீங்கும்.

❖ பனை வெல்லம் கலந்து- சுக்கை குடிநீர் செய்து குடிக்க காய்ச்சல், மாந்தம் நீங்கும்.

❖ நுங்கு, இளநுங்கை சாப்பிட சுவையாக இருப்பதோடு பசியையும் தூண்டி உடலுக்கு குளிர்ச்சியை கொடுக்கும். சீதக் கழிச்சலை குணமாக்கும்.

❖ நுங்கு நீரை வியர்க்குருவுக்கு தடவி வர வியர்க்குரு நீங்கும்.

❖ பனம் பிஞ்சின் சாற்றை காயங்களுக்கு தடவ இரத்த ஒழுக்கை நிறுத்தும்.

❖ பனம்பாளையை சுட்டுச் சாம்பலாக்கி 1



தொடக்கம் 2 கிராம் அளவு கொடுக்க பித்த நோய்கள் தணியும்.

❖ பனம்பழம் இனிப்பாக இருக்கும். அதனைச் சுட்டு அதன் மஞ்சள் நிறக்களியை உண்ணலாம். இதன்மூலம் உயிர்ச்சத்து A, C, கல்சியம், பொஸ்பரஸ் ஆகியன கிடைக்கும். இது சிறந்த மலமிளக்கியாக செயற்படும். இதனைப் பனங்காய்ப் பலகாரமாக செய்து உண்ணலாம்.

❖ குழந்தைகளுக்கு மலச்சிக்கல் (சளி ஏற்படாமல் இருக்க உணவுடன் பனை வெல்லத்தை சேர்த்து பயன்படுத்தலாம்)

❖ பனங்கட்டியில் **Non-Reducing Suger** (தாழ்த்தப்படாத வெல்லம்),கூடுதலாக இருப்பதால் நோயிலிருந்து விடுபட்டு உடல் தேறி வருபவர்களுக்கு சக்தி அளிக்கும் உணவாகவும் பயன்படுத்தலாம். எனவே, கஞ்சி வகைகள், ஆடிக்கூழ், எள்ளுப்பாகு ஆகியவற்றில் பனங்கட்டி சேர்ப்பது சிறந்தது.

எனவே, குழந்தைகள், கர்ப்பிணிகள், முதியோர்கள், பாலூட்டும் தாய்மார்கள் என்பவர்களுக்கு இது சத்துமிக்க உணவாகும். எனவே, குழந்தைகளுக்கு குடிநீர், கோரோசனை மாத்திரை கொடுக்கும் போது பனங்கற்கண்டு அனுபானத்தில் வழங்க வேண்டும்.

❖ ஒடியலிலிருந்து தயாரிக்கப்படும் ஒடியல் பிட்டு, ஒடியல் கூழ் ஆகியன மலமிளக்கியாக செயற்பட்டு குடலை சுத்தம் செய்யும். உடற்பருமனை குறைத்து உடலை ஆரோக்கியமாக வைத்திருக்க உதவும். மற்றும் அவித்த கிழங்கை இரண்டாகப் பிளந்து காய வைத்து புழுக்கொடியாக பயன்படுத்தலாம். புழுக்கொடியல் மா- சத்து மா போன்றது.

இதில் இன்னொரு முக்கிய விடயம் பனங்கிழங்கு,ஒடியல்மா என்பன பூஞ்சணம் பிடிக்கும் போது அப்பூஞ்சணம் **Aflatoxin** எனும் ஒரு நஞ்சு உருவாகும். இது ஈரலில் நஞ்சை விளைவிக்கும். எனவே, பனை உணவுகளை பயன்படுத்துவோர் அதை பூஞ்சணம் பிடிக்காது பாதுகாத்து பயன்படுத்துவதால் உரிய மருத்துவப் பயன்களை பெற்றுக் கொள்ளலாம்.

எனவே, போஷாக்கு நிறைந்ததும் பொருளாதார ரீதியில் இலகுவாக கிடைக்கக்கூடியதுமான பனம்பழத்தையும் பனை உணவு மருத்துவப் பொருட்களையும் பயன்படுத்தி பயனைப் பெற்றுக்கொள்ளவும்.

**திருமதி விவியன் சத்தியசீலன்(M.D.C.S)**
**சிரேஷ்ட விரிவுரையாளர் சித்த மருத்துவத்துறை**
**யாழ். பல்கலைக்கழகம் கைதடி**

**100 கிராம் பனம்பழம் மற்றும் பனை நுங்கிலுள்ள சத்துக்கள்**

| | பழம் | நுங்கு |
|---|---|---|
| புரதம் (கி) | 0.7 | 0.6 |
| கொழும்பு (கி) | 0.2 | 0.1 |
| நார்ப்பொருள் (கி) | 0.5 | 0.3 |
| மாவுப் பொருள் (கி) | 20.7 | 6.5 |
| கல்சியம் (மி.கி) | 9 | 10 |
| பொஸ்பரஸ் (மி.கி) | 33 | 20 |
| இரும்பு (மி.கி) | — | 0.5 |
| ரைபோ பிளேவின் (மி.கி) | — | 0.01 |
| நியாசின் (மி.கி) | — | 0.01 |
| விற்றமின் C (மி.கி) | — | 0.2 |
| கரோட்டின் (மைக்ரோ கிராம்) | — | 0.4 |
| சக்தி (கிலோ கலோரிகள்) | 87 | 29 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சலுகைகளுக்காக அரசுடன் பேச நாம் தயாரில்லை

## செல்வம் எம். பி. தெரிவிப்பு

நாங்கள் சலுகைகளை அடிப்படையாகக் கொண்டு பேசமுடியாது. தமிழ் மக்களின் உரிமை தொடர்பில் பேசி ஒரு இணக்கப்பாட்டுக்கு வருகின்றபோதுதான் அரசாங்கத்துடன் இணைந்து ஆட்சியமைக்கும் நிலை உருவாகும் என தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு நகரில் உள்ள தமிழீழ விடுதலை இயக்க அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இங்கு தொடர்ந்து கருத்துத் தெரிவித்த அவர்,

தமிழ்த் தேசிய கூட்டமைப்பு உறுப்பினர்களுக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதையடுத்து இது தொடர்பில் தேர்தல் ஆணையாளருக்கு முறைப்பாடு தெரிவித்துள்ளோம். தேர்தல் ஆணையாளர் இங்கிருக்கும் பாதுகாப்பு உயரதிகாரிகள் மற்றும் எமது உறுப்பினர்களுக்கு பாதுகாப்பு வழங்குமாறு கூறியுள்ளார்.

அந்த வகையில் இங்கிருக்கும் பிரதிபொலிஸ்மா அதிபரிடம் இதுதொடர்பில் ஆணை வழங்கியுள்ளதாக தேர்தல் ஆணையாளர் கூறியுள்ளார்.

அது தொடர்பில் பொலிஸ்மா அதிபருக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் பாதுகாப்புவழங்குமாறு ஆணை கிடைத்தவுடன் பாதுகாப்பு வழங்கப்படும் எனவும் பிரதி பொலிஸ்மா அதிபர் உறுதியளித்துள்ளார்.

தமது உறுப்பினர்களின் பாதுகாப்பு தொடர்பில் தமிழ்த்தேசிய கூட்டமைப்பு நடவடிக்கையெடுத்து வருகின்றது. அரசாங்கத்துடன் தேசிய அரசாங்கம் அமைக்கும் நிலையேற்படுமாகவிருந்தால் எங்களது கோரிக்கைகளை நிபந்தனையாக ஏற்றுக் கொள்ளப்படும் சந்தர்ப்பத்திலேயே இந்த அரசாங்கத்துடன் இணைந்து செயற்படுவதான முடிவு எடுக்கப்படும் என தெரிவித்துள்ளார். (அ-2)

# கிழக்கு ஆட்சி குறித்து பேச இதுவரை அழைப்பில்லை

## சுமந்திரன் எம். பி. தெரிவிப்பு

கிழக்கு மாகாணத்தில் ஆட்சியை அமைப்பது தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்த ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி இதுவரை தமக்கு அழைப்பு விடுக்கவில்லை என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

கிழக்கு மாகாணத்தில் ஆட்சியமைக்க பேச்சுவார்த்தைகள் நடத்தத் தேவையில்லை எனவும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவு வழங்கினால் ஆட்சியமைக்க முடியும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசுடன் பேச்சுவார்த்தை நடத்தியது. ஆனால் ஆதரவு வழங்குவதா இல்லையா என்பது குறித்து காங்கிரஸ் இன்னும் அறிவிக்கவில்லை.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு ஆதரவு வழங்கினால் கிழக்கு மாகாண முதலமைச்சர் பதவி அவர்களுக்கு வழங்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-2)

# தமிழ்நாடு வணிக பேரவை உறுப்பினர்கள் 21 இல் வருவர்

தமிழ்நாடு வணிக மற்றும் கைத்தொழில் பேரவையை சேர்ந்த 45 உறுப்பினர்களை கொண்ட தூதுக் குழுவொன்று மதுரையில் இருந்து கொழும்புக்கு நாளை வியாழக் கிழமை வருகை தரவுள்ளது.

எதிர்வரும் 24 ஆம் திகதி வரையில் கொழும்பில் தங்கியிருக்கும் தமிழ்நாடு தூதுக்குழுவினர் இலங்கை வர்த்தக சம்மேளனம் ஒழுங்கு செய்யும் கூட்டமொன்றில் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை கலந்து கொள்வார்கள்.

கொழும்பு சமுத்திரா ஹோட்டலில் காலை 9.30 மணி முதல் முற்பகல் 11.30 மணிவரை இச்சந்திப்பு இடம்பெறும். தமிழ்நாடு தூதுக் குழுவிற்கு இவ்வமைப்பின் சிரேஷ்ட தலைவர் எஸ்.இரத்தினவேலும் அதன் தலைவர் என்.ஜெகதீசனும் தலைமை தாங்குவார்கள்.

தமிழ் நாடு வணிக மற்றும் கைத்தொழில் பேரவை மதுரை விமான நிலையத்தை சேர்ந்த சர்வதேசவிமான நிலையமாக தரமுயர்த்தும் பணியை நிறைவேற்றியிருக்கிறது. மதுரை விமான நிலையத்தின் மூலம் இம்மாதம் 20 ஆம் திகதி அன்று சர்வதேச விமான சேவையின் ஊடாக இந்த 45 தூதுக்குழு அங்கத்தவர்களும் கொழும்புக்கு வருகை தர உள்ளார்கள். (அ-2)

# பிக்குக்கு விளக்கமறியல்

(கொழும்பு)

போலியான பெயரில் விடுதியொன்றில் தங்கியிருந்த பிக்கு ஒருவரை எதிர்வரும் 24 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு தெல்தெனிய நீதிமன்ற நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

தெல்தெனிய மாபேரிதென்ன என்ற இடத்தில் விடுதி ஒன்றில் யுவதி ஒருவருடன் நபர் ஒருவர் சட்டவிரோதமாக தங்கியிருப்பதாக பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவல் ஒன்றினையடுத்து பொலிஸார் அங்கு சோதனை நடத்தி சந்தேகநபர் (வயது 30) ஒருவரை கைது செய்தனர்.

விசாரணையில் சந்தேகநபர் விகாரை ஒன்றின் பிக்கு என்றும் போலி ஆவணங்களை தயாரித்து போலியான பெயர்களுடன் நடமாடி இவ்வாறு தகாத நடத்தைகளில் ஈடுபட்டு வருவதாக தெரிய வந்துள்ளது.

பொலிஸார் சந்தேக நபரை தெல்தெனிய நீதிமன்றத்தில் நீதவான் சரத் பிரேமகுமார் முன்னிலையில் ஆஜர்படுத்திய போது நீதவான் சந்தேக நபரை 24 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார். (அ-2)

# 2012.09 19 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

★ 1356-இங்கிலாந்து போல்ட்டியேர் என்ற இடத்தில் இடம்பெற்ற போரில் பிரான்சை வென்றது.

★ 1658-யாழ்ப்பாணத்தில் ரோமன் கத்தோலிக்க மதகுருமாரை மறைத்து வைத்திருப்பது மரண தண்டனைக்குரிய குற்றமாக டச்சு அரசால் அறிவிக்கப்பட்டது.

★ 1862-அமெரிக்க உள்நாட்டுப் போர்: அமெரிக்கப் படைகள் மிசிசிப்பியில் இடம்பெற்ற போரில் கூட்டமைப்பினரைத் தோற்கடித்தனர்.

★ 1870-பிரான்சுக்கும் புரூசியாவுக்கும் இடையில் இடம்பெற்ற போரில் பரிஸ் நகரைக் கைப்பற்றும் நிகழ்வு ஆரம்பமானது. பரிஸ் 1871 ஜனவரி 28 இல் புருசியாவிடம் வீழ்ந்தது.

★ 1881-ஜூலை 2 இல் சுடப்பட்டுப் படுகாயமடைந்த அமெரிக்க ஜனாதிபதி ஜேம்ஸ் கார்ஃபீல்ட் இறந்தார்.

★ 1893-சுவாமி விவேகானந்தர் சிக்காக்கோவில் உலக சமய மாநாட்டில் உலகப் புகழ்பெற்ற சொற்பொழிவை நிகழ்த்தினார்.

★ 1893-நியூசிலாந்து பெண்களுக்கு வாக்குரிமை வழங்கிய முதலாவது நாடானது.

★ 1942-மேற்கு உக்ரைனில் புரோடி என்ற இடத்தில் கிட்டத்தட்ட 2 ஆயிரத்து 500 யூதர்கள் நாசிவதை முகாமுக்கு அனுப்பப்பட்டனர்.

★ 1944-பின்லாந்துக்கும் சோவியத் ஒன்றியத்துக்கும் இடையில் அமைதி ஒப்பந்தம் ஏற்பட்டது.

★ 1952-ஐக்கிய அமெரிக்கா சார்லி சப்ளின் இங்கிலாந்து சென்றுவிட்டு அமெரிக்கா திரும்புவதற்குத் தடைவிதித்தது.

★ 1957-ஐக்கிய அமெரிக்கா நிலத்துக்கடியே தனது முதலாவது அணுகுண்டுச் சோதனையை நடத்தியது.

★ 1976-தெற்கு துருக்கியில் போயிங் விமானம் ஒன்று மலை ஒன்றுடன் மோதியதில் 155 பேர் கொல்லப்பட்டனர்.

★ 1983-சென் கிட்ஸ் மற்றும் நெவிஸ் ஐக்கிய இராச்சியத்திடம் இருந்து விடுதலை பெற்றது.

★ 1985-மெச்சிக்கோவில் இடம்பெற்ற 7.8 ரிக்டர் நிலநடுக்கத்தினால் குறைந்தது 9 ஆயிரம் பேர் கொல்லப்பட்டனர்.

★ 1989-நைஜர் நாட்டில் பிரெஞ்சு யூடிஏ விமானத்தில் குண்டு வெடித்ததனால் 171 பேர் கொல்லப்பட்டனர்.

★ 1997-அல்ஜீரியாவில் இஸ்லாமியத் தீவிரவாதிகள் 53 கிராமமக்களைப் படுகொலை செய்தனர்.

★ 2006-தாய்லாந்தில் இராணுவப் புரட்சியில் இராணுவத் தளபதி சோந்திபூன்யாரத்கிலின் ஆட்சியைக் கைப்பற்றினார்.

### பிறப்புக்கள்

★ 1911-வில்லியம் கோல்டிங், இலக்கியத்துக்கான நோபல் பரிசு பெற்ற பிரித்தானிய நாவலாசிரியர் (இ.1993)

★ 1965-சுனிதா வில்லியம்ஸ், அமெரிக்க விண்வெளி வீராங்கனை

### இறப்பு

★ 1881-ஜேம்ஸ் கார்ஃபீல்ட், ஐக்கிய அமெரிக்காவின் 20 ஆவது குடியரசுத் தலைவர்

### சுனிதா வில்லியம்ஸ்



சுனிதாவில்லியம்ஸ் ஒரு அமெரிக்கவின் வெளி வீராங்கனையும் கப்பற்படை அதிகாரியும் ஆவார். இவர் சர்வதேச விண்வெளி நிலையத்திற்கு 14 ஆம் விண்வெளிப் பயணத்திற்கு உறுப்பினராக்கப்பட்டார். பின் அவர் 15 ஆம் விண்வெளி பயணத்தில் இணைந்தார். விண்வெளியில் பயணம் செய்த பெண்களில் அதிக நேரம் விண்வெளியில் பயணம் செய்த சாதனையை (195 நாட்கள்) அவர் கொண்டிருக்கிறார்.

**கல்வி**

இந்தியத் தந்தைக்கும் சுலொவீனியத் தாய்க்கும் பிறந்த வில்லியம்ஸ் யூக்ளிட் ஒஹையோவில் பிறந்தார். மசாச்சூசெட்ஸ் இல் நீடாம் உயர் நிலைப் பாடசாலையில் கல்வி பயின்று 1983 இல் தேர்ச்சி பெற்றார். அதனைத் தொடர்ந்து அமெரிக்க கப்பற்படை அகடமியில் இருந்து அறிவியல் துறையில் இளங்கலைப் பட்டத்தை 1987 இல் பெற்றார். 1995 ஆம் ஆண்டு புளோரிடா இன்ஸ்டிடியூட் ஆஃப் டெக்னோலஜியில் இருந்து பொறியியல் நிர்வாகத்தில் முதுகலைப் பட்டம் பெற்றார்.

**நாசா வாழ்க்கை**

நாசாவால் ஜூன் 1998 இல் தேர்ந்தெடுக்கப்பட்ட வில்லியம்ஸ் தனது பயிற்சியை ஒகஸ்ட் மாதம் 1998 ஆம் ஆண்டு ஆரம்பித்தார்.

மூன்று முறை நடந்து விண்வெளியில் அதிகமுறை நடந்திருக்கும் பெண் என்னும் சாதனையை காத்ரின் தார்ன்டன் செய்திருந்தார். அதனை இவர் முறியடித்தார்.

அவிநிக்கு அனுப்பப்பட்ட முதல் விண்வெளிப் பயண குழுவிலும் செயலாற்றினார்.

**விண்வெளி விமான அனுபவம்**

STS-116 உடனான சர்வதேச விண்வெளி நிலையத்திற்கு விண்வெளி பயணம் 14 உறுப்பினர்களுடன் இணைந்து கொள்வதற்காக டிசெம்பர் 9, 2006 இல் டிஸ்கவரி விண்வெளிக் கலத்தில் வில்லியம்ஸ் அனுப்பப்பட்டார்.

சர்வதேச விண்வெளி நிலையத்திற்கு (ISS) வில்லியம்ஸ் தன்னுடன் எடுத்துச் சென்ற சொந்த பொருட்களில் ஒரு பகவத்கீதை புத்தகம், ஒரு பிள்ளையார் படம் மற்றும் சில ஆவணங்கள் இருந்தன.

செப்டெம்பர் 2007 சுனிதா வில்லியம்ஸ் இந்தியாவுக்கு பயணம் சென்றார். 1915 ஆம் ஆண்டில் மகாத்மாகாந்தியால் அமைக்கப்பட்ட ஆசிரமமான சபர்மதி ஆசிரமத்திற்கும் குஜராத்தில் தனது முன்னோர்கள் வாழ்ந்த கிராமமான ஜுலாசானுக்கும் அவர் சென்று பார்வையிட்டார். அவருக்கு உலக குஜராத்தி சமூகம் வழங்கிய சர்தார் வல்லபாய் படேல் விஸ்வ பிரதீபா விருது கிடைத்தது. இந்த விருதைப் பெறும் முதல் இந்திய குடியுரிமை இல்லாத வெளிநாடு வாழ் இந்தியர் இவராவார்.

வில்லியம்ஸ் மைக்கேல் வில்லியம்சை திருமணம் செய்து கொண்டார். இந்த இருவருக்கும் திருமணமாகி 16 வருடங்களுக்கும் அதிகமாக ஆகிறது. இருவருக்கும் குழந்தைகள் இல்லை என்றாலும் இவர்கள் கோர்பி என்ற பெயரில் நாய் ஒன்றினை வளர்க்கிறார்கள்.

வில்லியம்சின் தந்தை வழி உறவுகள் குஜராத்தில் இருக்கின்றனர். அவர் தனது தாய் வழியான சுலோவீனிய வம்சாவளியாவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை விவகாரத்தில் மீண்டும் 'றோ' மூக்கை நுழைக்கிறதா?



கடந்த 10 ஆம் திகதி அதிகாலை, மட்டக்களப்பு வாகரையையும், திருகோணமலையையும் பிரிக்கும் வெருகல் காட்டுக்குள், இலங்கை இராணுவத்தின் சிறப்புப் படைப்பிரிவைச் சேர்ந்த ஒன்பது அணிகள் ஊடுருவி நுழையத் தொடங்கின. தலா எட்டுப் பேரைக்கொண்ட இந்த அணி வெருகல் காட்டுக்குள் நுழைந்திருப்பது, விடுதலைப் புலிகளைத் தேடி அல்ல. நீர்க்காகம் -III தாக்குதல் போர்ப்பயிற்சிக்காக.

ஒரு காலத்தில் விடுதலைப் புலிகளின் கோட்டையாகக் கருதப்பட்ட தொப்பிக்கல் பிரதேசத்தை, மையப்படுத்தி இந்த நீர்க்காகம்-III தாக்குதல் போர்ப்பயிற்சி தீவிரமாக இடம்பெற்று வருகிறது.

அதேவேளை, கடந்த 10 ஆம்திகதி காலை, மின்னேரியா இராணுவ முகாமில் இந்தப் போர்ப்பயிற்சியில் பங்கேற்கும் வெளிநாட்டு இராணுவ அதிகாரிகளுக்கு விளக்கமளிக்கும் கூட்டம் இடம் பெற்றது. நீர்க்காகம்-IIIதாக்குதல் போர்ப்பயிற்சியில் சுமார் 2000 இற்கும் அதிகமான இராணுவத்தினர் மற்றும் கடற்படை, விமானப் படையினர் பங்கேற்கின்றனர். இம்முறை முதல்முறையாக போர்ப் பயிற்சியில் வெளிநாட்டு இராணுவ அணிகளும் நேரடியாகவே ஈடுபட்டுள்ளன.

சீனா, பாகிஸ்தான், பங்களாதேஷ், மாலைதீவு, ஆகிய நாடுகளைச் சேர்ந்த 11 அதிகாரிகள் மற்றும் 29 படையினர் இதில் பங்கேற்கின்றனர். அதேவேளை இந்தயா, அவதானிப்பாளர்களை மட்டும் அனுப்பியுள்ளது. போருக்குப் பின்னர், இலங்கை இராணுவம் நடத்துகின்ற மூன்றாவது பாரிய போர்ப் பயிற்சி நடவடிக்கை இதுவாகும்.

முதல்முறையாக 2010இல் சிலாவத் துறையில் இந்தப்போர்ப்பயிற்சி நடத்தப்பட்டது. இரண்டாவது பயிற்சி திருகோணமலைக்கு வடக்கேயுள்ள புல்மோட்டை பிரதேசத்தை மையப்படுத்தி நடத்தப்பட்டது. இம்முறை மட்டக்களப்பு, வாகரையை அண்டிய காடு மற்றும் கடல்சார் பிரதேசத்தை மையப்படுத்தி நடத்தப்படுகிறது. சிறப்புப் படைப்பிரிவு மற்றும் கொமொண்டோ படைப்பிரிவின் நடவடிக்கைகளை மையைப்படுத்தி காட்டுப் போர்முறை, கடல்வழி தரையிறக்கம், வான்வழி தரையிறக்கம் ஆகியவற்றை மையப்படுத்தியே இந்தப் பயிற்சி இடம் பெற்றுவருகிறது. இம்முறை இந்தப்போர்ப் பயிற்சி 16 நாட்கள் நடக்கவுள்ளன.

விடுதலைப்புலிகளுக்கு எதிரான நான்காவது கட்ட ஈழப்போரில் அரச படைகளுக்கு கடல்வழித் தரையிறக்கம் பெரிதாக கை கொடுக்கவில்லை. கடற்புலிகள் அச்சுறுத்தலாக இருந்ததால், வடக்கில் கடல்வழித் தரையிறக்கம் சாத்தியமாகவில்லை. ஆனால், காடுகள் சார்ந்த ஊடுருவல்கள் அதிகளவில் கைகொடுத்திருந்தது. குறிப்பாக சிறப்புப் படைப்பிரிவினதும், கொமாண்டோ படைப் பிரிவினதும் ஆள ஊடுருவும் அணிகளின் செயற்பாடுகள் இல்லாதிருப்பின் அரச படைகளால் மரபு ரீதியாக விடுதலைப் புலிகளை தோற்கடிக்க முடிந்திருக்குமா என்பது சந்தேகமே. விடுதலைப் புலிகளின் மனோபலத்தை உடைப்பதிலும் மரபுவழிப்பலத்தை சிதைப்பதற்கான தகவல்கள் வழங்குவதிலும் இந்த ஆழ ஊடுருவும் அணிகள் முக்கிய பங்கு வகித்திருந்தன. எனவே தொடர்ச்சியாக தமது படையணிகளின் பயிற்சித்திறமைகளைப் பேணிக்கொள்ள வேண்டிய கட்டாயம் இலங்கை இராணுவத்திற்குள்ளது. கடந்த இரண்டு ஆண்டுகளில் இலங்கை இராணுவம் நடத்திய போர்ப்பயிற்சிகளுடன் ஒப்பிடும்போது இம்முறை குறைந்தளவிலேயே ஆளணியை இராணுவம் ஈடுபடுத்தியுள்ளது. அதேவேளை, வெளிநாட்டுப் பயிற்சிக் குழுக்கள் வந்திருப்பது இதுவே முதல்முறை.

கடந்த ஆண்டு திருகோணமலையில் நடத்தப்பட்ட கொமாண்டோ படையிரின் பணயமீட்பு ஒத்திகைக்கு மட்டும் அமெரிக்கா, ரஸ்யா, பாகிஸ்தான், பங்களாதேஷ், இந்தியா, ஜப்பான் போன்ற நாடுகளின் கொழும்பிலுள்ள தூதரகங்களில் பணியாற்றும் இராணுவ ஆலோசகர்கள் பங்கேற்றிருந்தனர். இம்முறை போர்ப்பயிற்சியில் பங்கேற்க இந்தியா, சீனா, பாகிஸ்தான் உள்ளிட்ட நாடுகள், எட்டுப்பேர் கொண்ட அணிகளை அனுப்புவதற்கு இணங்கியிருந்தன. ஆனால், பின்னர் இந்தியா திடீரென இதிலிருந்து விலகிக் கொண்டுள்ளது.

இலங்கைப் படையினருக்கு பயிற்சி அளிக்கப்படுவதற்கு தமிழ் நாட்டில் எழுந்துள்ள எதிர்ப்பை அடுத்து, இந்திய மத்திய அரசு இன்னும் சரியான முடிவு எதையும் எடுக்கவில்லை. அதாவது இலங்கைப் படையினருக்கு போர்ப் பயிற்சிகளை வழங்கும் புரிந்துணர்வு உடன்பாட்டை முறித்துக் கொள்ள இந்தியா தயாராக இல்லை. அதேவேளை, குறிப்பிட்ட காலத்துக்கு இலங்கைப் படையினருடனான கூட்டுப்போர்ப் பயிற்சிகளை நிறுத்திக்கொள்ளலாம் என்று அண்மையில் செய்திகள் வெளியாகி இருந்தன. இதனால்தான் இந்தியா, அவதானிப்பாளர்களை மட்டும் அனுப்பியிருக்கலாம் என்று கருதப்படுகிறது. இல்லையேல் இந்தியாவும் இந்தப் போர்ப்பயிற்சியில் பங்கேற்றிருக்கும். ஏனென்றால், ஏற்கனவே இலங்கைக் கடற்படையுடன் இந்தியா பல போர்ப் பயிற்சிகளை மேற்கொண்டிருந்தது. எனவே, இலங்கை இராணுவத்துடன் இணைந்து போர்ப்பயிற்சிகளை மேற்கொள்வதில் அதற்கு ஒரு தடையும் இருக்க வாய்ப்பில்லை. என்றாலும் சீனா, பாகிஸ்தான் படையினருடன் இணைந்து மேற்கொள்வதில் சங்கடங்கள் இருக்கலாம். எவ்வாறாயினும் சீன பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் லியாங் குவாங்லி இலங்கைப் பயணத்தை முடித்துக்கொண்டு இந்தியாவுக்கே சென்றிருந்தார்.

இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் ஏ.கே. அன்ரனியுடன் நடத்தப்பட்ட பேச்சுக்களின் போது, இடை நிறுத்தப்பட்டுள்ள கூட்டுப் போர்ப்பயிற்சியை மீளத் தொடங்குவதற்கு அவர் இணக்கம் கண்டிருந்தார். இந்த நிலையில் சீனப் படைகளுடன் இணைந்து போர்ப் பயிற்சிகளை மேற்கொள்வது ஒன்றும் இந்தியாவுக்கு அவ்வளவு சங்கடமாக இருக்காது. ஆனால், பாகிஸ்தான் படையினருடன் போர்ப்பயிற்சிகளை மேற்கொள்ள இந்தியா சற்றுத் தயக்கம் காண்பிக்கக் கூடும். இத்தகைய சூழலில் புதுடெல்லியில் மற்றொரு புரளியை கிளப்பிவிட்டுள்ளது "றோ".

இந்தியாவின் வெளிநாட்டுப் புலனாய்வுச் சேவையான "றோ" அண்மையில் அளித்துள்ள ஒரு அறிக்கை புதுடெல்லியை அதிர வைத்துள்ளது.

இதையடுத்து கடந்த செவ்வாய்க்கிழமை இந்தியப் பாதுகாப்பு அமைச்சு அமைந்துள்ள சவுத் புளொக்கில் இருக்கும் தேசிய பாதுகாப்புசபை செயலகத்தில் அவசரக் கூட்டம் ஒன்று நடத்தப்பட்டுள்ளது. இந்தியாவின் முப்படைகளின் தளபதிகள், பாதுகாப்புத்துறை அதிகாரிகள், புலனாய்வுப் பிரிவுகளின் தலைவர்கள் பங்கேற்ற இந்தக் கூட்டத்தில் ஆராயப்பட்ட முக்கிய விவகாரம் யாழ்ப்பாணத்தில், பாகிஸ்தான் புலனாய்வுச் சேவையான ஐ.எஸ்.ஐ இன் நடமாட்டம் பற்றியதாகும். கடந்த 3,4 மாதங்களாக பாகிஸ்தான் புலனாய்வுச்சேவை, யாழ்ப்பாணத்தில் அதிகளவில் நடமாடி வருவதாகவும், அங்கு இந்தியக் கடற்படையின் தொடர்பாடலை இடைமறித்து அவதானிக்கும் நிலையம் ஒன்றை அமைத்துள்ளதாகவும் "றோ" தகவல் கொடுத்துள்ளது. முக்கியமாக இந்தியக் கடற்படையின் நீர்மூழ்கிகளின் தகவல் பரிமாற்றங்கள் மற்றும் நடமாட்டத்தை கண்காணிப்பதே, யாழ்ப்பாணத்தில் உள்ள இந்த நிலையத்தின் நோக்கம் என்கிறது "றோ".

விசாகப்பட்டினத்தை தலைமையகமாக கொண்டியங்கும் இந்திய நீர்மூழ்கிகள் பற்றிய தரவுகளை பாகிஸ்தான் புலனாய்வுத்துறை. யாழ்ப்பாணத்திலிருந்து திரட்டுகிறது என்ற தகவல் புதுடெல்லிக்கு கட்டாயம் அதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கும். ஏனென்றால் இதுவரை பாகிஸ்தான் புலனாய்வுப் பிரிவின் செயற்பாடுகள் இந்தியாவின் மேற்கு மாநிலங்களை மையப்படுத்தியே இடம்பெற்றன. தமிழகம் உள்ளிட்ட கிழக்கு மாநிலங்களை பொறுத்தவரை பாகிஸ்தானிடம் இருந்து அதிக அச்சுறுத்தலை எதிர்கொள்ளவில்லை. ஆனால், யாழ்ப்பாணத்தில் ஐ.எஸ்.ஐ காலடி எடுத்து வைத்துள்ளதாக "றோ" கொடுத்த தகவல், இந்தியாவை அதிகளவில் யோசிக்க வைக்கும். ஏற்கனவே, பலாலி விமானத்தளத்தை புனரமைப்பதற்கு இந்தியா முன்வந்து, அதற்கு இலங்கை இணங்கியிருந்த போதும், அண்மையில் அதை கொழும்பு நிராகரித்துவிட்டது. பலாலி விமான நிலையத்தை தேவைப்பட்டால், மூன்றாவது நாடு ஒன்றுக்கு எதிராகப் பயன்படுத்துவதற்கு அனுமதிக்க வேண்டும் என்று இந்தியா கோரியதாகவும் தகவல் வெளியானது. அதற்கு ஒப்புகொள்வதைத் தவிர்க்கவே, பலாலி விமான நிலைய புனரமைப்புப் பணியில் இருந்து இந்தியா ஓரம் கட்டப்பட்டதாகவும் கூறப்பட்டது.

இந்நிலையில் இந்தியாவை உளவு பார்க்க பாகிஸ்தானுக்கு யாழ்ப் பாணத்தில் இடமளிக்கப்பட்டிருக்குமாயின், அது பாரிய பிரச்சினைகளை ஏற்படுத்தும். "றோ" கொடுத்த இந்தத் தகவல் உண்மையாக இருந்தால், கொழும்புடன் இந்தியா கண்டிப்புடன் நடக்கவே முற்படும். ஏனென்றால், தனது கண்ணுக்கு முன்னே- காலடிக்குக் கீழே ஆபத்தான எதிரி வலுப்பெறுவதை இந்தியாவினால் பொறுமையுடன் பார்த்துக் கொண்டிருக்க முடியாது. அதேவேளை, "றோ" வழங்கிய தகவல் தவறாக இருந்தால், அதற்கான காரணமும் என்னவென்று பார்க்க வேண்டும்.

இலங்கை விவகாரத்தில் "றோ"வின் தலையீடுகள் அதிகமாகவே உள்ளன.

கடந்த காலங்களில் "றோ"வின் பல தகவல்கள், நடவடிக்கைகள் பல்வேறு சிக்கல்களையும் ஏற்படுத்தியது.

ஜனாதிபதி மகிந்தராஜபக்ச இந்தியாவுக்குச் செல்கின்ற நிலையில்- அதற்கு ஒருவாரம் முன்னதாக இந்தத் தகவல் வெளியாகியுள்ளது. இது மகிந்த ராஜபக்சவின் புதுடெல்லிப்பயணம் சுமுகமானதொன்றாக இருக்குமா என்ற கேள்வியை எழுப்ப வைத்துள்ளது. இத்தகைய சுமுகமற்றதொரு சூழலை உருவாக்க இந்திய புலனாய்வு அமைப்பு மூற்படுகிறதா என்ற சந்தேகமும் உள்ளது. எது எவ்வாறாயினும், இந்தத் தகவல் உண்மையோ பொய்யோ, இலங்கை அரசுக்கு இது நெருக்கடியாகவே அமையப்போகிறது. ஏனென்றால், பாகிஸ்தானின் அவதானிப்பு நிலை யாழ்ப்பாணத்தில் அமைந்திருப்பது உண்மையானால், அது இந்தியாவுடனான உறவுகளை சீர்ப்படுத்த முடியாத கட்டத்துக்குள் கொண்டுசெல்லும் அதேவேளை இது பொய்யாக இருந்தால், கொழும்பு-புதுடெல்லி உறவுகள் சீராவதை "றோ" விரும்பவில்லை என்றே அர்த்தம். இப்படிப்பட்ட நிலையில், றோவுடன் பகைத்துக்கொண்ட இலங்கை, புதுடெல்லியின் ஆதரவைப் பெறுவது மிகவும் சிக்கலாக இருக்கும். எவ்வாறாயினும், பாகிஸ்தான் புலனாய்வுத் துறை யாழ்ப்பாணத்தில் காலூன்றியுள்ளதாக "றோ" கொடுத்த தகவல், இலங்கைக்கான ஒரு பொறி. புதுடெல்லியில் தயாராகிறது என்பதை மட்டும் ஊகிக்க முடிகிறது.

இராணுவ ஆய்வு-சுபத்ரா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிர்காலம் சிறக்க கிரக நிலையிலிருந்து இறைவனுக்கு மலர்களால் அர்ச்சனை செய்வோம்

மனிதர்களைப்படைத்த இறைவன் அவர்களுக்கு சந்தோசத்தையும் கொடுத்தான். அத்தோடு மனிதர்களாலேயே துன்பங்களைத் தந்தான், பின்னர் மனிதர்களை வென்று நிம்மதியாக வாழ்வதற்கு பல முறை வழிகளையும் காட்டினான்.

இந்த வழிகாட்டுதலில் ஒன்றுதான் பக்தி, இதைப் பல பிரிவுகளாகப் பிரிக்கலாம். ஞானபக்தி, ஆசாரிய பக்தி , ஆண்டவனுக்கு அருட்பணி செய்கின்ற பக்தி, கடைசியாக பிடித்தமான மலர்களால் ஆண்டவனை நினைத்து அர்ச்சனை செய்யும் பக்தி, இந்த நான்குவகைப்பக்திகளும் அவரவர்களது சூழ்நிலைகளுக்கேற்ப நம்பிக்கைக்கு ஏற்ப செய்யப்படுவது.

ஞானபக்தி-என்பது மிகப்பெரிய தவத்தினால் பெறப்படுவது. இது எல்லோராலும் செய்யக்கூடியவை அல்ல. அத்தனை வாய்ப்பு ஒரு சிலருக்கே ஏற்படும். ஆசார்ய பக்தி என்பது ஆண்டவனை வழிபாடு செய்து பெறுவது. இதையும் எல்லாவித மனிதர்களால் செய்யக் கூடியது அல்ல.

ஆண்டவனுக்கு நேரிடையாக அருட்பணி செய்கின்ற பக்தி. இது கோயில் கட்டுவது, அன்னதானம் செய்வது, தம்தம் மத வழக்கத்திற்கேற்ப, மனிதநேயத்தை போற்றும் வகையில் , நான்குபேர்களுக்கு உதவிடும் வகையில் செய்யக்கூடிய பிரதி பலனை எதிர்பார்க்காமல் செய்யக் கூடிய பக்தி.

இவையெல்லாவற்றையும் தாண்டி நிற்கும் பக்திதான் மலர்களைக் கொண்டு நம்மைப் படைத்த ஆண்டவனுக்கு, அர்ச்சனை செய்து மனதார பிரார்த்தனை செய்வது, இது ஒன்றுதான் சகலவிதமான மனிதர்களுக்கும் ஏற்ற பக்தி. நிம்மதியைத் தரக்கூடிய பக்தி மாத்திரமல்ல எந்தவித இடையூறும் இல்லாமல் இஷ்டத்திற்கு எப்பொழுது வேண்டுமானாலும் இறைவனை அழைத்து பக்தியினால் காரியங்களைச் சாதித்துக் கொள்ளக் கூடியது!

இதற்கு மலர்கள் அவசியம். எந்தந்த மலர்கள் எந்தந்தகிரகங்களுக்கு, இறைவனுக்கு ஏற்றது என்பதை நமது முன்னோர்கள் மிக அழகாக சொல்லியிருக்கிறார்கள். ஏனோதானோ என்று சொல்லவில்லை. ஒவ்வொன்றுக்கும் அடிப்படையான சூட்சுமத்தை வைத்து சொல்லி, இதைப் பின்னர் அனுபவ ரீதியாகவும் ஏற்றுக்கொண்ட பின்னர் மற்றவர்களும் பலன் பெற வேண்டும் என்ற நன்னோக்கத்தில் ஞானிகள் மூலம், ரிஷிகள் மூலம், வேதத்தின் மூலம் சொல்லியிருக்கிறார்கள்.

**சூரியன்:** உங்கள் ஜாதகத்தில் இராசிக்கோ-லக்னத்திற்கோ 8,12ஆம் வீட்டில் இருந்தால் செந்தாமரைப் பூவால் சூரியனை ஞாயிறு தோறும் வழிபட்டுவந்தால் உத்தியோகம், கண் சம்பந்தமான அனைத்துப் பிரச்சனைகளும் விறுவிறு என்று விலகி விடும். வேறு எந்த மலரைக் கொண்டும் சூரியனை வழிபடக் கூடாது. அப்படி ஒரு வேளை செந்தாமரைப் பூ கிடைக்கவில்லையெனில் தாமரைத்தண்டு இதழை திரியாக்கி விளக்கேற்றி வருவது கூட நல்ல பலனைக் கொடுக்கும்.




**சந்திரன்:** ஒருவரது ஜாதகத்தில் சந்திரன் கெட்ட கிரகங்களோடு சேர்ந்து அதேசமயம் அவருக்கு சந்திரதிசை அல்லது சந்திரபுத்தி அல்லது சந்திரஅந்தரம் நடந்து கொண்டிருந்தால் அந்த நபர் சந்திரனுக்குரிய வெண்மை நிறத்துடைய அல்லி மலரை வைத்து அர்ச்சனை செய்ய வேண்டும், இதனால் நீர் சம்பந்தப்பட்ட வியாதிகள், வெளிநாடு செல்ல முடியாமல் ஏற்படும் தடங்கல்கள், பெண்கள் சம்பந்தப்பட்ட வழக்குகளிலிருந்து வெளியே வந்துவிடலாம். வெள்ளல்லி மலர் கிடைக்காவிட்டால் குங்குமத்தால் அர்ச்சனை செய்வது நன்று.

**செவ்வாய்:** ஒருவரது ஜாதகத்தில் 2,4,7, 8,12 இல் செவ்வாய் இருந்து செவ்வாய் திசையோ அல்லது புத்தி - அந்தரமோ நடைபெற்று வியாதியால், போட்டி, பொறாமையினால் முன்னேற முடியாமல் துன்பப்பட்டுக் கிடந்தால், அதிலிருந்து தப்பிக்கக்கூடிய ஒரே வழி செண்பக மலரால்-செவ்வாய்கிரகத்திற்கோ அல்லது முருகப்பெருமானையோ வழிபட்டால் அத்தனை பிரச்சினைகளிலிருந்தும் சட்டென்று விலகி வெளியே வந்து விடலாம்.

**புதன்:** ஒருவரது ஜாதகத்தில் புதன் கெட்ட கிரகங்களோடு சேர்ந்து எந்த இராசியில் இருந்தாலும் ஏற்படத்தான் செய்யும். நீதிமன்ற விவகாரம், தோல், சம்பந்தமான வியாதிகள், மாமன் உறவு முறை பகை, தொழில் நட்டம் ஆகியவை வரலாம். இதிலிருந்து விடுதலை பெற வெண்காந்தள் மலரை வைத்து புதன்கிழமை தோறும் பிரார்த்தனை செய்வது மிகவும் உன்னதமானது. சிறந்த பரிகாரமும் கூட.




**குரு :** ஜாதகத்தில் 1,5,9,10,11இல் குருபகவான் இருந்து அதேசமயம் அவருக்கு குரு மகாதிசை - புத்தி அந்தரம் நடந்து கொண்டிருந்தால், குரு அனுகூலமாக ஏனைய பிரார்த்தனைகள்- பரிகாரங்கள் செய்வதைவிட, குருபகவானுக்கு பிரியமான முல்லைப் பூவால், வியாழன் தோறும் குரு பகவானுக்கு அர்ச்சனை செய்து வந்தால் பயமில்லாமல் வாழ்க்கையைக் கொண்டு செல்லலாம், தடைக்கற்களைப் படிக்கற்களாக மாற்றலாம்.

**சுக்ரன்:** ஒருவரது ஜாதகத்தில் சுக்ரன் 12 ஆம் வீட்டில் மறைந்திருந்தாலும் பகை வீடான குருவீட்டில் தனித்து இருந்தாலும் சுக்கிர தோஷம் என்று பெயர். இந்த சுக்கிர தோஷம் போக வேண்டுமானால் வெண் தாமரை புஷ்பத்தால், சுக்ரனுக்கு வெள்ளி தோறும் மாலை சூட்டி, அர்ச்சனை செய்து வந்தால், சுக்ரன் இரண்டுமடங்கு அனுகூலமாக மாறி சகலவிதமான சௌபாக்கியங்களையும் கல்யாண சந்தோசங்களையும் தருவார்.

**சனி:** ஒருவரது ஜாதகத்தில் 2,4,7,8,12 இல் சனி பகவான் இருந்தால் பல்வேறு பிரச்சினைகளால் கடுமையாகப்பாதிக்கப்படலாம். இதிலிருந்து ஒதுங்கி வாழவேண்டுமானால் கருங்குவளை மலரால் சனீஸ்வரனுக்கு அல்லது சனி கிரகத்திற்கு சனி தோறும் அர்ச்சனை செய்துவரின் சனிபகவானின் அனுக்கிரகத்திற்கு பாத்திரமாகலாம்.

**இராகு:** ஒருவரது ஜாதகத்தில் இராகு 2,4,5,7,8,12 இல் இருந்தால் அவருக்கு இராகுவால் ஏதாவது தொந்தரவு இருந்து கொண்டிருக்கும். இதனைத்தடுக்க, மந்தா ரை புஷ்பத்தால் முடிந்த பொழுதெல்லாமல் அர்ச்சனை செய்து வந்தால் இராகுவினால் எந்தவித தொந்தரவும் கடைசிவரை இருக்காது.

கேது : ஒருவரது ஜாதகத்தில் கேது பகவான் 2,4,5,7,8,12இல் தனித்து இருந்தாலும் ஏனைய கிரகங்களோடு சேர்ந்து இருந்தாலும் கேது தோஷம் உண்டு. இந்த தோஷத்தை நீக்க மிக சுலபமான வழி செவ்வல்லி மலரால் கேது கிரகத்திற்கு முடிந்த பொழுதெல்லாம் அர்ச்சனை செய்து வந்தால் போதும். கேது பகவானது பரிபூரண அனுக்கிரகம் கிடைத்துவிடும். இவையெல்லாம் எளிய, ஆனால் சிறப்பான பரிகாரங்களாகும்.

புதியதோர் உதயம் மானிப்பாயில்

HONDA மோட்டார் சைக்கிள் காட்சியறை

ஐங்கரன் மோட்டார் நிறுவனத்தில் உதயமாகின்றது. இன்று (19.09.2012) புதன்கிழமை நண்பகல் வேளையில் Japan தயாரிப்பிலான மோட்டார் சைக்கிள்கள், பெண்களுக்கான HERO HONDA பிளசர், டியோ மற்றும் முற்றிலும் HONDA நிறுவனத்தின் புதிய வடிவிலான புதிய அறிமுகங்கள்





திறப்பு நாளில் கொள்வனவு செய்யப்படும் மோட்டார் சைக்கிள்களுக்கு

விசேட சலுகைகள் வழங்கப்படும்

(சி/1081)

குறிப்பு:-JAPAN, HONDA மோட்டார் சைக்கிள்களின் உதிரிப்பாகங்களை எமது நிறுவனத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

ஐங்கரன் மோட்டோர்ஸ், பொதுச்சந்தை முன்பாக, மானிப்பாய். T.P:-0212255150

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஈகைக்கோர் கர்ணன்

மகாபாரதப் போரில் பதினேழாம் நாள் போர் முடிந்து விட்டது. கர்ணன் போர்க்களத்தில் உயிருக்குப் போராடிக் கொண்டிருந்தான். கர்ணனின் வீழ்ச்சி பாண்டவர் பக்கம் மகிழ்ச்சியைத் தந்தது. இந்த வெற்றிகளுக்கெல்லாம் காரணமாக இருக்கும் கண்ணபிரான் மட்டும் மிகுந்த கவலையுடன் இருந்தான். தலை சிறந்த கொடையாளி மண்ணுலகிலிருந்து மறையப் போகிறானே என்ற வேதனை அவன் மனதை வாட்டி வதைத்தது.

பொறாமை என்பதே இல்லாத பெருந்தன்மையாளன் அர்ச்சுனன். தங்கள் கடுமையான எதிரியாகிய கர்ணனை கண்ணன் புகழ்வதை மட்டும் கேட்டு மனவருத்தம் அடைந்தான். அர்ச்சுனனின் மனநிலையைப் புரிந்து கொண்ட கண்ணபிரான் அர்ச்சுனா நான் தேவையில்லாமல் கர்ணனைப் புகழ்வதாக நினைக்கிறாய். இப்போது நீ என்னுடன் வா. தொலைவில் இருந்துகொண்டு நடப்பதைக் கவனி. கொடை வள்ளல் கர்ணன் இன்னும் இறந்து விடவில்லை. இப்போது கூட அவனுடைய கொடைத் தன்மையைக் காணலாம் என்றான்.

பொழுது சாயத் தொடங்கியது. யுத்த பூமியில் எங்கும் பிணக்குவியல்கள்; நரிகளின் ஊளைச் சப்தங்கள்; இடையே உயிருக்குப் போராடும் வீரர்களின் முனகல்கள்; உடைந்து கிடக்கும் ஆயுதங்கள்; இரத்தச் சேறாகக் காட்சியளிக்கும் பூமி என அந்த இடம் பயங்கரமாக தோன்றியது. கண்ணன் அர்ச்சுனனை சற்றுத் தொலைவில் நிற்கச் சொல்லிவிட்டு தான் மட்டும் அந்தணர் வேடத்தில் சென்றான்.

கொடையாளி கர்ணனே! தாங்கள் எங்கு இருக்கிறீர்கள்? என்று கூவிக் கொண்டே நடந்தான். தரையில் உயிருக்குப் போராடிக் கொண்டிருந்த கர்ணனின் செவிகளில் அந்தச் சொற்கள் விழுந்தன. உடனே கர்ணன் என்னை அழைப்பது யார்? என்று குரல் கொடுத்தான். குரல் வந்த இடத்திற்கு கண்ணன் சென்றான்.



அருகில் சென்றதும் கொடை வள்ளல் கர்ணனே நான் மிகுந்த நம்பிக்கையுடன் உங்களிடம் யாசிக்க வந்திருக்கிறேன். தாங்கள் எனக்குச் சிறிதளவு தங்கமேனும் கொடுத்தால் போதும் என்று கேட்டான் அந்தணன் வேடத்தில் வந்த கண்ணன்.

கர்ணன் அவரிடம் ஐயா, தாங்கள் எனது இல்லத்திற்குச் செல்லுங்கள். எனது மனைவி தாங்கள் வேண்டும் பொன்னும் பொருளும் தருவாள் என்றான். சாதாரண அந்தணராக இருந்தால் கர்ணன் கூறியதை ஏற்றுக்கொண்டு அவனது வீட்டிற்குச் சென்று தானம் பெற்றிருப்பான்.


ஆனால் வந்திருப்பது கண்ணனாயிற்றே! அதனால் அவன் கர்ணனிடம் சற்றுக் கோபம் அடைந்தவன் போல் தங்களுக்குக் கொடுக்க விருப்பம் இல்லையென்றால் அதைச் சொல்லாமல் *அங்கே போ* என்று ஏன் தட்டிக்கழிக்கிறீர்கள்? நான் எங்கும் செல்ல மாட்டேன். இங்கேயே எனக்கு கடுகளவு தங்கமாவது கிடைத்தால் போதும் என்றான்.

கர்ணன் சற்றுநேரம் சிந்தித்தான். பின்னர் அந்தணரிடம் ஐயா! என் பற்களில் சிறிதளவு தங்கம் வைக்கப்பட்டிருக்கிறது. அருள்கூர்ந்து தாங்கள் அதனை எடுத்துக்கொள்ளுங்கள் என்றான். இதனைக் கேட்டதும் அந்தணர் முகம் சுருங்கியது.

ஒரு அந்தணனிடம் போய் உன் பல்லைப் பிடுங்கி கொள்ளச் சொல்வது உனக்கு வெட்கமாக இல்லை என்று கோபமாகக் கேட்டான்.

கர்ணன் இந்த நிலையில் என்ன செய்வான்? இங்குமங்கும் பார்த்தான். அருகில் ஒரு கல் இருப்பதைக் கண்டான்.

மிகவும் சிரமப்பட்டு கல்



இருக்கும் இடத்திற்கு ஊர்ந்தபடியே தன் உடலை இழுத்துக் கொண்டு சென்றான்.

கல்லின் மீது தன் பற்களை இடித்தான். பற்கள் உடைந்து விட்டன. அவற்றைக் கையில் எடுத்துக்கொண்டு அந்தணரை நோக்கி சுவாமி இப்போது எடுத்துக்கொள்ளுங்கள் என்று நீட்டினான்.

அதனைப் பார்த்த அந்தணர் இது இரத்தத்தில் தோய்ந்த புனிதமற்ற எலும்பு என்று கூறியபடியே இரண்டடி பின் வாங்குகிறார்.

கர்ணன் மிகவும் சிரமப்பட்டு கீழே கிடந்த ஒரு கத்தியை எடுத்து பற்களிலிருந்து தங்கத்தை மட்டும் சுரண்டி எடுத்தான்.

அப்போதும் அந்தணராக வந்த கண்ணன் ஏற்றுக் கொள்ளவில்லை.

கர்ணன் அந்தணரிடம் தனது வில்லை எடுத்துத் தருமாறு கேட்டான். அதனையும் செய்ய அந்தணர் மறுத்து விட்டார்.

மறுபடியும் தரையில் கர்ணன் தன் உடலை இழுத்தபடி வில் இருக்குமிடத்திற்குச் சென்றான்.

மிகவும் சிரமத்துடன் கர்ணன் அவனது தலையால் அழுத்தி வில்லில் அம்பை வைத்து வர்ணாஸ்திரத்தை எய்தான்.

உடனே அதிலிருந்து உண்டான மழையால் கர்ணனின் கையிலிருந்த இரத்தம் போய் தங்கம் தூய்மையானது. அதனை அந்தணரிடம் கொடுத்தான்.

உடனே அந்தணர் வேடத்தில் இருந்த கண்ணபிரான் தனது சுயரூபத்தில் காட்சியளித்து ஈகையின் வடிவமே கர்ணா நீ வேண்டும் வரம் கேள் என்று கூறினான்.

இவற்றையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்த அர்ச்சுனன் கர்ணன்மேல் கொண்ட பகையெல்லாம் மறந்து அப்படியே நின்றுவிட்டான்.

கர்ணன் கண்ணனை நோக்கி மூவுலக நாயகனாகிய தாங்கள் என் உயிர் பிரியும் இந்த வேளையில் இங்கு வந்திருக்கும் போது இதைவிடச் சிறந்த வரத்தை எதற்காக நான் கேட்க வேண்டும்! என்று புன்முறுவலுடன் கூறினான்.

உடனே கர்ணனின் உயிர் கண்ணனின் திருவடிகளில் தலை வைத்தபடி பிரிந்து விட்டது.

கொடையாளியான கர்ணன் பக்தியிலும் தான் உன்னதமானவன் என்பதை நிரூபித்து விட்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செம்மண்ணின் வளமான அறுவடையை
கரங்களுக்கு பெற்றுத்தாருங்கள்

# NDB சுன்னாகத்திலும்



சுன்னாகம் செம் மண்ணைக் கொண்ட வள்மான பிரதேசமாகும். வெறுமனே தூவி விடும் விதைகளும் செழித்து வளரும் வளமான பிரதேசம். இப்பிரதேச மக்களின் விலைமதிப்பற்ற பெறுமதி மிக்க சொத்து மண் வளமாகும். மிளகாய், வெங்காயம், திராட்சை செய்கை மூலம் இப்பிரதேசத்தில் ஏற்படும் பொருளாதார வளர்ச்சி தேசிய பொருளாதாரத்தை வலுப்படுத்த உதவுகின்றது. இந்த பொன் விளையும் பூமியில் செழிப்பான அறுவடையை நாட்டுக்கு பெற்றுக் கொடுப்பதற்கு நிதி ஆலோசகர்களின் உறுதுணை அவசியமாகும். NDB அப்பணியை செய்கின்றது. விவசாய உற்பத்தியில் ஈடுபடுபவர்களுடன் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வியாபாரிகளுக்கும், கைத்தொழில் முயற்சிகளில் ஈடுபடுபவர்களுக்கும் மற்றும் எவருக்கும் ஏற்புடைய வகையிலான நவீன நிதித்தீர்வுகளுடன் NDB சுன்னாகத்தில் தடம் பதிக்கின்றது. இதனால் இன்று முதல் சுன்னாகம் மக்கள் தங்கள் பொன் விளையும் பூமியில் கூடுதலான அறுவடையை பெற்றுக்கொள்ள முடியும்.

**விசேட வங்கிச் சேவையினை அனுபவிக்க, NDB சுன்னாகம் கிளைக்கு வாருங்கள்.**

- நடைமுறைக் கணக்குகள்
- சேமிப்புக் கணக்குகள்
- நிலையான வைப்புக் கணக்குகள்
- சிறுவர் சேமிப்புக் கணக்குகள்
- Savings Star சேமிப்புக் கணக்கு
- வெளிநாட்டு நாணய கணக்குகள்

- வீட்டுக் கடன்
- தனிநபர் கடன்
- அடகு வைக்கும் சேவை
- வாகனக் குத்தகை வசதிகள்
- தங்கச் சேமிப்பு

- வீசா கடனட்டை.
- வீசா டெபிட் அட்டை
- பாங்காஷ்யூரன்ஸ்
- இன்டர்நெட் வங்கிச்சேவை
- வெஸ்டர்ன் யூனியன் பணப் பரிமாற்றல் சேவை

- சிறிய நடுத்தரளவு வியாபாரத்திற்கான கடன் வசதி - நீண்ட கால கடன் வசதி (குறைந்த வட்டிக்கு), குறுகிய கால கடன் வசதி
- விநியோக நிதி வசதிகள்
- ஏற்றுமதியாளர்கள்/இறக்குமதியாளர்களுக்கு நிதி வசதிகள்
- நிறுவன விநியோகஸ்தர்களுக்கு நிதி வசதி

**கொடுக்கல் வாங்கல் செய்யும் நேரங்கள்**

கிழமை நாட்கள் - மு.ப 9.00 - பி.ப 4.00 வரை
சனிக்கிழமை - மு.ப 9.00 - பி.ப 1.00 வரை

இல. 30, கே.கே.எஸ். வீதி, சுன்னாகம்
தொலைபேசி: 021 2 242 093 / 4 பெக்ஸ்: 021 2 242 095

www.ndbbank.com

PHOENIX O&M

NDB குழுமம்

NDB Investment Bank — முதலீட்டு வங்கிச் சேவை
NDB AVIVA Wealth Management — நிதி முகாமைத்துவம்
NDB Stockbrokers — பங்குச் சந்தை செயற்பாடுகள்
AVIVA NDB INSURANCE — காப்புறுதிச் சேவை
NDB Capital — முதலீட்டு வங்கிச் சேவை (பங்களாதேஷ்)
MFLC — குத்தகைச் சேவை (மாலைதீவு)

AA (lka) Fitch Rating
நெஷனல் டிவலப்மென்ட் பேங்க் பிஎல்சி ஆனது, இலங்கை மத்திய வங்கியின் மேற்பார்வையின் கீழ் இயங்கும் அனுமதி பெற்ற ஒரு வர்த்தக வங்கியாகும்.

(8/1084)

வாழ்க்கையை நிதமும் மாற்றும்
NDB வங்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிள்ளைகளின் ஒழுக்கத்தில் கவனம் அவசியம்

*அரிது அரிது மானிடராய் பிறத்தல் அரிது* என்றார் ஔவையார். ஆம், உலகிலேயே கிடைத்தற்கரிய பிறவியை எடுத்த மானிடருக்குக் கிடைத்தற்கரிய செல்வங்கள் பிள்ளைகள். வாழ்க்கையில் வழிதவறி, நெறி பிறழ்ந்து போகாமல் அவர்களை ஒழுக்கசீலர்களாய், உன்னத புருசர்களாய் வாழ வழி சமைத்துக்கொடுக்க வேண்டியவர்கள் பெற்றோரும் ஆசிரியரும் பெரியாருமே. பிள்ளைகளின் உடல், உள, சமூக நலன்களில் மிகவும் விழிப்பாகவும் அக்கறையாகவும் இருக்க வேண்டியவர்கள் இவர்களே.

*ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்* என்ற வள்ளுவர் வாக்கிற்கிணங்க எமது உயிரினும் மேலாகப் பாதுகாக்கப்பட வேண்டியது சீரிய ஒழுக்கமேயாகும். இவ்வொழுக்கம் குன்றின் நமது சமூகம் சீரழிந்து சின்னாபின்னமாகி விடும்.

உருண்டோடும் இன்றைய நவீன உலகில் பிள்ளைகளின் ஒழுக்கம் பல வழிகளில் சீர்கெட்டுச் செல்வதை நாம் காணக்கூடியதாகவுள்ளது. அதாவது பெற்றோரின் கண்காணிப்புச் சரியாக இல்லாத பட்சத்தில் அங்கு பிள்ளை தான் செய்வது எல்லாம் சரியென்றோ அன்றி தான் எதையும் செய்யலாம் என்ற நிலைக்கே தள்ளப்படுகின்றது.

பெற்றோர் பிள்ளைகளின் உணவு, உடை, கல்வி போன்ற விடயங்களில் மட்டும் அக்கறையோடு இருந்தால் போதாது. தமது பிள்ளைகளின் ஒழுக்கம் சம்பந்தமான விடயங்களிலும் மிகமிக அக்கறையாக இருக்க வேண்டும்.

பிள்ளைகள் எதைச்செய்கிறார்கள், எப்படிச் செய்கிறார்கள்? அவர்கள் செய்யும் செயல்கள் சரியானவையா? அல்லது பொருத்தப்பாடற்ற செயல்களா என்பதில் விழிப்பாக இருந்து அவ்வப்போது நல்லவை எவை? தீயவை எவை? என எடுத்துரைத்து நேரிய வழியில் இட்டுச் செல்வது வேண்டற்பாலது.

இன்றைய நவீன உலகின் தேவைக்கு ஏற்ப மனிதன் தனது தேவைகளைப்பூர்த்தி செய்யவும் வேலைகளை இலகுபடுத்திக் கொள்ளவும் பல சாதனங்களையும் கருவிகளையும் ஆக்கியுள்ளான். அதாவது தொலைபேசி, கணனி, இணையம் போன்ற தொடர்பாடல் ஊடகங்கள் வீட்டுக்குவீடு பரவிக் காணப்படுகின்றன. இவற்றில் நல்ல விடயங்களை மட்டுமே பெற்றுப் பயனடைய வேண்டும். ஆனால் இன்று பெற்றோரின் கவனக் குறைவால் பிள்ளைகள் இவற்றைத் தீயவழிகளில் பயன்படுத்தி சீரழிந்து போவதை நாம் காணக்கூடியதாகவுள்ளது.

பெற்றோர் பிள்ளைகளின் தேவைகளை உணராது அவர்களின் விருப்பிற்கிணங்க கையடக்கத் தொலைபேசிகளை வாங்கிக் கொடுக்கிறார்கள். அவர்கள் அவற்றில் தேவையற்ற உரையாடல்களில் ஈடுபடுவதோடு தாம் செல்லும் இடமெல்லாம் எடுத்துச் செல்கின்றனர். அத்துடன் வீட்டில் தொலைக்காட்சியில் பிள்ளைகள் தமக்குப் பொருத்தமற்ற காட்சிகள், ஆபாசப்படங்கள் என்பவற்றைப் பார்த்தல், கணனியிலும் அவ்வாறே கற்றல் விடயங்கள் தவிர்ந்த தமக்குப் பொருத்தமற்ற விடயங்களில் ஈடுபடல் போன்ற செயற்பாடுகள் பிள்ளைகளின் ஒழுக்கம் சீர்கெட்டுப் போகக் காரணமாகவுள்ளது.

இவை மட்டுமன்றி பிள்ளைகள் தமக்குப் பொருத்தமற்ற நண்பர்களை ஏற்படுத்திக் கொள்ளல், தமது வயதிலும் கூடிய சகபாடிகளுடன் உறவை வைத்திருப்பதால் அவர்களிடம் காணப்படும் தீயபழக்கவழக்கங்களை இவர்களும் பின்பற்றுகிறார்கள். எனவே இவற்றை முளையிலே கிள்ள வேண்டியவர்கள் பெற்றோர்களே. பெற்றோர்கள் தமது பிள்ளைகளுக்கு சமூகத்தில் நல்லொழுக்கம் மிக்க பெரியோர்களை சுட்டிக்காட்டி முன்னுதாரணப்படுத்தல் நன்று.

அத்துடன் இன்று பிள்ளைகள் அறியாமை காரணமாக உண்ணும் உணவுகளில் போதை தரும் உணவுகளைச் சேர்த்துக் கொள்ளவும் அணியும் ஆடைகளில் அநாகரிக ஆடைகளை அணிவது என்பனவும் பிரச்சினைகளுக்கு வழிவகுக்கிறது. இவை கண்காணிக்கப்படவேண்டும்.

இவ்வாறான பொருத்தப்பாடற்ற பழக்க வழக்கங்களால் பிள்ளைகள் சாந்தமான குணத்தை தவிர்த்து மூர்க்கக்குணம் உடையவர்களாகக் காணப்படுகிறார்கள். ஆதலால் பெற்றோர்கள் தமது பிள்ளைகளுக்கு அன்பு, கருணை, ஜீவகாருண்யம் என்பவற்றை உதாரணங்களுடன் எடுத்துக்கூறி நல்வழிப்படுத்த வேண்டும். சில பிள்ளைகள் படிக்கவேண்டிய வயதில் வேலைக்குச் செல்வதால் சமூகத்தில் பல சீரழிந்த நிலையை அனுபவிக்க நேரிடுகிறது.

எந்தவொரு பிள்ளையும் பதினாறுவயது வரை கட்டாயம் படிக்கவேண்டும். அது கட்டாயக் கல்வி வயதாகும். இதுதவிர பதினெட்டு வயதுவரை பிள்ளைகள் சிறுவர் என்னும் வகைப்பட்டிருப்பதற்குள் உள்ளடக்கப்படுவர்.

பிள்ளைகள் எப்படியும் வாழலாம் என்ற நிலையை விடுத்து இப்படித்தான் வாழ வேண்டும் என அவர்களுக்கு ஓர் இலக்கு நோக்கிய இலட்சியப்பாதையை ஏற்படுத்தி அதன் வழிச் செல்ல வழிவகுத்தல் வேண்டும்.

**மா.பத்மராஜ்**
**C.R.P.O மருதங்கேணி**

*தொட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டும்* என்னும் முதுமொழிக்கமைய சிறு வயதிலிருந்தே பிள்ளைகளை நல்வழிப்படுத்தி சீரியராக்கல் பெற்றோரினதும் பெரியோரினதும் ஆசிரியரினதும் கடமையாகும்.

# மஹிந்த வரவை எதிர்க்க வைகோ அணி தயாராகிறது

மத்திய பிரதேச மாநிலம் போபாலுக்கு வருகை தரவுள்ள ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு கறுப்புக் கொடி காட்டுவதற்காக ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ 600 தொண்டர்களுடன் 15 பேருந்துகளில் அம்மா நிலத்துக்கு சென்றுள்ளார்.

மத்திய பிரதேச மாநிலம் சாஞ்சியில் நடைபெறவுள்ள புத்த மத நிகழ்ச்சியில் கலந்து கொள்வதற்காக நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வருகை தருகிறார்.

ஆனால், இவரது வருகைக்கு தமிழக மக்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றனர். அத்துடன் மத்திய பிரதேச மாநிலம் சாஞ்சி நகரில் ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ தலைமையில் கறுப்புக் கொடி ஆர்ப்பாட்டம் நடத்தப்படும் என்று ம.தி.மு.க அறிவித்திருந்தது.

மத்திய பிரதேசம் நேற்று முன்தினம் செல்வதற்கு முன்பாக அண்ணா நினைவிடத்துக்கு சென்ற வைகோ அங்கு மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார்.

அப்போது செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது,

மத்திய அரசு நடத்தும் விழாவில் பங்கேற்க இலங்கை ஜனாதிபதி ராஜபக்ஷ வருவதை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

இலங்கை தமிழர்கள் பட்ட வேதனையை உலகத் தமிழர்களிடம் எடுத்து செல்வதற்காக இந்தப் போராட்டத்தை நடத்துகின்றோம். நாதியில்லாமல் போய்விட்டதா தமிழ் ஜாதி. மகாத்மா காந்தி படத்துக்கு மாலைபோட கோட்சேவை கூப்பிடுவதா?

இலங்கையில் வடக்கு- கிழக்கு மாகாணத்தில் தமிழர் வாழ்ந்த பகுதியில் ஆயிரத்து 607 இந்து கோவில்களை இடித்ததாக கடந்த 1993 ஆம் ஆண்டு இலங்கை அரசே கூறியுள்ளது.

அப்படி இருக்கும் போது இந்துக் கோவில்களை இடித்த இலங்கை அரசின் ஜனாதிபதியை பா.ஜ.க. ஆட்சி செய்யும் மத்திய பிரதேச அரசு அழைத்திருக்கிறது. உணர்வுகள் உள்ள தமிழன் தமிழ் நாட்டில் இருக்கின்றான் என்பதை காட்டவே போராட்டம் நடத்த செல்கின்றோம். எங்கள் போராட்டம் அறவழியில்தான் நடக்கும். போபால் பொலிஸ் எங்களை உள்ளே விடவில்லை என்றால் எல்லையிலேயே போராட்டம் நடத்துவோம். தமிழ்நாடு இந்தியாவில் தான் உள்ளது என்றால் மத்திய பிரதேச மக்கள் மஹிந்தவை உள்ளே விடாமல் விரட்ட வேண்டும் என்றார். (அ-2)

# இலங்கையின் நலனுக்காக சீனா கடமையாற்றுகின்றது

## ஜனாதிபதி பெருமிதம்

(கொழும்பு)

வரலாற்றுக் காலம் முதல் சீனா ,இலங்கை மக்களின் நலனுக்காக கடமையாற்றி வருவதாகவும் பிராந்திய மற்றும் சர்வதேச ரீதியில் உதவிகள் தேவைப்படும் சந்தர்ப்பங்களில் சீனா இலங்கைக்கு தேவையான உதவிகளை வழங்கியுள்ளதாகவும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

சீன- இலங்கை உறவுகளுக்கிடையில் 55 ஆண்டுகள் பூர்த்தியாவதனை முன்னிட்டு இலங்கைக்கு விஜயம் செய்துள்ள சீன மக்கள் காங்கிரசின் தலைவர் வூபன்குவோவிடம் ஜனாதிபதி இதனைத் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையில் பாரியளவு அபிவிருத்தி ஏற்பட்டுள்ளதாக வூ பன்குவோ தெரிவித்துள்ளார். எதிர்காலத்தில் நாடு பாரிய அபிவிருத்தியை அடையும் என அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார். (அ-2)

# வடக்கு வைத்தியசாலைகளுக்கு ஐ.ஓ.எம். நிறுவனம் நிதியுதவி

(கொழும்பு)

வடமாகாணத்திலுள்ள வைத்தியசாலைகளை அபிவிருத்தி செய்வதற்கு புலம்பெயர்ந்தோருக்கான சர்வதேச அமைப்பு (ஐ.ஓ.எம்) ஐநூறு மில்லியன் ரூபா பெறுமதியான வேலைத்திட்டத்தை செயற்படுத்த முன்வந்துள்ளது.

இத்திட்டத்தின் கீழ் 14 வாகனங்களை அமைப்பின் இலங்கை பிரதிநிதி சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேனவிடம் முதற்கட்டமாக கையளித்துள்ளார். இந்த 14 வாகனங்களில் 7 நோயாளர் காவு வண்டிகளும் 7 கப்ரக வாகனங்களும் இடம்பெற்றுள்ளன.

யாழ். பொது வைத்தியசாலை, கிளிநொச்சி பொது வைத்தியசாலை, முல்லைத்தீவு பொது வைத்தியசாலை, கொக்கிளாய் தள வைத்தியசாலை, அக்கராயன்குளம் பிரதேச வைத்தியசாலை மற்றும் வட மாகாண பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம் ஆகியவற்றுக்கு இந்த வாகனங்கள் வழங்கப்படவிருக்கின்றன. (அ-2)


## UNIVERSITY OF JAFFNA, SRI LANKA

### POST OF WORKS SUPRINTENDENT (ELECTRICAL) (ON ASSIGNMENT)

### WALK IN INTERVIEW

The University of Jaffna requires the services of Works Superintendent (Electrical)/(civil) on Assignment Basis.

Candidates, who are interested in the above, are requested to present themselves for an interview with their CV and relevant documents on 24.09.2012 at 10.00 a.m.in the Board Room of the University of Jaffna.

A candidate who possesses the following qualifications may apply:

A. National Diploma in Technology (NDT) or equivalent qualifi cations and have at least four years experience in the relavant filed after obtaining such qualifications.

**Note:** Period of in- plant training will not be counted for the four years experience.

**OR**

B. National Certificate in Technology (NCT) or equivalent qualifications and have at least ten years experience in the relavant field after obtaining such qualifications.

Preference will be given to those who have knowledge and experience in Civil Work.

**Salary:** Rs.25,475/- will be paid as a monthly remuneration during the period of appointment on assignment basis.

***REGISTRAR***
***University of Jaffna.***
***14.09.2012***

(C-1083)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எரிகின்ற வீட்டிலே பிடுங்கியது இலாபம்
– தமிழ்ப் பழமொழி

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## நாடு முழுவதிலும் சில்லறைக் கலாசாரம் ஆனால் இங்கோ சில்லறைக்குத் தட்டுப்பாடு

ஆட்சி முதல் அரச நிர்வாகம் வரை எங்கும் சில்லறைக் கலாசாரம். சில்லறைக் கலாசாரம் மட்டுமல்ல சின்னத்தனங்களும், குற்றத்தனங்களும் தாராளமாக மலிந்துவிட்ட இலங்கை மண்ணில்,

சில்லறைக் காசுக்குப் பெருந்தட்டுப்பாடு என்பதை நினைக்கும் போது, சிரிப்புத்தான் வருகிறது.

எங்கும் எல்லாமும் சில்லறையாகிப் போக சில்லறைக் காசு மட்டும் தட்டுப்பாடாகி போயுள்ளமை எங்கள் மண்ணின் எதிர்மறையான போக்கை காட்டி நிற்கின்றது.

ஒரு பொருளை வாங்கும் நுகர்வோருக்கு மிகுதிப் பணத்தைக் கொடுப்பதுதான் வியாபார தர்மம்.

ஆனால் இப்போதெல்லாம் ஐந்து ரூபாய், பத்து ரூபாய்க்குப் பெருந்தட்டுப்பாடு என்று சொல்கிறார்கள்.

சில்லறைத் தட்டுப்பாடு காரணமாக ரொபி, கச்சான் அல்வா உள்ளிட்டவற்றை கொடுக்கும் வியாபாரம் நடப்பதை அவதானிக்க முடிகிறது.

இவ்வாறு சில்லறைக்காக கொடுக்கின்ற பொருட்கள் நுகர்வோருக்கு தேவையற்றவையாக அல்லது வேண்டாதவையாக இருக்கலாம்.

தேவையற்ற பொருளை நுகர்வோரிடம் திணிப்பதென்பது முறையற்ற செயல் என்பதற்கு அப்பால், ஐந்து ரூபாய், பத்து ரூபாய் மிகுதிப் பணத்தை சேமித்து தமக்குத் தேவையான இன்னொரு பொருளை உரியவர்கள் வாங்க முடியும்.

இவ்வாறான நிலைமைகள் இருக்கும் போது சில்லறைப் பணத்தை கொடுக்காமல் விடுவது ஒருவகையான மோசடி என்று கூறலாம்.

ஆனால் ஏழைகளிடம் சில்லறைக் காசுக்குப் பதிலாக ரொபி, கச்சான் அல்வா என்பவற்றை திணிப்பது பெரும் பாவச்செயல். எனவே இது விடயத்தில் வங்கிகள் கூடிய கவனம் செலுத்த வேண்டும்.

தற்போது வடபகுதியில் மிகவும் தட்டுப்பாடாக இருக்கின்ற ஐந்து ரூபாய்க் குற்றிகள், பத்து ரூபாய்த் தாள்கள் என்பவற்றை இங்கு எடுத்து வருவதற்கு வங்கிகள் நடவடிக்கை எடுப்பது அவசியம்.

இது தவிர பொதுமக்களும் குபேரன் சிலைகளுக்கு சில்லறை காசுகளை குவிக்காமல் சில்லறைக் காசுகளை புழக்கத்திற்கு விட வேண்டும். அப்போது தான் சில்லறைத்தட்டுப்பாடு நீங்கும்.

சில்லறைக் காசுத்தட்டுப்பாடு என்பதன் விளைவு வியாபாரத்தில் மிகுதிப் பணம் கொடுப்பது தொடர்பில், தவறான எண்ணக் கருவை ஏற்படுத்திவிடும் என்பதை எவரும் மறந்து விடக் கூடாது.

# பாகிஸ்தான் உளவு அமைப்பு இலங்கையில் செயற்படுகிறது

## த ஏசியன் ஏஜ் செய்தி வெளியீடு

(கொழும்பு)

பாகிஸ்தானின் உளவு அமைப்பான ஐ.எஸ்.ஐ. இன்னும் இலங்கையில் இயங்கிக் கொண்டிருப்பதாக த ஏசியன் ஏஜ் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

தமிழகத்திலிருந்து இலங்கைக்கு இந்திய இராணுவத் தகவல்கள் அடங்கிய இறுவெட்டு ஒன்றுடன் பாகிஸ்தான் தீவிரவாத படையைச் சேர்ந்த ஒருவர் கைது செய்யப்பட்டதை தொடர்ந்து த ஏசியன் ஏஜ் இந்தச் செய்தியை வெளியிட்டுள்ளது.

பாகிஸ்தான் அரசாங்கத்தினால் கடந்த 2004ஆம் ஆண்டு பசீர் வாலி மொஹமட் என்ற முன்னாள் ஐ.எஸ்.ஐ அதிகாரி ஒருவரை இலங்கைக்கான தமது உயர் ஸ்தானிகராக நியமித்தது.

அவர் இலங்கையில் செயற்பட்டு, தென்னிந்திய செயற்பாடுகள் குறித்து நிரந்தரமாக அவதானிக்கும் பணியை மேற்கொள்ள வேண்டும் என்றே இந்த நியமனம் வழங்கப்பட்டதாக கூறப்படுகிறது.

அவர் நியமிக்கப்பட்ட சில மாதங்களின் பின்னர் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு இவரை இலக்கு வைத்து தற்கொலைத் தாக்குதல் ஒன்றை மேற்கொண்டிருந்தது.

எனினும் சம்பவத்தில் அவரது பாதுகாவலர்கள் மற்றும் பிரதிநிதிகள் 7 பேர் கொல்லப்பட்ட போதும் அவர் உயிர் தப்பினார்.

முன்னாள் பாகிஸ்தானிய ஜனாதிபதி பர்வேஸ் முஷராப் இலங்கையிலிருந்து தென்னிந்திய செயற்பாடுகளை அவதானிக்கும் பொருட்டே வாலி மொகமட்டை இலங்கைக்கு அனுப்பியதாக நம்பப்படுகிறது.

அண்மையில் இந்திய இராணுவத் தகவல்களுடன் தப்பிவந்த ஒருவர் கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்து, அவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகள், தம்மிடம் உள்ள தகவல்களை கொழும்பில் உள்ள பாகிஸ்தானிய உயர் ஸ்தானிகரகத்திடம் வழங்கவிருப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

இதன் மூலம் பாகிஸ்தானின் ஐ.எஸ். ஐயின் தென்னிந்திய மற்றும் இந்தியாவுக்கு எதிரான நடவடிக்கைகள் இலங்கையை மையப்படுத்தி இன்னும் தொடர்கிறது என்பது உறுதியாகியிருப்பதாக, த ஏசியன் ஏஜ் தெரிவித்துள்ளது. (ஏ-11)

## தமிழ்க் கூட்டமைப்பின் போராட்டம் ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழர் நில ஆக்கிரமிப்பு, வளச்சுரண்டல் என்பவற்றைக் கண்டித்தும், காணாமல் போனோர், சிறையில் உள்ள தமிழ் கைதிகளை விடுவிக்கக் கோரியும் மீள்குடியேற்றத்தை வலியுறுத்தியும் எதிர்வரும் 24ஆம் திகதி முல்லைத்தீவில் த.தே.கூட்டமைப்பால் முன்னெடுக்கப்படவிருந்த கவனயீர்ப்பு போராட்டம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியால் நாளை மறுதினம் மேற்படி விடயங்களை வலியுறுத்தி முல்லைத்தீவில் போராட்டம் நடத்தப்படவிருப்பதால் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக த.தே. கூட்டமைப்பை மேற்கோள் காட்டி பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் தெரிவித்தார்.

எதிர்வரும் 21ஆம் திகதி முல்லைத்தீவு அரச செயலகம் முன்பாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியால் முன்னெடுக்கப்படும் கவனயீர்ப்புப் போராட்டத்திற்கு த.தே.கூட்டமைப்பு தனது முழு ஆதரவை வழங்குவதோடு அனைத்து தமிழ்த் தேசிய ஆதரவுக் கட்சிகளையும் மனிதாபிமானிகளையும் மக்களையும் இதில் கலந்து கொள்ளுமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பால் அழைப்பும் விடப்பட்டுள்ளது. (ஏ-11)

## அஞ்சல்சேவை அதிகாரிகளும் தொழிற்சங்க போராட்டத்தில்

(கொழும்பு)

இலங்கையின் அஞ்சல்சேவை அதிகாரிகள் எதிர்வரும் 25ஆம் திகதிக்குப் பின்னர் நாடு தழுவிய தொழிற்சங்க போராட்டத்தை முன்னெடுக்கவிருப்பதாக எச்சரித்துள்ளனர்.

அஞ்சல் சேவைகளில் காணப்படும் பதவி வெற்றிடங்களை நிரப்புவ தற்கு நடவடிக்கை எடுக்குமாறு அவர்கள் கோரிவந்தனர்.

இதனடிப்படையில் 764 பட்டதாரிகள் இணைத்துக்கொள்ளப்படுவர் என்று அஞ்சல்துறை அமைச்சு தெரிவித்திருந்தது. எனினும் இந்த நடவடிக்கை கள் நிறைவு செய்யப்படவில்லை.

இதனால் அஞ்சல் சேவையை கொண்டு நடத்துவதில் சிக்கல்கள் காணப்படுவதாக அஞ்சல்சேவைகள் அதிகாரிகள் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

இந்நிலையில் இந்தக்கோரிக்கை எதிர்வரும் 25ஆம் திகதிக்கு முன்னர் நிறைவேற்றப்படவில்லை என்றால் அதன் பின்னர் நாடுதழுவிய பணிப்பகிஷ்கரிப்பைமேற்கொள்ளவிருப்பதாக அவர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர். (அ-2)

## ஆஸி.செல்ல முயன்றவர்கள் பொத்துவிலில் கைதாகினர்

(சிட்னி)

சட்டவிரோதமான முறையில் அவுஸ்திரேலியாவுக்குச் செல்ல முற்பட்ட ஆறுபேர் பொத்துவில் கோமாரி கடற்கரையில் வைத்துக் கைது செய்துள்ளனர்.

பொலிஸ் விசேட அதிகாரிகள் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையின் போது இவர்கள் நேற்று அதிகாலை கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களிடமிருந்த வான் ஒன்று, மோட்டார்வண்டி ஒன்று மற்றும் துவிச்சக்கரவண்டி ஒன்றும் பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்டவர்கள் அம்பலாந்தொட, திஸ்ஸமகாராம, அம்பாறை மற்றும் மந்தூர் பிரதேசத்தைச் சேர்ந் தவர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவம் தொடர்பில் பொத்துவில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ-9)

## உப தவிசாளர் வெளியேற்றப்பட்டார்

(யாழ்ப்பாணம்)

வலி.தென்மேற்கு பிரதேச சபையின் உப தவிசாளர், தவிசாளர் அறையிலிருந்து வெளியேற்றப்பட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் பிரதேச சபையின் மாதாந்தப் பொதுக் கூட்டம் இடம் பெற்றது. இதன்போது உப தவிசாளர் எஸ்.சிவகுமாரினால் தவிசாளர் அ.ஜெபநேசன் மீது பல குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டிருந்தன.

இதனையடுத்து நேற்றைய தினம் தவிசாளர் அறையில் இவ்வளவு காலமும் உப தவிசாளருக்கு எனப் போடப்பட்டிருந்த மேசை, கதிரை என்பனவெளியில் தூக்கிப் போடப்பட்டுள்ளன.

குடாநாட்டில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினால் கைப்பற்றப்பட்ட சபைகளிலுள்ள உறுப்பினர்களுக்கிடையில் இவ்வாறான உட்கட்சி முரண்பாடுகள் தொடர்ந்து இடம் பெற்று வருவதாக [illegible]

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

### தைரியத்துடன் செயலாற்றுங்கள்



கண்டனம் செய்யும் சொல் எதையுமே சொல்ல வேண்டாம். உதடுகளை மூடிக்கொண்டு உங்கள் இதயங்களைத் திறந்து வையுங்கள்.

ஒவ்வொருவரும் அவரவர்க்குரிய சுமை முழுவதும் தங்கள் தோள்களின் மீதே சுமத்தப்பட்டிருப்பதாக எண்ணி செயலாற்றுங்கள்.


வேதாந்தம் கூறும் தர்மநெறி முறைகளை வீட்டுக்கு வீடு எடுத்துக்கூறுங்கள். ஒவ்வொருவரிடமும் இருக்கும் தெய்வீகத் தன்மையை உணரவழிகாட்டுங்கள்.


கொழுந்துவிட்டெரியும் ஆர்வத்தை நாலாபுறங்களிலும் பரவவிடுங்கள். பரபரப்புடன் பணியில் ஈடுபடுங்கள். எப்போதும் சுயநலம் அற்றவர்களாக இருங்கள்.

நீங்கள் மகத்தான பணிகளைச் செய்யப் பிறந்தவர்கள் என்பதில் நம்பிக்கை கொள்ளுங்கள். சிறிய நாய்க்குட்டிகளின் குரைப்பைக்கேட்டு அஞ்சாதீர்கள். எழுந்து நின்று துணிவுடன் நடைபோடுங்கள்.

தூய்மையுள்ளவராக நீங்கள் இருந்ததால் தூய்மை இல்லாததைப் பார்க்க முடியாது. உண்மையில் உள்ளேயிருப்பதுதான் வெளியிலேயும் [illegible]கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தின் 15 வயது பிரிவுப் பெண்கள் தேசிய மட்ட கபடி போட்டியில் சம்பியனாகினர். இவர்களை வரவேற்று கௌரவிக்கும் நிகழ்வு நேற்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலை ஆராதனை மண்டபத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பாண்ட் வாத்தியத்துடன் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதனையும் அலங்கரிக்கப்பட்ட வாகனத்தில் வீராங்கனைகள் பவனி வருவதனையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்-கரவெட்டி செய்தியாளர்)

# கைதடி மத்தி வளர்மதி வி.க. நடத்தும் 20-20 போட்டியில் மட்டுவில் வளர்மதி, சாவகச்சேரி ஸ்ரீமுருகன் அணிகள் வெற்றி

கைதடி மத்தி வளர்மதி விளையாட்டுக்கழகம் நடத்தும் வளர்மதி பிறீமியர் லீக் இருபது-20 கிரிக்கெட் சுற்றுப் போட்டி இடம்பெற்று வருகின்றது.

இப்போட்டியில் கடந்த புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு இடம்பெற்ற போட்டியில் மட்டுவில் வளர்மதி விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து கைதடி றோயல் சலஞ்சர் விளையாட்டுக்கழகம் மோதியது.

நாணய சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய கைதடி றோயல் சலஞ்சர் விளையாட்டுக் கழகம் 14.5 பந்து பரிமாற்றங்கள் நிறைவில் 53 ஓட்டங்களை சகல இலக்குகளையும் இழந்து பெற்றனர்.

துடுப்பாட்டத்தில் கைதடி றோயல் சலஞ்சர் விளையாட்டுக்கழகம் சார்பாக கவனீதன் 18, அஞ்ஜீவன் 9 ஓட்டங்களை தமது அணிக்காக பெற்றுக்கொடுத்தனர்.

பந்துவீச்சில் மட்டுவில் வளர்மதி விளையாட்டுக்கழகம் சார்பாக கவி 11 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டினையும் அமல் 10 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டினையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு 54 ஓட்டங்கள் பெற்றால் வெற்றி என்ற நிலையில் துடுப்பெடுத்தாடி மட்டுவில் வளர்மதி விளையாட்டுக்கழக அணியினர் 11.4 பந்து பரிமாற்றங்கள் நிறைவில் 4 இலக்கினை மாத்திரம் இழந்து 56 ஓட்டங்களைப் பெற்று 6 இலக்குகளினால் வெற்றி பெற்றனர்.

துடுப்பாட்டத்தில் மட்டுவில் வளர்மதி விளையாட்டுக் கழகம் சார்பாக அஜந்தன் 15, சஞ்ஜீவன் 11 ஓட்டங்களை தமது அணிக்காக பெற்றுக்கொடுத்தனர். பந்துவீச்சில் கைதடி றோயல் சலஞ்சர்ஸ் விளையாட்டுக்கழகம் சார்பாக கவனீதன் 12 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டினையும் அஞ்ஜீவன் 10 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டினையும் கைப்பற்றினர்.

கடந்த சனிக்கிழமை காலை 8 மணிக்கு இடம்பெற்ற போட்டியில் சாவகச்சேரி ஸ்ரீமுருகன் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கைதடி கிங்ஸ் லெவன் விளையாட்டுக்கழகம் மோதியது.

நாணய சுழற்றியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய சாவகச்சேரி ஸ்ரீமுருகன் விளையாட்டுக் கழகம் 20 பந்து பரிமாற்றங்கள் நிறைவில் 126 ஓட்டங்களை 9 இலக்குகளை இழந்து பெற்றனர்.

துடுப்பாட்டத்தில் சாவகச்சேரி ஸ்ரீமுருகன் விளையாட் டுக்கழகம் சார்பாக லத்தீபன் 32, கிசோ 30 ஓட்டங்களை தமது அணிக்காக பெற்றுக்கொடுத்தனர். பந்து வீச்சில் கைதடி கிங்ஸ் லெவன் விளையாட்டுக்கழகம் சார்பாக பானு 29 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டினை யும் லபி 16 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டினையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு 127 ஓட்டங்கள் பெற்றால் வெற்றி என்ற நிலையில் துடுப்பெடுத்தாடி கைதடி கிங்ஸ் லெவன் விளையாட்டுக்கழக அணியினர் 14.3 பந்து பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்கினையும் இழந்து 75 ஓட்டங்களை மாத்திரமே பெற்று 52 ஓட்டங்களினால் தோல்வியுற்றனர்.

துடுப்பாட்டத்தில் கைதடி கிங்ஸ் லெவன் விளையாட்டுக்கழகம் சார்பாக லபி 27, அயன் 9 ஓட்டங்களை தமது அணிக்காக பெற்றுக் கொடுத்தனர். பந்துவீச்சில் சாவ சாவகச்சேரி ஸ்ரீமுருகன் விளையாட்டுக்கழகம் சார்பாக தசிந்தன் 15 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டினையும் மிதூசன் 9 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டினையும் கைப்பற்றினர்.

பிற்பகல் 3 மணிக்கு இடம்பெற்ற போட்டியில் சாவகச்சேரி ஸ்ரீமுருகன் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து மட்டுவில் வளர்மதி விளையாட்டுக்கழகம் மோதியது.

நாணய சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய சாவகச்சேரி ஸ்ரீமுருகன் விளையாட்டுக் கழகம் 15.3 பந்து பரிமாற்றங்கள் நிறைவில் 60 ஓட்டங்களை சகல இலக்குகளையும் இழந்து பெற்றனர்.

துடுப்பாட்டத்தில் சாவகச்சேரி ஸ்ரீமுருகன் விளையாட்டுக்கழகம் சார்பாக திலீபன் 12, நிசாந்தன் 8 ஓட்டங்களை தமது அணிக்காக பெற்றுக் கொடுத்தனர். பந்து வீச்சில் மட்டுவில் வளர்மதி விளையாட்டுக்கழகம் சார்பாக றஜீ 10 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டினையும் அமல் 16 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டினையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு 61 ஓட்டங்கள் பெற்றால் வெற்றி என்ற நிலையில் துடுப்பெடுத்தாடிய மட்டுவில் வளர்மதி விளையாட்டுக்கழக அணியினர் 14.3 பந்து பரிமாற்றங்கள் நிறைவில் 6 இலக்கினை மாத்திரமே இழந்து 61 ஓட்டங்களைப் பெற்று 4 இலக்கினால் வெற்றிபெற்றனர். துடுப்பாட்டத்தில் மட்டுவில் வளர்மதி விளையாட்டுக்கழகம் சார்பாக அமல் 27, றஜீ 9 ஓட்டங்களை தமது அணிக்காக பெற்றுக் கொடுத்தனர்.

பந்து வீச்சில் சாவகச்சேரி ஸ்ரீமுருகன் விளையாட்டுக்கழகம் சார்பாக லத்தீபன் 15 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டினையும் கிசோ 9 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டினையும் கைப்பற்றினர்.

## தேசிய ரீதியான பாடசாலைகளுக்கிடையிலான உடற்பயிற்சிப் போட்டி

தேசிய ரீதியில் பாடசாலைகளுக்கிடையிலான உடற்பயிற்சிப் போட்டி கண்டியில் நடைபெற்றது. 19 வயது ஆண்களுக்கான கொழும்பு டபிள்யூ.டபிள்யூ. கன்னங்கரா ம.வி அணி முதலாம் இடத்தையும் 2 ஆம் இடத்தை யா/ ஊர்காவற்றுறை சென்.அன்ரனிஸ் கல்லூரியும் 3 ஆம் இடத்தை யா/இளவாலை கென்றியரசர் கல்லூரியும் பெற்றுக் கொண்டன.

பெண்களுக்கான 19 வயது உடற்பயிற்சிப் போட்டியில் களுத்துறை பெண்கள் கல்லூரி முதலாம் இடத்தையும் 2 ஆம் இடத்தை வ/திருக்குடும்பகன்னியர்மடம் மகளிர் மகா வித்தியாலயமும் 3 ஆம் இடத்தை யா/மானிப்பாய் மகளிர் கல்லூரியும் பெற்றுக் கொண்டன.(15)







வடமாகாண கல்வி அமைச்சின் முன்பள்ளி பிரிவின் யாழ். மாவட்ட மழலைகள் விழா யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் மாணவர்களின் இசையும் அசைவும் நடனமாற்றுவதையும் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா முன்பள்ளி சிறுவர்களுக்கு பரிசுகள் வழங்கி வைப்பதையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மெண்டிஸ்களின் சுழலில் சுருண்டது சிம்பாவே

இலங்கை - சிம்பாவே அணிகளுக்கிடையிலான இருபது-20 போட்டியில் இலங்கை அணி 82 ஓட்டங்களால் அபார வெற்றி பெற்றுள்ளது.

நான்காவது உலகக்கிண்ண இருபது-20 போட்டி நேற்று ஹம்பாந்தோட்டை சர்வதேச விளையாட்டு மைதானத்தில் கோலகலமாக ஆரம்பமானது.

முதலாவது போட்டியில் மஹேல ஜயவர்த்தன தலைமையிலான இலங்கை அணியும் ரெமிலர் தலைமையிலான சிம்பாவே அணியும் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற சிம்பாவே அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது

அதன் அடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணியின் ஆரம்ப வீரர்களாக டில்சானும் புதுமுகவீரர் முனவீரவும் களமிறங்கினர்.

17 ஓட்டங்களை பெற்றிருந்த நிலையில் முனவீர ரன் அவுட் முறையில் ஆட்டமிழந்தார். மறுபுறம் டில்ஷான் அதிரடியாக ஆடி 28 பந்துகளில் 39 ஓட்டங்களை பெற்று ஆட்டமிழந்தார்.

பின் வந்த மஹேல ஜெயவர்த்தன 13 ஓட்டங்களில் ரன் அவுட் முறையில் ஆட்டமிழக்க பின் ஜோடி சேர்ந்த சங்கக்காரவும், ஜீவன் மெண்டிஸும் அதிரடியாக ஆடி இலங்கை அணியின் ஓட்ட எண்ணிக்கையை அதிகரித்தனர்.

சங்கக்கார 26 பந்துகளில் 44 ஓட்டங்களைப்பெற்று ரன் அவுட் முறையில் ஆட்டமிழந்தார்.




ஜீவன் மெண்டிஸ் 30 பந்துகளில் 43 ஓட்டங்களை ஆட்டமிழக்காமல் பெற்றுக்கொடுத்தார்.

இறுதியில் இலங்கை அணி 20 ஓவர்களில் 4 விக்கெட்டுக்களையிழந்து 182 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

183 ஓட்டங்களினை வெற்றியிலக்காகக் கொண்டு களமிறங்கிய சிம்பாவே அணியின் ஒரு வீரர் கூட நிலைத்து நின்று ஆடமுடியவில்லை.

நீண்டகால இடைவெளிக்குப்பின் களமிறங்கிய அஜந்த மெண்டிஸின் சுழலில் சிம்பாவே அணியால் நிலைத்து நின்று தாக்கு பிடிக்க முடியவில்லை அவருக்கு பக்க பலமாக ஜீவன் மெண்டிஸும் விக்கெட்டினை சாய்த்தவண்ணம் இருந்தார்.

17.3 ஓவர்களில் சிம்பாவே அணி 100 ஓட்டங்களுக்குள் சுருண்டது. அஜந்த மெண்டிஸ் 4 ஓவர்கள் பந்துவீசி 2 ஓட்டமற்ற ஓவர்கள் உட்பட 8 ஓட்டங்களை விட்டுகொடுத்து 6 விக்கெட்டினை கைப்பற்றினர்.

இது சர்வதேச உலக இருபது-20 போட்டியின் சாதனையாக பதியப்பட்டுள்ளது. ஜீவன் மெண்டிஸ் 4 ஓவர்களில் 24 ஓட்டத்தினை விட்டுக்கொடுத்து 3 விக்கெட்டினையும் மலிங்க ஒரு விக்கெட்டினையும் கைப்பற்றினர்.

போட்டியின் ஆட்ட நாயகனாக அஜந்த மெண்டிஸ் தெரிவு செய்யப்பட்டார்.

## இன்றைய போட்டிகள்

அவுஸ்திரேலியா - அயர்லாந்து
நேரம் : மாலை 4.00 மணி

இந்தியா - ஆப்கானிஸ்தான்
நேரம் : இரவு 8.00 மணி

## கரைத்துறைப்பற்றில்...

பாரஊர்திகள் மூலமும் எடுத்துவரப்பட்டு வற்றாப்பளை மகாவித்தியாலயத்தில் தங்கவைக்கப்பட்டு குடும்பப்பதிவுகள் மேற்கொள்ளப்பட்ட பின்னர் அன்றைய தினமே மீள்குடியமர்த்தப்படவுள்ளனர்.

இவர்களுக்குமூன்றுநாட்களுக்கானசமைத்த உணவும் உணவுப் பொதிகளும் ஒரு குடும்பத்திற்கு 2லீற்றர்மண்ணெண்ணெயும் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தால் வழங்கப்படவுள்ளது.

இதேவேளை முல்லைத்தீவு மாவட்ட கரைத்துறைப் பற்று பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட கொக்குத்தொடுவாய் மத்தி, கொக்குத் தொடுவாய் வடக்கு,கொக்குத் தொடுவாய் தெற்கு, கருநாட்டுக்கேணி, கொக்கிளாய் கிழக்கு, கொக்கிளாய் மேற்கு ஆகிய கிராமசேவையாளர் பிரிவைச் சேர்ந்த மக்களில் மீள்குடியேற்றத்திற்காக சொந்த இடத்திற்குச் செல்ல விரும்பும் நண்பர்கள், உறவினர்களுடன் தங்கியுள்ள குடும்பங்கள் நாளை மறுதினம் 21ஆம் திகதி காலை 9 மணிக்கு முல்லைத்தீவு செம்மலை மகா வித்தியாலயத்திற்கும்,

முள்ளிவாய்க்கால் கிழக்கு கிராம சேவையாளர் பிரிவைச் சேர்ந்த மக்களில் மீள்குடியேற்றத்திற்காக சொந்த இடத்திற்கு செல்ல விரும்பும் நண்பர்கள், உறவினர்களுடன் தங்கியுள்ளகுடும்பங்கள்மேற்குறிப்பிட்டதினத்தில் காலை 9 மணிக்கு முல்லைத்தீவு முள்ளிவாய்க்கால் அ.த.க.பாடசாலைக்கும் மீள்குடியேறக் கூடிய ஆயத்தங்களுடன் சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

அவர்கள் தாங்கள் இதுவரைகாலமும் தங்கியிருந்த கிராம சேவையாளர் பிரிவில் உள்ள கிராம சேவையாளரினால் உறுதிப்படுத்தப்பட்டு அப்பகுதி உதவி அரசாங்க அதிபரினால்மேலொப்பம் இடப்பட்ட விடுவிப்புக்கடிதம் சமர்ப்பித்து தங்கள் பதிவுகளை மேற்கொள்ளுமாறு அரச அதிபர் நா.வேதநாயகன் மேலும் தெரிவித்தார். (எ-3,11,267)

## ஜனாதிபதியின்...

றிசாட் பதியுதீன் ஏ.எல்.எம்.அதாவுல்லா மற்றும் ரவூப் ஹக்கீம் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

கிழக்கு மாகாண ஆளுநர் ரியர் அட்மிரல் மொஹான் விஜேவிக்கிரம, ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க ஆகியோரும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டதாக ஜனாதிபதி செயலகம் குறிப்பிடுகிறது. (எ-11)

## தீக்குளித்த...

மனையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். இருப்பினும் சிகிச்சை பலனின்றி நேற்று பிற்பகல் அவர் உயிரிழந்துள்ளார். (எ-11)

## குறைந்த கட்டணத்திலான பொதிகள் சேவைகள்

உங்கள் உறவினர்கள், நண்பர்களுக்கு உணவு, உடை, அலங்காரப் பொருட்கள், ஆவணங்கள், கடிதங்கள், CD ஆகியவற்றை அனுப்பலாம்.

சுவிஸ் - 1Kg - 600/-
கனடா - 1Kg - 700/-
லண்டன் - 1Kg - 600/-
5 நாட்களில் ஒப்படைக்கப்படும். 3 கிலோவுக்கு மேல் கட்டாயம் இருத்தல் வேண்டும்.

அவுஸ்திரேலியா - 1Kg - 1000/-
ஜேர்மனி - 1Kg - 1000/-
5 கிலோவிற்கு மேல் கட்டாயம் இருத்தல் வேண்டும்.

அத்துடன் ஏனைய ஐரோப்பிய மத்திய கிழக்கு நாடுகள், இந்தியா, சிங்கப்பூர், மலேசியா போன்ற நாடுகளுக்கும் குறைந்த கட்டணத்தில் எமது சேவைகளை பெற்றுக் கொள்ளலாம்.

வாடிக்கையாளரின் நன்மைகருதி உங்கள் பிரதேசங்களில் உங்களிடம் நன்மதிப்பை பெற்ற பின்வரும் வியாபார ஸ்தாபனங்களில் உங்கள் பொதிகளை ஒப்படைக்கலாம்.

நெல்லியடி - மருதம் கொம்னிக்கேசன் 0212263210
அச்சுவேலி - லிபேட்டி கொம்னிக்கேசன் 0217451245
பருத்தித்துறை - LANDMARK புத்தகசாலை 0750389869
வல்வெட்டித்துறை - V2 TRAVELS and TOURS 0212055044
கோண்டாவில் - பாரதி கொம் - 0212225148
உரும்பிராய் - அருள்விநாயகர் கொம்னிக்கேசன் 0212230623
சுன்னாகம் - TECH ELECTRONICS - 0214916263
சங்கானை - திருமகள் தொலைத்தொடர்பு - 0212250061
பண்டத்தரிப்பு - Funcity - 0217429390
வேலணை - SKR கொம்னிக்கேசன் - 0217390360
சாவகச்சேரி - S.நிலமறங்கன் - 0212270231
ஆனைக்கோட்டை - புவன மல்ரி சென்ரர் - 0779194171

மேற்குறிப்பிட்ட ஸ்தாபனங்கள் எமது ஸ்தாபனத்துடன் இணைந்து இவ் சேவையை செய்கின்றன. உங்கள் பொதிகளை அவர்களிடமும் ஒப்படைத்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

RAINBOW TRAVELS
இல 30/2 3ஆம் ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
Tel :- 0212219596

(சி-1086)

## அரசுடன் மு.கா.இணைவு...

கிழக்கு மாகாணத்தின் முதலமைச்சராக ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியைச் சேர்ந்த நஜீப் ஏ.மஜீத் பதவிப் பிரமாணம் செய்து கொண்டார்.

கடந்த சுமார் ஒரு வருட காலமாக ஆளும் கூட்டணிக்கும், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கும் இடையே நடந்த இழுபறியுடன் கூடிய பேச்சுவார்த்தைகளுக்கு பின்னர் நேற்று செவ்வாய்க்கிழமை அவரது தேர்வு முடிபானது.

இந்தப் பேச்சுவார்த்தைகளுக்கு பின்னர், கிழக்கு மாகாண முதலமைச்சராக நஜீப் ஏ.மஜீத் நேற்று செவ்வாய்கிழமை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ முன்னிலையில் பதவிப் பிரமாணம் செய்து கொண்டார்.

ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ வாசஸ் தலமான அலரி மாளிகையில் இந் நிகழ்வு நடைபெற்றது. மாகாண சபை முறைமை இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்ட 25 வருட காலத்தில் முதலாவது முஸ்லிம் முதலமைச்சர் என்ற பெருமையை இவர் பெறுகின்றார்.

நடைபெற்று முடிந்த கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் எந்தவொரு கட்சிக்கும் அறுதிப்பெரும்பான்மை இல்லாத நிலையில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஆதரவைப் பெற்று ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி மீண்டும் கிழக்கு மாகாண சபையில் ஆட்சி அமைக்கின்றது.

சிறிலங்காமுஸ்லிம்காங்கிரஸுக்கும்ஆளும்ஐக்கியமக்கள் சுதந்திர முன்னணிக்கும் இடையில் இடம்பெற்ற பேச்சுவார்த்தையில் ஏற்பட்ட இணக்கப்பாட்டின் அடிப்படையிலேயே நஜீப் ஏ.மஜீத் முதலமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார்.

நடைபெற்று முடிந்த கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் திருகோணமலை மாவட்டத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி வேட்பாளர் பட்டியலில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி சார்பில் வேட்பாளராக நிறுத்தப்பட்ட இவர் 11 ஆயிரத்து 726 விருப்பு வாக்குகளைப் பெற்று மாகாண சபைக்கு உறுப்பினராகத் தெரிவானார்.

நஜீப் ஏ.மஜீத் 1989-ம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் திருகோணமலை மாவட்டத்தில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் வேட்பாளராகப் போட்டியிட்டு அரசியலில் நேரடியாகப் பிரவேசித்தார்.எனினும், அந்தத் தேர்தலில் அவர் தோல்வியடைந்தார்.

ஆனால், 1994-ம் ஆண்டு உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிட்டு, கிண்ணியா பிரதேச சபையின் தலைவராக தேர்ந்தெடுக் கப்பட்டார். பின்னர் 1994, 2000 ஆகிய ஆண்டுகளில் இடம்பெற்ற நாடாளுமன்றத் தேர்தல்களில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்றார். இதையடுத்து 2000-ம் ஆண்டு தபால் தந்தி, தொலைத் தொடர்பு ஆகிய துறைகளின் துணை அமைச்சராக நியமிக்கப்பட்டார். எனினும் 2001-ம் ஆண்டு நாடாளு மன்றத் தேர்தலில் தோல்வியடைந்தார்.

மீண்டும் 2004-ம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் திருகோணமலை மாவட்டத்தில் போட்டியிட்டு நாடாளுமன்ற உறுப்பினராக தெரிவானார். 2007-ம் ஆண்டு கட்சியில் இடம்பெற்ற முரண்பாடுகள் காரணமாக வெளியேறி, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் இணைந்து கூட்டுறவுத்துறை அமைச்சராகவும், உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகளின் துணை அமைச்சர்ாகவும் நியமிக்கப்பட்டு 2010-ம் ஆண்டு வரை அந்தப் பொறுப்பில் இருந்தார். 2010-ம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டு தோல்வியைத் தழுவினார். (எ-11)

## பயிலுநர் பட்ட...

சட்டமா அதிபர் ஆலோசனை வழங்கியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். இதனால் பயிலுநர்களாக இணைத்துக் கொள்ளப்பட்ட அனைத்துப் பட்டதாரிகளுக்குமான பயிற்சிக் காலத்தை மேலும் 6 மாதங்கள் நீடிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதற்கான அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள்ளதாக அமைச்சின் செயலாளர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, பட்டதாரிப் பயிலுநர் நியமனத்தில் தாம் மட்டும் புறக்கணிக்கப்பட்டுள்ளதாகக் தெரிவித்து யாழ். மற்றும் கிளிநொச்சி மாவட்ட உயர் தேசிய டிப்ளோமா பட்டதாரிகளினால் உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதுடன் அவ் வழக்கு எதிர்வரும் மார்ச் 5 ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

அத்துடன்உயர்தேசியடிப்ளோமாபட்டதாரிகளுக்குயாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் மட்டும் பயிலுநர் நியமனம் வழங்காமை அடிப்படை மனித உரிமை மீறல் என உயர் நீதிமன்றம் சுட்டிக்காட்டி இருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

இவ்வழக்கில் சட்டமா அதிபர், பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சர், அமைச்சின் செயலாளர், பொதுச் சேவைஆணைக்குழுஉறுப்பினர்கள்,திறைசேரியின்செயலாளர் மற்றும் யாழ்.அரச அதிபர் ஆகியோர் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளமை சுட்டிக் காட்டத்தக்கது. (எ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று மட்டும்

விசா கெடுபிடி IELTS வங்கிப்பணம் சிக்கல்கள் எதுவுமின்றி

UK Australia New Zealand Canada America Malaysia

பட்டக்கல்விகளை வழங்கும் 7 பல்கலைக்கழகங்கள் பங்கேற்கும்

## பல்கலைக்கழக அனுமதியும் தொழில்வாய்ப்பும்

Certificate - Diploma - Foundation - Bachelors - Masters - PhD Programs

(சி-1089)

INTI INTERNATIONAL UNIVERSITY LAUREATE INTERNATIONAL UNIVERSITIES · SUNWAY UNIVERSITY · The University of Nottingham UNITED KINGDOM · CHINA · MALAYSIA · SEGi University College · Manipal INSPIRED BY LIFE · A·P·U · MAHSA UNIVERSITY COLLEGE



பல்கலைக்கழக பிரதிநிதிகளை நேரில் சந்தித்து உங்கள் வெளிநாட்டுக் கனவை நனவாக்க வாருங்கள்

பிரவேசம் இலவசம்! பிரவேசம் இலவசம்!

காலை 9 - மாலை 5 மணி
@ஞானம்ஸ் ஹொட்டேல், யாழ்ப்பாணம்

2012 ஒகஸ்ட்டில் 15 மாணவர்கள் பயணமாகியுள்ளனர்
நீங்களும் இணைந்துகொள்ள அழையுங்கள்!
அரிய சந்தாப்பத்தைத் தவறவிடாதீர்கள்

70% கட்டணக்கழிவு
வங்கிக்கடன் வசதி
25-50% புலமைப்பரிசில்கள்

Supported and Endorsed by:
Ministry of Higher Education, Malaysia
High Commission of Malaysia

EDUCATION

சிகரம் கல்வி வழிகாட்டி சேவை
இல.221, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்
021 300 80 60 நேரடி: 0773 616 798
Email: edusikaram@gmail.com Web: www.sikaram.lk


## அமெ.தூதுவர்...

தொடர்பில் கேட்டறிந்து கொண்டனர்.

பின்பு யாழ்ப்பாணம் வர்த்தகத் தொழில்துறை மன்றத்தில் தலைவர் பூரணச்சந்திரனைச் சந்தித்து கலந்துரையாடிய இந்தக் குழுவினர், குடாநாட்டில் உள்ள வேலையற்ற இளைஞர், யுவதிகளுக்கு தொழில் வாய்ப்புக்களை பெற்றுத் தருவதற்கான நடவடிக்கைகளை மேற் கொள்வதாகத் தெரிவித்ததோடு, தொழிற்துறையை முன்னேற்றுவதில் இங்குள்ளவர்கள் படும் கஷ்டங்களையும் கேட்டறிந்து கொண்டனர்.

இதன்பின்பு அமெரிக்கத் தூதுவர் உள்ளடங்கிய குழுவினர் யாழ். கோவில் வீதியில் உள்ள ஐ.ஓ.எம் தொண்டு நிறுவனத்திற்கு சென்று அங்குள்ள அதிகாரிகளைச் சந்தித்து கலந்துரையாடியதோடு, புனர்வாழ்வு பெற்ற முன்னாள் போராளிகளுக்கு உதவிகளையும் வழங்கினார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (எ-6)

## ஐ.நா. குழுவினர்...

அரச அதிபர் நாகலிங்கம் வேதநாயகம், முல்லைத்தீவு மாவட்ட இராணுவக் கட்டளைத் தளபதி என்.பி.ஆர்.மார்க் ஆகியோருடனும் கலந்துரையாடியுள்ளார்கள்.

மக்களின் மீள்குடியேற்றத் திட்டம் சம்பந்தமாகவும் கண்ணிவெடி அகற்றல் சம்பந்தமாகவும் இரு தரப்பினருடனும் பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றதாகத் தெரியவருகிறது. (எ-11,267)

## அழைத்தார் ஜனாதிபதி...

செயற்பட தயாராக இருந்ததாகக் குறிப்பிட்டுள்ள ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, எவ்வாறெனினும் இது தொடர்பாக இறுதித் தீர்மானங்கள் எடுக்கப்பட்டுவிட்டதாகத் தெரிவித்துள்ளார்.

கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புக்கு அடுத்தபடியாக கூடுதலான உறுப்பினர்களை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பெற்றுக் கொண்டமைக்கு ஜனாதிபதி தனது வாழ்த்துக்களைக் கூறியுள்ளார்.

இதற்குப் பதிலளித்த கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன்,

சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தல் இடம்பெற்றிருந்தால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே முதலிடம் பெற்றிருக்கும் எனச் சுட்டிக் காட்டியுள்ளார்.

இச்சந்திப்பின்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கிழக்கு மாகாண சபை அங்கத்தவர்களை அரசாங்கத்துடன் இணையுமாறு பல அ[illegible]துங்கள் பிரயோகிக்கப்பட்டதாக இரா.சம்பந்தன் ஜனாதிபதியிடம் கூறின[illegible].

சம்பூர் மற்றும் வலிகாமம் மீள்குடியேற்றம் பற்றியும், வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு படையினர் அல்லாத அதிகாரிகளை ஆளுநர்களாக நியமிப்பது பற்றியும் திருகோணமலை மற்றும் அம்பாறை மாவட்டங்களுக்கு தமிழ் பேசும் அதிகாரிகளை அரசாங்க அதிபர்களாக நியமனம் செய்வது பற்றியும் இதன்போது சம்பந்தன் வலியுறுத் தினார்.

இதற்கு பதிலளித்த ஜனாதிபதி, நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் பங்கெடுக்கும்படியும், அதில் இந்த விடயங்கள் பற்றி ஆராய்ந்து தீர்வுக்கு வரமுடியும் எனவும் கூறினார்.

இதற்குப் பதிலளித்த சம்பந்தன்,

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் பங்கெடுக்க மாட்டாது என்ற நிலைப்பாட்டை ஒருபோதும் எடுக்கவில்லை எனவும் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவுக்கு வருவதற்கு முன் ஏற் கெனவே ஒப்புக்கொண்டவற்றை செயற்படுத்த வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளார்.

ஜனாதிபதி இந்திய விஜயத்தை முடித்துக் கொண்டு வந்தபின் இவ்விடயங்கள் தொடர்பில் ஆராய்வதாகக் கூறியதை அடுத்து இரா.சம்பந்தனும் அதனை ஒப்புக் கொண்டார் எனத் தெரிவிக்கப்படுகிறது. (எ-11)

## மு.காங்கிரஸ் மீது...

சராக நஜீப் ஏ.மஜீத் பதவிப் பிரமாணம் ஏற்றதாக நாங்கள் அறிந்தோம்.

என்னமுறையில் ஆட்சி அமைக்கப் போகிறார்கள் என்று தெரியவில்லை. கூட்டாட்சி குறித்து முஸ்லிம் காங்கிரஸுடன் நாங்கள் பேசியிருந்தோம். அதற்கு அவர்கள் பதில் எதுவும் சொல்லவில்லை.

இந்நிலையில் திடீரென அவர்கள் அரசுடன் இணைந்துள்ளனர். அதுகுறித்துக் கூட எமக்கு அறிவிக்கவில்லையென சம்பந்தன் குற்றம் சாட்டினார். (எ-11)


# கிளிநொச்சி மண்ணில் ESOFT இதுவரை....

உங்களுக்குத் தெரியுமா ESOFT ?
The Leader in Professional ICT Education



கற்கை நெறிகளுக்காகத் தேர்ச்சி பெற்ற
சுமார் 160 ற்கும் மேற்பட்ட மாணவர்கள்
2011 ➡ கிளிநொச்சி மகாவித்தியாலயம்
2012 ➡ நாவலர் கலாச்சார மண்டபம் யாழ்ப்பாணம்

ஆகிய இடங்களில் சான்றிதழ் பெற்று
தற்போது
பல்வேறு தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுள்ளனர்

நீங்களும் தற்போது, ESOFT இன்
நிறுவுனர் Dr. Dayan , பொது முகாமையாளர் Mr. Nishan
ஆகியோரின் நேரடி வழிகாட்டலில்.....
சர்வதேச தரத்திலான சான்றிதழைப் பெற இன்றே இணையுங்கள்!

(சி-1082)

NEW BATCHES
19th Sep. 2012
21st Sep. 2012 @ 9:00am
24th Sep. 2012 2:00pm

தேர்ந்தெடுக்கப்பட்ட விரிவுரையாளர் குழாம்

* Densiya * Athavan * Dushy
* Gajanan * Thiviyan * Sharangan
* Joy * Prasath * Tennyson

நேரடியாக தலைமையகத்துடன் இணைக்கப்பட்ட
12 கிளைகளுள் தற்போது கிளிநொச்சியும்

ESOFT The Leader in Professional ICT Education
ESOFT Computer Studies
01, Kanagapuram Rd, [illegible]nochchi
Tel : 021 228 5444 web: www.esoft.lk



DIPLOMA IN ENGLISH & SINHALA CLASSES

ஆங்கில, சிங்கள வகுப்புக்கள்

- பாடசாலை மாணவர்கள்,
- A/L பரீட்சை முடித்தவர்கள்,
- தொழில் புரிபவர்கள்,
- அரசமொழி (சிங்களம்) பரீட்சைக்கு தோற்ற இருப்பவர்கள்

பயிற்சிகள்

அடிப்படை விளக்கம், சிறந்த உச்சரிப்புப் பயிற்சி, வாசிப்புப் பயிற்சி, பேச்சுப் பயிற்சி, எழுத்துப் பயிற்சி, கலந்துரையாடல். பரீட்சை முடிவுகளின் பின்னர் சான்றிதழ்கள் வழங்கப்படும். (தொழில் புரிபவர்களுக்கு: காலை, மாலை : 6.30 to 8.00)

அனுபவம் வாய்ந்த ஆசிரியர்களால் கற்பிக்கப்படும்

North Lead Educational Center
(No:328, Stanly Road, Jaffna. Tel: 021-222 4459, 0772533390, ஆரியகுளம் சந்திக்கு அருகில்)


## மரண அறிவித்தல்

### சரவணமுத்து கதிரவேலு (கந்தசாமி)

மண்டைதீவு 2-ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட சரவணமுத்து கதிரவேலு (கந்தசாமி) 18.09.2012 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சரவணமுத்து - குழந்தை தம்பதிகளின் அருமை மகனும், காலஞ்சென்றவர்களான முத்துத்தம்பி - செல்லமுத்து தம்பதிகளின் அன்பு மருமகனும் இலட்சுமிப்பிள்ளையின் பாசமிகு கணவரும், பொன்னுத்துரை, சின்னத்துரை, சிதம்பரப்பிள்ளை, சின்னத்தங்கம், தில்லைவனம், வள்ளியம்மை, திருமேனி ஆகியோரின் அன்புச் சகோதரனும், செல்லம்மா, சரஸ்வதி, செல்லம்மா, கருப்பையா, கேசவகுமார், சுப்பிரமணியம், சிவகாமி, இளையதம்பி, இராசரத்தினம், ஆகியோரின் அன்பு மைத்துனரும் அருமைத் திருநாயகம், (ரங்கன்), ஸ்ரீகாந்தராசா, ஜனந்தகுமார், நந்தகுமார், வசந்தகுமார், மேனகா ஆகியோரின் பாசமிகு தந்தையும், அம்பிகா, ரதி, சுமதி, மதி, பிறேமா, செல்வம் ஆகியோரின் அன்பு மாமனாரும் தங்கம், தர்சி, ஜனு, நிரோஷன், நிரோஜினி, ரவீந்திரன், கயந்தி, சசிந்தன், லிவின்ஸன்ட், டானியல், துஸ்சியா, சானுஸன், நிருயன், சர்மிலா, கிசாந்தன், ருசாந்தன் ஆகியோரின் அன்புப் பேரனும் சியாளினியின் அன்புப் பூட்டனாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 19.09.2012 புதன்கிழமை (இன்று) மதியம் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக மண்டைதீவு பொது மயானத்திற்கு பூதவுடல் எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மண்டைதீவு (சி-1087) தகவல்: பிள்ளைகள்

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் [illegible] முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 19.09.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org